597

உமா

ஆசிரியர்: ஜி. உமாபதி

8 - FEB 1957

UMA

4 அணா

FEB. 57 மாசி

சரும வியாதிகளுக்கு
சிராய்ப்புகள்,
வெட்டுகள், படை,
சொரி, கரப்பான்,
கட்டிகள், கடி,
விஷக்கடி, சதைத்
தடிப்பு, முகப்பரு
போன்ற இதர சரும
உபாதைகளுக்கு
எக்ஸிமா
கட்டிகள்
பருக்கள்
வெட்டுக்காயம்.
புண்கள்
Germex
CHLOROPHYLL
ஜெர்மெக்ஸ்
குளோரோபில் கலந்தது
லிட்டில்ஸ் ஓரியண்டல் பாம் & பார்மசூடிகல்ஸ் லிட். மதராஸ்-1

இனம்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
6 - FEB 1957
MADRAS

இதோ—
மீண்டும் "ஓ. கே." வனஸ்பதி தயாரிப்பாளர்களே, முதன் முதலாக, ஒரு புதிய, உபயோகமுள்ள பரிசுத் திட்டத்தை, வாங்குபவர்களுக்காக ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

வனஸ்பதி கெட்டாமல், எப்பொழுதும் புதுமையாகவும், சுகாதாரமாகவும் இருக்க முதலில் லீவர்லிட் டின்களை ஏற்படுத்தியது "ஓ. கே." வனஸ்பதி தான்.

"ஓ. கே." 1, 2, 5, 10 பவுண்டு வனஸ்பதி டின்களிலுள்ள பரிசுக் கூப்பன்களைச் சேகரியுங்கள். அவற்றிற்கு மாற்றாக, உங்களுக்கு அருகிலுள்ள "ஓ. கே." வியாபாரியிடமிருந்து, உங்களுக்குப் பிடித்தமான ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பாத்திரங்களைப் பரிசாகப் பெறுங்கள்.

OK ஓ.கே வனஸ்பதி

ஒவ்வொரு அவுன்ஸிலும் 700 I. U. வைட்டமின் 'A' அடங்கியது.

இந்த "விசேஷ வெகுமதி" பற்றி மேலும் விவரங்கள் அறிய, உங்கள் "ஓ. கே." வியாபாரியிடமிருந்து படங்களுடன் கூடிய 'போல்டரை' வாங்கி பாருங்கள். "ஓ. கே." வனஸ்பதி வாங்குங்கள். 'இனம்' பரிசையும் பெறுங்கள்

தி ஈஸ்ட் ஏஷியாடிக் கம்பெனி (இந்தியா) பிரைவேட் லிட், மதராஸ்-1.

எனது இனப்பெயர்—தமிழன்
எனது கொள்கை—சமதர்மம்
எனது தாய்நாடு — தமிழ்நாடு
எனது குடும்பம்—இந்திய சமுதாயம்
எனது கோரிக்கை—தமிழரசு
எனது பண்பு—தெய்வீகக் கலாசாரம்
எனது சமரசநெறி—சர்வதேச
சகோதரத்துவம்

துணை ஆசிரியர்:
பூவை எஸ். ஆறுமுகம்

செடி 4 மலர் 10	பிப்ரவரி, 57	துன்முகி ஹூ மாசி-மீ

பொருளடக்கம்

நாட்டின் நலன் கருதுவோருக்கு (தலையங்கம்) 5
'கல்வி சிறந்த தமிழ் நாடு!' 8
உங்களுடன் ஒரு கணம் 9
மாநில மாநாட்டுச் செய்திப் படங்கள் 12
எங்கள் இதயங்கள் பேசுகின்றன 17
கலைக் கண்கள் (போட்டிக் கதை) 19
வாடா விளக்கு (தொடர்கதை) 24
சிறையிருக்க நீதியுண்டோ? 35
தேவை – தியாகிகள்! 36
நாணயத்தின் விலை 42
பயிற்சி மொழி தமிழ்! 46
அத்தானும் நித்திரையும்! 47
தங்கச் சங்கிலி 50
நிலவின் வீக்கம் 51
அரு. இராமநாதன் (பேட்டி) 52
அன்னை மொழி நீயன்றோ? 56
தமிழ் நல்லமுதே! (கவிதை) 57
வழிபடு தெய்வம் 62
துயிலினி 65
ஜாதி ரோஜா (தொடர் கதை) 69
திரை உலகம் 78
நாடக உலகம் 79

197219

'உமா'வில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே. சம்பவங்களும் கற்பனையே.

நாட்டின் நலன் கருதுவோருக்கு...

வரும் தேர்தலிலே தமிழரசுக் கழகம், தமிழ் நாடு காங்கிரஸிற்கு ஆதரவு தர இயலாதென்றும், தேசிய முற்போக்குச் சக்தி கொண்ட எதிர்க்கட்சி அமையும் சூழ்நிலை உருவானால், அப்போது தகுதியும் திறமையும் பார்த்து ஆதரவு கொடுக்கப் படுமென்றும், திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆதரிக்க முடியாதென்றும், அண்மையில் முழு வெற்றியுடன் நடந்து முடிந்த சேலம் மாநில மாநாட்டில் முடிவெடுத்ததை அறியாதவர்கள் இருக்க முடியாது.

ஆனால், காங்கிரஸ் செல்வாக்கு பெற்றிருந்த கடந்த காலத்தில் நூற்றுக்கு எண்பது சத விகிதம் ஓட்டுக்களை அது பெற்று, இருபது சத விகித ஓட்டுக்களை மற்ற கட்சிகளும் உதிரிகளும் சேர்ந்து பங்கிட்டுக் கொண்டன. பின்னே, காங்கிரஸின் தூய்மை தேய ஆரம்பித்த நேரத்தில், காங்கிரஸ்காரர்களுக்கு அறுபது சத விகித ஓட்டுக்களும், கொள்கையும் லட்சியமும் இல்லாதவர்களுக்கு நாற்பது சத விகித ஓட்டுக்களும் கிடைத்தன. இதன் பிறகு, நாற்பது சதவிகித ஓட்டுக்களை காங்கிரசும், மீதமுள்ள அறுபது சதவிகித ஓட்டுக்களை நாட்டின்மீது நல்லெண்ணம் இல்லாதவர்களும் பதவிகளை வியாபாரக் கருவிகளாக மாற்றி யமைத்த சுயநலவாதிகளும் பிரித்துக் கொண்டார்கள். இன்றைய காங்கிரஸ் ஸ்தாபனம் அடியோடு செல்வாக்கு இழந்து, அது இருக்கும் இடம் தெரியாமல் மறைந்து போய்க் கொண்டிருக்கின்ற சூழ்நிலையிலே, காங்கிரஸ் முப்பதிலிருந்து நாற்பது சதவிகித ஓட்டுக்களையாவது பெற்று, வெற்றியடைந்து மீண்டும் அவர்களிடத்திலே பதவி தஞ்சம் அடைந்து விடுமோயென்று அஞ்சுகின்றார்கள் அறிஞர் பெருமக்கள்.

அரசியல் வாதிகளைவிட, இப்பொழுது வாக்காளர்களின் நிலை என்ன என்பதை எண்ணிப் பார்க்கும் போது, அவர்கள் உள்ளங்களிலெல்லாம் குழப்ப நிலைதான் ஏற்பட்டிருக்கிறது. காங்கிரசுக்கு வாக்குக் கொடுத்த பிறகு, இத்தனை ஆண்டுகளாக வியாபாரிகளை திருடர்களாக எண்ணி மரியாதைக் குறைவாக நடத்தியும், வரிக்கு மேல் வரி போட்டு வசூலித்த அந்தப் பணத்தை அநியாயச் செலவு செய்தும் வந்திருக்கிறார்கள் பதவியாளர்கள். மேற்படி வரிகளைக் கொடுக்க முடியாமல் திணறிய குடும்பங்கள் வீதியிலேயும், முன்னரே தேய்ந்து நலிந்த குடும்பங்கள் தெருவிலேயும் அவதிப்பட்ட வேதனையையும் நாம் கண்டோம். தொழிலாளர்களின் நிலை கொஞ்சமும் உயரவில்லை. தொந்தி பெருத்தவர்களே காங்கிரஸ் மகாசபையில் இடம் பிடித்துக் கொண்டார்கள். அது மட்டுமா? நேற்று வரை, காங்கிரஸ் கட்சியை மிகக் கீழ்த்தரமாகப் பேசியும் எழுதியும் வந்த

வர்களே இன்று காங்கிரஸ் அபேட்சகர்களாக உருமாறியிருப்பதையும், இன்று நாம் நேருக்கு நேர் பார்த்துக்கொண்டிருக்கிறோம். கலாசாரத்தையும் தெய்வப் பண்பையும் காப்பாற்றிய காந்தியடிகளின் புனிதமான காங்கிரஸ் சபையிலே இப்பொழுது அனுசாரக் கும்பல்களுக்கு அழைப்பு! அது போதாதென்று, உலக உத்தமர் மறைந்த 'சிரார்த்த தினத்'தன்று கவர்னரின் ராஜபவனத்திலே களியாட்டம்! இப்படி இன்னும் பல பண்பற்ற நிகழ்ச்சிகளை உருவாக்கி வரும் காங்கிரசுக்கு இனியும் வோட்டுப் போடுவதா என்று அஞ்சுகிறுர்கள் பொதுமக்கள்.

கம்யூனிஸ்டுத் தோழர்களின் கொள்கைகள் இனி இந்த நாட்டிலே விலை போகாதென்று தெரிந்திருந்தும், குறிப்பிட்ட இடங்களில் அவர்கள் முன்னேற்றத்தோடு பல தொழிற் சங்கங்களுடன் தொடர்பு கொண்டு, இவர்களின் வாழ்க்கையின் உயர்வுக்குப் பாடுபடுகிறுர்களே தவிர, நாட்டிற்குப் புதிய பொதுவான லட்சிய சக்தியைக் கொண்டுவரக் கூடிய பலம் இல்லாதவர்ளாக ஆகிவிட்டார்கள்.

சோஷலிஸ்ட் நண்பர்களோ ஆரம்ப காலம் முதல் ஓர் அறுதியிட்ட கொள்கை யிருந்தும், அதை நடைமுறைக்குக் கொண்டுவரப் பாடுபடாமல், அப்போதைக்கப்போது தலைமை மாறுவதும், அபிப்பிராய பேதங்கள் உருவாவதும், சேருவதும் உடைவதுமாகவே இருந்து வருகிறுர்கள். இதே அவல நிலைதான் பிரஜா—சோஷலிஸ்டுக்கும்!

திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் அத்தனை பேர்களும் தமிழர்கள். மொழிவழி மாகாணம் அமைந்த பிறகு, அவர்கள் கோருதுவதுபோல இனி அப்படி ஒரு திராவிட நாடு அமைவதென்பது கனவிலும் நடக்க முடியாத செயலேயாகும்!

தேர்தலிலே வெற்றி பெற்று மந்திரிசபை அமைப்பதும், திராவிட நாட்டுப் பிரச்சினையைக் கொண்டு வருவதும், அதை மத்திய ஆட்சி ஒப்புக் கொள்ளாமல் மந்திரிசபையைக் கலைத்துப் பிறகு அவர்கள் தேர்தலிலே வெற்றி பெற்று அதே பிரச்னைக்கு மீண்டும் ராஜிநாமா செய்து, பின்னே நடத்தும் போராட்டத்திலே ஆயிரக்கணக்கானவர்கள் உயிர் துறப்பதும், அதற்குப் பிறகு நாடே சுடுகாடு போன்று காட்சியளிக்கும் என்ற அவர்களின் இந்தக் கற்பனையும் 'கற்பனை'யாகவே இருக்கலாம்.

ஐக்கிய இந்தியாவிலிருந்து துண்டாடப் பாடுபடுவதும், தமிழினத்தை ஆரியர்கள் – திராவிடர்கள் என்று பிரித்துப் பேசுவதும், கலாசாரத்தை வளர்க்கும் கலைப் பொக்கிஷங்களான தமிழ் இலக்கியங்களைக் குறைத்துப் பேசுவதுமான சூழ்நிலை இருந்து வரும் வரையில் இவர்களுக்குத் தமிழ்நாடு என்றுமே மதிப்பளிக்காது. அதனுல்தான் தேர்தல் பிரகடனத்தை இவர்கள் இன்னமும் உருவாக்காமல் இருக்கிறுர்கள் போலும்!

சுயேச்சைகளோ, உள்ளே சென்றுல் சுய இச்சைக்காகத்தான் பதவியில் அமர்வார்களே தவிர, பாட்டாளிகளின் துயரத்தையோ, அவர்கள் பரதவிக்கும் அவலநிலையையோ அவர்களால் அறிந்து கொள்ளவும் முடியாது; தெரிந்து கொள்ளவும் இஷ்டப்படமாட்டார்கள்.

அந்தத் தொகுதியில் அங்குள்ள ஏழைமக்களின் எஜமானர்களாக இருக்கும் காரணத்தினுல், அவர்கள் இவர்களுக்குப் பயந்து ஓட்டு அளித்து விடுகின்றனர். பின்னே என்ன செய்வார்கள் அந்த வாயில்லாப் பூச்சிகள்? வாழவேண்டுமே? இல்லாவிட்டால், இல்லாததும் பொல்லாததுமான பல குற்றங்களைச் செய்ததாதப் பழி சுமத்தி, இருட் சிறையிலே தள்ளிவிடுவார்களே என்ற அச்சம் இந்த ஏழ்மை நெஞ்சம் கொண்ட பஞ்சைகளுக்கு.

நாட்டின் மீது உண்மையான பற்றுக்கொண்ட அபேட்சகர்களே! உங்கள் தொகுதியில் உங்களுக்குத் தகுதி இருந்தும், திறமை இல்லையென்ருல், விலகிவிடுங்கள். திறமை இருந்து தகுதி இல்லையென்ருலும் விலகி விடுங்கள். திறமையும் தகுதியும் இருந்து, மக்கள் மத்தியிலே செல்வாக்கு இல்லை யென்ருல், விலகி விடுங்கள்! ஒரு தொகுதியில் உங்களில் அத்தனை பேர்களுமே நின்று, தோல்வி மேற்கொள்ளாமல், நீங்களே ஒற்றுமையுடன் ஒன்று சேர்ந்து, உங்களிலே ஒருவரைத் தேர்ந்தெடுத்து உழைத்துப் பாருங்கள்! தேர்தல் பிரசாரத்திலே நேருஜி என்ன, காந்திஜியே உயிர் பெற்று வந்தாலும், இன்றையக் காங்கிரஸ் வெற்றிபெறவே முடியாது! எங்கே செய்யப் போகிறீர்கள்?

இந்தத் தேசத்தின் தலையெழுத்தை நிர்ணயிக்கப் போகும் வாக்காளர்களே! இனப்பற்று கொண்டவர்களே!

தேசீய இதயம் கொண்டவர்கள்—காங்கிரஸோ, சோஷலிஸ்டோ, பிரஜா சோஷலிஸ்டோ, கம்யூனிஸ்டோ, சீர்திருத்தக் காங்கிரஸோ, சுயநலம் கருதாத சுயேச்சையோ – இவர்கள் நாட்டுப்பற்றுக் கொண்டு உழைக்கும் உண்மையான தேசபக்தர்களா, பண்புடன் கூடிய கலாசார வாதிகளா, அறம் தவருமல் அன்போடு நடந்து, பின்னே தமிழ் இனத்தைக் காட்டி கொடுக்க மாட்டார்களா என்பதை நன்ருக ஆராய்ச்சி செய்து ஓட்டுப் போடுங்கள். இதுவே நமது வேண்டுகோள்.

இப்படி யோசனைகள் சொல்லத் தகுதி படைத்தது தமிழரசுக் கழகம் ஒன்றேதான் என்பதை இன உணர்வு கொண்ட எவரும் மறக்க முடியாது.

அபேட்சகராக சின்ன அண்ணுமலை

இருபது ஆண்டுகளாக காங்கிரஸ் மகாசபை நடத்திய எல்லாப் போராட்டங்களிலும் கலந்து கொண்டதோடு, இதுவரை எந்தப் பதவிக்கும் போகாமல், பண்பையும் அன்பையும் அறத்தையும் வளர்க்க தமிழரசுக் கழகத்தில் பணியாற்றிவரும் திரு சின்ன அண்ணுமலை அவர்கள் தமிழ் நாடு சட்டசபைக்கு அங்கத்தினராகப் போட்டியிடுகின்ருர். அன்னுரை ஆதரிக்குமாறு வேண்டுகிருேம்.

"கல்வி சிறந்த தமிழ் நாடு!"

தமிழன்னையின் தவச் செல்வர் பாரதியின் கனவு இன்று நனவாகி விட்டதென்றுதான் சொல்ல வேண்டும்.

"வீடுதோறும் கலையின் விளக்கம்
வீதிதோறும் இரண்டொரு பள்ளி
நாடுமுற்றிலும் உள்ளன வூர்கள்
நகர்களெங்கும் பலபல பள்ளி!"

அறிவுத் தலைநகர் என்று நேருஜியினால் போற்றப்பட்ட நம் தமிழ் நாட்டின் தலைநகரான சென்னையிலே பல்கலைக் கழக நூற்றாண்டு விழா வெகு சிறப்பாகக் கொண்டாடப் பட்டது. சென்னைப் பல்கலைக் கழகம் தோற்றுவித்த பல தரப்பட்ட கல்வித் துறைகளிலிருந்து பல துறைப்பட்ட மாணவர்கள் பட்டம் பெற்று, இன்று உலகம் போற்றும் அளவுக்குப் பேரும் புகழும் அடைந்திருக்கின்றனர் என்பதையும் நாம் நினைவுபடுத்திப் பெருமை யடைகின்றோம்.

தமிழகத்தின் தனிச் சிறப்புக்களிலே ஒன்று நம்முடைய தமிழ்ப் பண்பு. இதன் அடிப்படையில் மெய்வழி செல்லும் உறுதியும், பரந்த நோக்கமும் மாணவர்–மாணவிகளிடையே உருவாக்கப் பட வேண்டியது நம் பல்கலைக் கழகத்தின் முக்கிய கடமையாகும். 'ஆராய்ச்சிகளில் முனைந்து, அறிவாளிகளை உற்பத்தி செய்தால் மட்டும் போதாது; நீதியும் அமைதியும் நிலவும் ஒரு சூழலிலே சகோதர உணர்ச்சியோடு வாழ்வதற்கான பண்பாட்டினையும் பல்கலைக் கழகங்கள் ஊட்டவேண்டும்' என்று குறிப்பிட்ட மைசூர் கவர்னரின் அறிவுரையையும் மறந்து விடலாகாது.

தமிழ் ஆட்சிமொழியாகி யிருக்கின்ற இந்தப் பொன்னான வேளையிலே, தமிழே போதனை மொழியாகவும் விரைவிலேயே ஆக்கப் படுவதற்கான வழிவகைகளைச் செய்ய வேண்டுவதும் பல்கலைக் கழகத்தின் அவசர அலுவலாகும். தமிழ் நாட்டின் சரித்திரத்தில் கல்வியின் பணி அப்பொழுதுதான் முழுமை பெற முடியும்; 'எல்லாம் தமிழ்!' என்ற உன்னதமான நிலையும் அப்போதுதான் உதயமாகும்!

தமிழ் வளர்ச்சிக் கழகம்

தமிழ்த் திருநாளாகக் கொண்டாடப்பட்ட இந்தப் பொங்கல் விழாவன்று மற்றுமொரு தமிழ் இலக்கிய விழாவும் சென்னையில் நடை பெற்றது.

தமிழ் வளர்ச்சிக் கழகம் சென்ற சில ஆண்டுகளாகத் தமிழின் வளர்ச்சிக்குப் புரிந்து வரும் தொண்டினைத் தமிழ் கூறும் நல்லுலகம் நன்கு அறியும். அதன் பணிகளில் குறிப்பிடத் தக்கவை, கலைக் களஞ்சியம் தயாரிப்பதும் சிறந்த தமிழ் நூல்களுக்குப் பரிசு வழங்குவதும் ஆகும். ஒவ்வொரு பிரிவிலும் சிறந்ததற்கு ஐநூறு ரூபாய்க்குப் பதிலாக இனி ஆயிர ரூபாய் வழங்குவதாகவும் நிதி அமைச்சர் தெரிவித்திருக்கின்றார். இதுவரை பன்னிரண்டு பிரிவுகளாக அமைந்த இத்திட்டம், இனிமேல் இருபது பிரிவுகளாக விரியும் என்றும் அறிவிக்கப் பட்டது.

இம்முறை பரிசு பெற்ற கீழ்க்கண்ட ஆசிரியர்களைப் பாராட்டுகின்றோம்; தமிழ் வளர்ச்சிக் கழகத்தினருக்கும் நம் பாராட்டுக்கள் உரியவை.

திரு 'அகிலன்' (நாவல்), திரு ஏ. சுந்தரமூர்த்தி (வானவியல்), திரு கோ. ம. இராமசந்திரச் செட்டியார் (வரலாறு), திரு டாக்டர் வாதராசனார் (கட்டுரை), திரு சோ. சிவபாத சுந்தரம் (ரசாயனம்) திரு அழ. வள்ளியப்பா; திரு எம். எல். சபரிராஜன் (சிறுவர் இலக்கியம்).

மற்றும் ஓர் உண்ணுவிரதம்!

சென்னை மாநிலத்திற்குத் 'தமிழ் நாடு' என்ற பெயரிட வேண்டுமென வேள்வி நடத்தி உயிர்த் தியாகம் செய்த திரு சங்கரலிங்கனரின் புனிதப் பெயரைத் தமிழகம் என்றென்றும் நினைவு படுத்திக் கொள்ளும் என்பதில் சந்தேகமில்லை. இந்தத் தியாகியின் பலியை ஏற்றுங்கூட இன்னமும் நம் சென்னை ஆட்சியாளர்களுக்குக் கண் திறக்கவில்லை. அன்னரின் கோரிக்கை வீணுகிவிட்டது கண்டு மனம் பொறுக்காத மற்ெருரு தமிழன் பரும் உண்ணுவிரத நோன்பைத் தொடங்கியிருக்கின்ருர்.

''சங்காலிங்கனரின் ஆத்மா கேட்கும் கோரிக்கை இது,'' என்ற உருக்கமான விண்ணப்பத்தினை ஆட்சியாளர்களின் முன்னே வைத்து, உண்ணுவிரதம் இருந்து வரும் திரு சங்கு கணேசன் அவர்கள் தமிழ் மக்கள் அனைவருடைய கவனத்தையும் தன்வயப் படுத்திக் கொண்டிருக்கின்ருர்.

சாது மிரண்டால் காடு கொள்ளாது என்பார்களே, அந்நிலையை உருவாக்காமல், இந்த இரண்டாவது உயிர்ப் பலியையாவது தடுத்து நிறுத்தி, 'தமிழ் நாடு' எனறு பெயர் சூட்டவேண்டியது அரசினரின் கடமையல்லவா?

தமிழ்த்தாய் தவமிருந்து ஈன்ற தியாகப் புதல்வர்களின் எண்ணிக்கை குறைவுகாண நாம் அனுமதிக்கக் கூடாது. ஆகவே, திரு சங்கு கணேசன் அவர்கள் தம்முடைய நோன்பை நிறுததிவிட்டு, நேரிடையான போராட்டததில் இறங்குவதுதான் நல்ல வழி. சென்னை ராஜ்யத்திற்கு 'தமிழ் நாடு' என்ற பெயர் இடப்படாத தன் விளைவை அண்டி வந்து கொண்டிருக்கும் தேர்தலிலே ஆட்சியாளர்கள் நேருக்கு நேர் காணத்தானே போகிருர்கள்!

உங்களுடன் ஒரு கணம்...

தமிழரசுக் கழக மூன்ருவது மாநில மாநாடு பற்றிய செய்திகள், புகைப் படங்களைத் தாங்கிக் கொண்டு இவ்விதழ் 'உமா' வெளி வந்திருக்கிறது. முதல் தேதி பிறந்தவுடன் 'உமா'வை எதிர் பார்க்கும் தமிழன்பர்களின் ஆர்வத்திற்கு நிறைவின்பம் தரும் வகையில் இந்த இதழ் அமைந்திருக்கிற தென்பதை நீங்கள் புரிந்து கொண்டிருப்பீர்கள். இனி வரும் இதழ்கள் வழக்கம்போலவே முதல் தேதியன்றே உங்கட்குக் கிடைக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகின்ரும்.

தமிழ்க் குரல் புறப்படும் சகல பகுதிகளிலிருந்தும் மலரைப் பாராட்டிக் கடிதங்கள் வழங்கினர்கள் தமிழன்பர்கள். அவர்களுக்கு எங்களது பணிவன்பு கலந்த நன்றி உரியது. பொங்கல் வாழ்த்துக்கள் அனுப்பிய விற்பனையாளர்கள், விளம்பரதாரர்கள், எழுத்தாளர்கள், ஓவியர்கள் எல்லோருக்கும் நாங்கள் நன்றி கூறுகிரும்.

ஓவியர் திரு கே. மாதவன் அவர்களின் உயிரோவியத்தை கதைக்குப் பகைப்புலனுக்கி, நான்கைந்து பக்கங்களில் அடங்கும்படியாகக் கதை எழுதியனுப்புங்கள். தேர்வு பெறும் ஒவ்வொரு கதைக்கும் அலுவலகம் தீர்மானிக்கும் ரீதியில் சம்மானம் வழங்கப்படும். முடிவு நாள்: 28-2-57.

இரண்டு தொடர் கதைகளுடன் மூன்ருவது தொடர் கதை விளம்பரத்தையும் மலரில் கண்டீர்கள். மேற்படி தொடர் கதை பற்றிய பிற விவரங்களை விரைவில் அறிவீர்கள். வருகிற மே இதழுடன் 'உமா'விற்கு நான்காண்டுகள் நிறைவு பெறுகின்றன. 'உமா'விற்குரித்தான தனித்தன்மையில் உருவான புத்தம் புதிய பகுதிகளையும் ஐந்தாம் ஆண்டு மலரில் அறிமுகம் செய்விக்கத் திட்டமிட்டிருக்கிரும். வணக்கம். ஆசிரியர்.

For

QUALITY DIAMONDS

EXQUISITE JEWELLERY

ARTISTIC SILVER WARES

M/s. T. GOVINDARAJULU NAIDU

DIAMOND MERCHANTS & JEWELLERS

28, NETAJI ROAD :: MADRAS-1.

★

Phone: 4818 **T. G. N.** Grams: "ALANKAR"

அன்புத் தம்பி !

சேலம் மாநில மாநாட்டிற்கு நீ வந்ததோடு, உன்னுடைய நண்பர்களை யெல்லாம் அழைத்துக் கொண்டு வந்தாய். ஆனாலும், நம் மீது அன்பு கொண்டவர்கள் அத்தனை பேரையும் உன்னால் அழைத்து வந்திருக்க முடியாது. அந்த உன் அன்புச் சகோதரர்களுக்கும் பயன்பட வேண்டுமென்று தான் இங்கே சில விவரங்களை நான் எழுதுகின்றேன்.

தமிழகமே கண்டும் கேட்டும் இராத புதுமை அது. மாநாட்டுப் பந்தலிலே வெள்ளம் போன்ற தமிழர் கூட்டம். கொள்கை புரியாமல் பின்பற்றும் பாமரர்கள் கூட்டமல்ல; பகுத்தறிவும் பண்பும் அன்பும் கொண்ட அருமைத் தமிழ் வீரர்கள் கூட்டம்.

இலக்கிய மாநாடு நடந்த அன்று காலை நாம் கண்ட ஊர்வலக் காட்சியை வருணிக்க எனக்கு வார்த்தைகள் தெரியாது, தம்பி! வெற்றியடைவதையே அடக்கத்தோடு ஏற்றுக் கொள்ளக் கூடிய பண்பு படைத்தவர்கள் நாம். கண்ணுக் கெட்டிய தூரம் ஊர்வலத்தின் ஜன சமுத்திரத்தையும் அதன் நடுவே அழகு ரதத்திலே நமது மாபெரும் தலைவர் ம. பொ. சி. அவர்களும் வரவேற்புக் குழுத் தலைவர் எம். ஏ. வேணு அவர்களும் இலக்கிய மாநாட்டுத் தலை

நடன விருந்தளித்த
திருமதி ராஜசுலோசனா

இசை விருந்தளித்த
திருமதி குருவாயூர் பொன்னம்மாள்

ஜி. உமாபதி

வர் ம. ரா. போ. குருசாமி அவர்களும், தமிழரசுக் கழகத் தளபதி திரு கவி கா. மு. ஷெரீப் அவர்களும் வீற்றிருக்க, அதன் முன்னே மெய்க்காப்பாளர்களாக நானும் அண்ணு நாகராஜனும் அணி தேர்ப் புரவி அழைத்துச் சென்ற அழகான ரதத்திலே பவனி வந்தோம். சேலம் இதுவரைக் கண்டிராத புதுமைக் காட்சி அது! வெள்ளம் போன்ற தமிழ் வீரர்களின் கூட்டத்தையும் அணி வகுத்து வலம் வந்த தமிழினத்தின் படையையும் கண்ட நானும் கலைஞர் நாகராஜன் அவர்களும் உணர்ச்சிப் பெருக்கினுல் கோஷமிட்டுக் கொண்டே வந்தோம். நீதான் உடனிருந்து பார்த்தாயே! அந்த கோஷத்திலே யாரையாவது ஒழிக என்று சொல்லியிருப்போமா? எதையாவது அழிந்து போகட்டும் என்று கூறினதுண்டா? இரண்டே இரண்டு இதய கீதங்கள்தான் தெரியும் நமக்கு. ஒன்று தமிழ் வாழ்க! அந்தத் தமிழைத் தேய்ந்து போகாமல் மீண்டும் அரியாசனத்தில் ஏற்றப் பாடுபட்டுவரும் நடமாடும் தமிழரசுக் கழகமாகிய தலைவர் ம. பொ. சி. வாழ்க என்பது இரண்டாவது. இவை இரண்டும்தான் நமது ஜீவகீதங்கள்!

பிறகு, ஊர்வலம் முடிந்து மாநாட்டு வாயிலிலே நுழையும் போது என்ன ஆச்சரியம்! ஊர்வலத்தில் கலந்து கொண்ட அத்தனை ஜனத்திரளுக்கும் இடம் கிடைக்காமல், அதற்கு முன்னேயே பிரம்மாண்டமான மாநாட்டுப் பந்தலிலே மக்கள் நிரம்பி விட்டார்கள்.

சகோதரி சரோஜினி நாராயணசாமி கம்பீரமான அந்தக் கொடி மரத்தின்கீழ் நின்று, நம் இனத்தின் உரிமைக் கொடியை உயர்த்திய வுடன், அந்தக் கண் கொள்ளாக் காட்சியைப் பார்த்த உனக்கும் எனக்கும் இம்மாதிரி அற்புத



விழாவை நேரில் காணும் பாக்யம் கிடைத்ததே என்ற பெருமை ஏற்பட்டது! ஆனல் பல சந்தர்ப்ப சூழ்நிலைகளினல் சேலத்திற்கு வர முடியாமலிருந்த சகோதரர்கள் பத்திரிகைகளில் மாநாட்டு விவரங்களை விளக்கமாகப் படித்து மகிழ்ச்சியடைந்திருக்க முடியாது வருத்தப்பட்டிருப்பார்களல்லவா? அந்த வேதனையைப் போக்க நடந்த நிகழ்ச்சிகளை அவர்களிடம் படம் பிடித்துக்காட்டுவதுபோல் சொல். அத்துடன் சேலம் ரத்ன ஸ்டுடியோ சிற்பிகள் படம் எடுத்து இருக்கிருர்கள். அதையும் நீங்கள் பார்த்து ஆறுதல் அடையலாம் என்றும் அவர்களிடம் சொல்.

இலக்கிய மாநாட்டில் திரு ஐயன் பெருமாள் கோனுர், டாக்டர் அறம் வளர்த்தான் இருவரின் அழகுச் சொற்பொழிவையும், நமது அருமை நண்பர் ம. ரா. போ. கு. அவர்கள் சிந்தைக்கினிய இலக்கியச் சிறப்புக்களை சிம்ம கர்ஜனையோடு சொல்லியதையும், பண்புப் புலவர் திரு கி. வா. ஜ. அவர்களின் பிரசங்க மாரியையும் கேட்டு மகிழ்ந்தோம்.

பிற்பகல் திரு ஜீவானந்தம் அவர்கள் பாரதியையும் கம்பனையும் குறட்பாக்களையும் சொல்லி மாநாட்டு மக்களையே குதூகலத்தில் ஆழ்த்தினர்.

நம்முடைய அருமைத் தலைவர் ம. பொ. சி. அவர்களின் ஒரு

திரு ம. ரா. போ. குருசாமி

மணி நேரச் சொற்பொழிவை நீ ஊன்றிக் கேட்டுக் கொண்டிருந்ததை உன் முகப் பூரிப்பிலிருந்து நான் புரிந்து கொணடேன்.

மறுநாள் காலை அரசியல் மாநாடு. என்ன தம்பி! இந்த மாநாட்டுக்கு ஆயிரக்கணக்கான தாய்மார்களும் சகோதரிகளும் வந்திருந்ததைப் போல வேறெநத மாநாட்டிலேயும் நான் பார்ததது கிடையாதே! தெய்விகப் பண்பையும் தேசபக்தியையும் இன உணர்ச்சியையும் வளர்க்கத் தகுதி



கலைஞர் திரு ஏ. பி. நாகராஜன்

படைத்தது தமிழரசுக்கழகம் ஒன்றுதான் என்பதை அந்த உத்தமச் சகோதரிகளும் அன்புத் தாய்மார்களும் புரிந்து கொண்டு விட்டார்கள் அல்லவா ?

கலைஞர் நாகராஜன் அவர்கள் மாநாட்டை ஆரம்பித்து வைத்தார்; பின்னர், திரு பி. எஸ். ஜி. கோவிந்தசாமி தமிழக நிலப்படத்தைத் திறந்து வைத்தார். நமது அருமைத் தலைவர் ம. பொ. சி. அவர்களின் இரண்டு மணி நேரச் சொற்பொழிவு இனத்தை உயர்த்தும் மந்திரச் சொற்பொழிவாக அமைந்த அற்புதததை என்னால் விளக்க முடியாது. தம்பி! நமது கழகத்தின் அதிகாரபூர்வமான ஏடான 'செங்கோ'லில் ஒருவேளை மேற்படி பேச்சு தொடர்ந்து வரலாம். ஒன்று மட்டும் திடமாக வைத்துக்கொள். எந்தப் பத்திரிகை வாங்கினாலும் 'செங்கோலை'ப் பிடித்துப்பிரித்துப் படிப்பதை மட்டும் மறந்து விடாதே. அப்பொழுதுதான் நம்முடைய கழகத்தின அரசியல் கொள்கைகளைப் பற்றி விவரமாக நீ புரிந்து கொள்ள முடியும்.

என்ன புதுமை! அரசியல் உலகத்திலே வாதத்துக்குரிய விஷயங்களை அப்படி ஓர் ஆற்றலோடு பேசும் திறமை படைததவர் தமிழ்நாட்டில் ராஜாஜிக்கு அடுத்தபடியாக நம் தலைவர் ஒருவரே என்பதை யாரால் மறுக்க முடியும் ?

மீண்டும் பிற்பகல் தலைவர் அவர்கள் ஒரு மணி நேரம் சொற்பொழிவு ஆற்றினார்கள். தேர்தலிலே யாரை எப்படி ஆதரிப்பது, நம்முடைய சூழ்நிலை என்ன என்பதற்கு விளக்கம் தந்தார்கள்.

ராஜ்யப் புனரமைப்பின் பெயரால் தமிழகம் சுயாட்சி பெற்றுத் தமிழ் ஆட்சிமொழியாக ஏற்பட்ட நிலைமையிலே, இந்த ராஜ்யத்தின் உத்தியோகங்கள் தமிழ் மொழி பேசுபவர்களுக்கே முதன் முதலில் அளிக்கப படவேண்டுமென்ற தீர்மானத்னத நான் வற்புறுத்திப் பேசினேன்.

எனக்கு முன்னும் பின்னும் நண்பர்கள் வெளவாலடி ஷம்ஸுதீன், கு. மா. பா, கு.சா.கி, எஸ். ரங்கநாதன், எஸ். கே. பாலசுப்பிரமணியம், து. தங்க

திரு பி. எஸ். ஜி. கோவிந்தசாமி

வேல், ஷெரீப், சின்ன அண்ணாமலை, பீ. எஸ். மணி, ஈ. எஸ். தியாகராஜன், எஸ். டி. பாலு, இளமான், ஞானதாசன், கா. ராமச்சந்திரன், மதுரை காமராஜ், இதயவேந்தன், வி. ஆர். ஜனார்த்தனம், தேசிகாச்சாரி, அருமைநாதன், கள்ளக்குறிச்சி ஜனார்த்தனம், வி. கே.

குப்புசாமி ஆகிய நமது கழக வீரர்கள் தீர்மானங்களை பிரரேபித்தும் ஆதரித்தும் பேசினார்கள். மாநாட்டில் இடையிடையே மதுரை டேப் வெங்கடாசலம் இயக்கப் பாடல்களைப்பாடி மக்களை மகிழ்வித்தார்.

அரசியல் இலக்கிய விருந்துகள் போதாதென்று, 'மாணவர் அரங்கு' ஒன்றும் நிகழ்ந்தது. இதில் திருவாளர்கள் வைத்திய நாதன், கலிவரதன், தட்சிணா மூர்த்தி, கிருஷ்ண மூர்த்தி ஆகியவர்கள் கலந்து கொண்டனர். பிறகு மாநாட்டின் கலை நிகழ்ச்சிகள் பலவும் நம்மைக் களிப்பூட்டின. முதல் நாள் சகோதரிகள் குருவாயூர் பொன்னம்மாள் குழுவினரின் இன்னிசையும், சகோதரி ராஜசுலோசனாவின் நடனமும், பிறகு நண்பர்கள் வி. எம். ஏழுமலை, ஏ. கருணாநிதி நகைச்சுவை விருந்தும், அத்துடன் கே. வி. மாதவன் வாத்தியக் குழுவினருடன் பரபல பின்னணிப் பாடகர்களான திருவாளர்கள் சௌந்திரராஜன், சீர்காழி கோவிந்த ராஜன், திருமதிகள் பாலசரஸ்வதி, ராணி ஆகியோரின் இன்னிசை விருந்தும், திருவாளர்கள் வி. கே. ராமசாமி, டி. கே. ராமசந்திரன், சகாதேவன், பட்டு, பி. டி. சம்பந்தம், சாயிராம், திருமதிகள் ராஜேஸ்வரி, விமலா, சுந்தரிபாய் நடித்த 'பம்பாய் மெயில்' நாடகமும் பொதுமக்களுக்கு மகிழ்ச்சியூட்டின.

இந்த மாநாட்டை வெற்றிகரமாக நடத்தி, தமிழ் இனத்திற்கு விடிவு தேட உழைத்த வரவேற்புத் தலைவர் திரு வேணு அவர்களையும், உபதலைவர் கோபால் அவர்களையும் செயலாளர் பச்சையப்பன் அவர்களையும், மாநாட்டு வெற்றிக்குப் பாடுபட்ட அன்பர்கள் அனைவரையும் நாமும் பாராட்டி 'வாழ்க, தமிழ்! வாழ்க தலைவர் ம. பொ. சி!' என்ற கோஷங்களுடன் மாநாடு இனிதே முடிவு பெற்றதில்தான் நமக்கு என்ன மகிழ்ச்சி.

உன் அன்பு மறவாத,
ஜி. உமாபதி

தமிழ் எழுத்துலகின் ஜாம்பவான்

திரு பி.எஸ்.ராமையா

எழுதும் தொடர்கதை

'உமா' மே இதழில்

ஆரம்பமாகிறது!

எங்கள் இதயங்கள் பேசுகின்றன

'உமா' பொங்கல் மலர் கண்டேன். தி. ஜ. ர. வின் கட்டுரை மலருக்கே அணிகலம். 'கணையாழி' எழுதிய சிறுகதை மிக நன்ருக அமைந்துள்ளது. சிலப்பதிகார ஆசிரியரின் சமயம் பற்றி ஏற்கத் தக்க புதுக் கருத்தை ம. பொ. சி. அவர்களின் ஆராய்ச்சியில் கண்டு மகிழ்ந்தேன்.

நா. பார்த்தசாரதி, மதுரை.

...பொங்கல் திருநாளில் கரும்பு இனித்ததைப் போல், 'உமா' பொங்கல் மலரும் இனித்தது.

குமாரி எல். என். சியாமளா, காரைக்குடி.

....சிலம்புச் செல்வரின் சிலப்பதிகார ஆய்வு சிறப்புடையதாக இருந்தது.

'எல்லாம் தமிழ்' என்ற படையல் இனித்துக் கிடந்தது.

'கலைமகள்' ஆசிரியரின் 'பக்தி நெறி' படிக்க வேண்டிய ஒன்று.

தொ. பொ. மீ-யின் கட்டுரையை ஒரு நூலாகக் காணவேண்டும் என்ற ஆசையை அக்கட்டுரையே தந்தது.

அவ்வை சண்முகத்தின் பேட்டியைப் போட்டியிட வேறு கட்டுரைகளே கிடையாது என்று சொல்லும்படியாக இருந்தது 'பூவை' யின் கைவண்ணம்.

தமிழ் நாட்டுக்கு இத்தகைய நல்ல தொண்டை இயற்றி வரும் தங்களையும் திரு பூவை ஆறுமுகத்தையும் எவ்வளவு போற்றினலும் தகும்.

நாகமுத்தையா பி.காம், சென்னை-1.

பொங்கல் மலர் பெற்றேன். மலரை எப்படிப் புகழ்வதென்றே எனக்குத் தெரியவில்லை. அடிமுதல் நுனி வரையில் தித்திக்கும் செங்கரும்பு அது; தமிழை ஆட்சி மொழியாகப் பெற்ற தமிழ் மக்களுக்கு, தமிழ்த் திருநாளன்று தனித் தமிழ்ப் பத்திரிகையான 'உமா' அளித்த பரிசு என்று கூறுவதில் பெருமை அடைகிறேன்.

மாயாவி, பம்பாய்.

....நாமக்கல் கவிஞர், சுந்தானந்த பாரதி, சோமு, ஷெரீப் கவிதை விருந்தை அனுபவித்தேன். ஔவையின் பேட்டிக் கட்டுரையின் அமைப்பும் எழுத்தும் மிகவும் புதுமையாகவும் சுவையுடையதாகவும் இருந்தன. ஜமீலா, சியாமளா, டி. வி. சுவாமிநாதன் இவர்களின் கதைகளும் நாடகமும் இனிக்கும் கற்கண்டு. அரியலூர் விபத்தைக்கூட விடவில்லையே! பேஷ்! மொத்தத்தில் எல்லா மதத்தினருக்கும் பிடிக்கும் வகையில் ரகம் ரகமான கதைகளைக் கொடுத்திருக்கிறீர்கள்.

கோமதி பாலகிருஷ்ணன், மாம்பலம்.

....இவ்வாண்டு 'பொங்கல் மலர்' மிகவும் சிறப்பான மலர். மலரின் எல்லாப் பகுதிகளிலும் தமிழ் மணம் கமழுகிறது. செயற்கை மணத்தை இதழ்களில் தடவி 'விளம்பரம்' செய்து வரும் சில சஞ்சிகைகளைப் போல் இல்லை நான் குறிப்பிடுவது. எட்டணு விலைக்கு எங்கள் 'உமா' கருத்தான கட்டுரை, கதை, கவிதைகளை அதிகமாகவே கொடுத்திருக்கினருள்.

இளஞ்சோழன், தேவகோட்டை.

உங்களுக்கு எங்கள் நன்றி


நான்கு
நன்மணிகள்
ZAMA INHALER
ஜாமா இன்ஹேலர்
ஜலதோஷத்திற்கு
ZAMA RUB
ஜாமா றப்
ஜலதோஷம்
தலைவலி முதலியவைகளுக்கு
ஜாமா ஆயில்
ஜலதோஷம்
தலைவலி முதலியவைகளுக்கு
AMARCOSE
அமர்கோஸ்
அசல் குளுகோஸ் பவுடர்
அமர்சந்த் சோபாசந்த்
தபால் பெட்டி 518 - - - சென்னை-3
போன் 2182 தந்தி "ஜாமா"

போட்டிக் கதை:

காதலித்தாள் ஒருத்தி. சிலை வடிக்கக் கோரினாள். அவள் அரசிளங்குமரி. ஆனால், சிற்பி செய்த முடிவு....!

கலைக் கண்கள்

பெலிஸியா பத்மினி

'கல்....கல்....கல்!' என்ற ஒலி அவ்வட்டாரம் முழுவதும் கேட்டுக் கொண்டிருந்தது.

அழகிய குன்று. அதன் உச்சியில் பழங்கால அரசர்களால் கட்டப்பட்டு முடிந்த கோயில். அதனுள் சிறந்த வேலைப்பாடுகள் அமைந்த சிற்பங்கள் மிகுந்து காணப்பட்டன. அக்கோயிலின் உள்ளிருந்துதான் 'கல்....கல்' என்ற அந்த ஒலி வெளி வந்து கொண்டிருந்தது.

மாலை நேரமாகையால் வானம் சிவந்து காணப்பட்டது. பறவைகள் தங்கள் மாளிகையை நோக்கி விரைந்தன. பசுக்கள் தங்கள் உல்லாச புரியை விட்டுச் சிறைக் கூடங்களுக்குச் சென்று கொண்டிருந்தன.

அதுபோது, 'டக்...டக்!' என்ற குதிரைகளின் காலடிச் சத்தம் கேட்டது. மலையின் கீழ் அணைத்துக் கொண்டு ஓடும் ஆற்றங் கரையோரமாக அவ்விரு குதிரைகளும் விரைந்து வந்து கொணடிருந்தன. மலையின் அடிவாரத்தை அடைந்தவுடன், அக் குதிரைகள் சிறிதும் தாமதிக்காமல் குனறின் மீது ஏற ஆரம்பித்தன. ஒருத்தி இளவரசி. மற்றொருத்தி சாதாரணப் பெண்.

ஆனால், இருவரும் இள மாந் தளிர்கள்; இருவர் முகங்களும் மகிழ்ச்சியால் நிறைந்திருந்தன. அவர்கள் எதையோ ஆவலுடன் பார்த்துச் செல்பவர்கள் போலக் காணப்பட்டார்கள். உச்சியை அடைந்து, கோயிலின் முகப்பு வாயிலில் இறங்கினார்கள். அப்போதும், உளி எழுப்பிய இன்ப நாதம் நிற்கவில்லை.

ஏழைப் பெண் ஒருத்தி மட்டும் விரைந்து உள்ளே சென்றாள்.

"அண்ணா.... அண்ணா!" என்று இரு முறை அழைத்தாள்.

தன் வேலையை நிறுத்திவிட்டு, அவளையே ஆச்சரியம் ததும்ப உற்று நோக்கினான் சிற்பி.

"அண்ணா, நான் இங்கிருக்கின்றேன்," என்றாள் அந்தப் பெண்.

"உலா...." என்று அன்பொழுக அழைதது்க் கொணடே அவள் –

'கலைக் கண்கள்' ஆசிரியை மதுரை, டோக் பெருமாட்டிக் கல்லூரியில் பல்கலைக்கழக மூன்றாம வகுப்பில் படித்துக் கொண்டிருக்கிறார். இலக்கிய உலகத்தில் பெண்களின் எண்ணிக்கை வளரத் தொடங்கியிருக்கிறது. வரவேற்க வேண்டும்.





பக்கம் திரும்பினுன் அவன். கண்கள் கலங்கின. அவன் உடல் சிலிர்த்தது; நடுங்கியது. அவன் கைகள் உளியை எறிந்துவிட்டு உவகையுடன் உலாவின் கையைப் பற்றின. அவளும் அவன் நிலேயைத் தான் அடைந்தாள்.

அதே சமயம், 'கல் கல்' என்ற ஒலி மீண்டும் கேட்டது. இருவரும் திடுக்கிட்டு, ஒலி வரும் திசையை நோக்கினர். வேறு யாருமில்லே. இளவரசிதான் அது; அவளது சிலம்பின் ஒலிதான் அது. வைத்த கண் வாங்காமல் அவளேயே பார்த்துக் கொண்டிருந்தாள் அவள். உலா இருவரையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் எச்சரித்திரா விட்டால், அவன்மீது அவள் சாய்ந்திருப்பாள். இருவரும் அப்படியே நின்ருர்கள்!

''உலா, இவர்கள் யார்?''

''இவர்கள் இந்நாட்டின் இளவரசி. பெயர் கலா!''

''வரவேண்டும், இளவரசி. வணக்கம். தங்கள் வரவால் என் மனம் மகிழ்ச்சி என்னும் கடலில் மிதக்கும் தெப்பம் போல் ஆனது.''

''அண்ணு, அப்படகில் அமர்ந்து இன்பமென்னும் இறுதி அடையத்தான் வந்திருக்கின்ருள். இவளுடைய விருப்பத்தை நீ பூர்த்தி செய்வாயா?''

''உலா, படகிலே யாருக்கும் இடமுண்டு. அந்தப் படகு மூழ்காது;

உடையாது; ஊசலாடாது. அமைதியாக நீந்திச் செல்லும் தோணியிலே புறப்பட விருப்ப முடையோர் தாராளமாகச் செல்லலாம், எந்த இடத்திற்கு வேண்டுமானாலும்.''

''கலைஞரே, உங்கள் திறமையை உங்களது தங்கை மூலம் அறிந்து கொண்டேன். அதனை நேரிலும் காணத்தான் ஓடோடி வந்தேன்,'' என்று குறுக்கிட்டாள் அரசிளங் குமரியான கலாதேவி.

முதற்பிறை புத்தொளி சிந்தியது. முத்தொளி பரவியது.

கலைஞனும் அவன் தங்கை உலாவும் எப்போதும் பிரிய மாட்டார்கள். அவன் தந்தை சிறந்த சிற்பி. அவர் இறக்கும் போது, ''மகனே என்றைக்கு நீ உன் தங்கையின் நினைவால் வாடி வருந்துகிறாயோ, அப் போது அவளுடைய உருவைச் செய்து கலைத் தொண்டை முடித் துக்கொள். இதை மறக்காதே,'' என்று சொல்லி இறந்து விட்டார். பின்னர், தன் தங்கையுடன் இருந்து கொண்டிருக்கும் போது, அங்கு வந்த இளவரசி அவளை அரண்மனைக்கு அழைத்துச் சென்று இரண்டு நாட்கள் கழிந்த பின் திரும்பவும் இருவருமாக அங்கு வந்தார்கள்.

''உலா, இந்த இரண்டு நாட்க ளாக என்னிடம் சொல்லாமல்கூட

இளவரசியுடன் இருந்து விட்டாயே? எங்கே சென்றாயோ என்று ஏங்கினேன். பின்னர்தான் இறுதிச்சிலையாக உன்னைச்செய்து விட்டு உயிர் விடலாமென்று இருந்தேன். ஆனால், நீ மீண்டும் வந்தது கண்டு என் மனம் குதூகலத்தால் துள்ளிக் குதிக்கிறது.''

''அண்ணா, அது இருக்கட்டும். கலா தன் வடிவத்தை உருவாக்கித் தரவேண்டுமென்ற உவகையுடன் நின்று கொண்டிருக்கின்றாள். என் சிலையை அப்பால் முடித்துக் கொள்ளலாம். கலாவின் கற்சிலையை முதலில் ஆரம்பியுங்கள், அண்ணா.''

''உலா, நான் இனிமேல் சிற்பங்களையோ சிலைகளையோ உருவாக்குவதில்லை என்று ஏற்கனவே முடிவு செய்து விட்டேன். என்னால் இனி எந்தவிதமான கற்சிலைகளையும் உருவாக்கமுடியாது என்பதை மிகவும் வருத்தத்துடன் சொல்லிக் கொள்கிறேன்,'' என்று சொல்லி விட்டு அப்பாற் சென்று விட்டான்.

உலாவும், கலாவும் கட்டி அணைத்துக் கண் கலங்கினர். அவன் வேறு எதையும் கவனிக்கவில்லை. கலா வெளியே செல்ல ஆரம்பித்தாள். உளியின் ஓசையுடன் சிலம்பின் ஓசையும் சேர்ந்து ஒலியை அதிகப் படுத்தியது. கலைஞன் வெறி கொண்டான். வேகமாக உளியை அடித்தான். அவளும் வேகமாக நடந்தாள்.

''உலா....'' என்று சிற்பி சத்தமிட்டான்.

''கலா....'' என்றாள் உலா.

ஆனால் சிலம்பின் ஒலி நின்று விட்டது. குதிரையின் காலடிச் சத்தம்தான் கேட்டது.

கலா வெறி கொண்டாள். எப்படியும் தனது உருவச் சிலையை அக்கலைஞன் மூலம் செய்து பார்த்து மகிழ வேண்டும் என்ற எண்ணம் கொண்டாள். தந்தையின் ஆணையினால் அதைச் சாதிக்க முற்பட்டாள். தந்தையும் தன் மகளுக்காகக் கலையை மறந்தார். ஆணை பிறந்தது: ''என் அருமந்த புத்திரியைச் சிலையாக்கித் தந்துதான் ஆகவேண்டும்!''

மன்னனின் ஆணைப்படி கலைஞன் வேலையை ஆரம்பித்தான்.

உலாவுக்கு என்ன செய்வதென்று தோன்றவில்லை. அன்ன ஆகாரமின்றித் தன் அண்ணன் கலாவின் சிலையை வடிப்பதற்காக கஷ்டப்படுவதைப் பார்த்து வேதனை தாள முடியவில்லை. அவளது சிலை இன்னும் முடிவு பெறாமல் முக்கால் வாசியுடன் ஓர் இடத்தில் கிடந்தது. உலா அருகில் செல்லக்கூடப் பயந்தாள். ஆனால் அவளும் எவ் விதமான உணவையும் உட்கொள்ள வில்லை. சோகமே உருவாகக்காட்சி அளித்தாள். அவ்வப்போது அவன் அருகில் தண்ணீர் கொண்டு வந்து வைத்தாள். அவன் நினைத்துக் கொண்டால் தண்ணீரை எடுத்துக் குடித்து விட்டு, மீண்டும் வேலையைத் தொடங்கினான்.

கலைஞனின் பணி முடிந்தது.

பிறகுதான் அவன் சுற்றிலும் பார்த்தான். தங்கை உலா உணவின்றி, உறக்கமின்றி, உருக்குலைந்து மெலிந்து கிடப்பதைக் கண்டான். அவனுடைய கண்கள் நீரைச் சொரிந்தன. அருகில் சென்றான். அவளது முகத்தில் அவன் சொரிந்த கண்ணீர்த் துளிகள் பட்டுத் தெறித்து ஓடின. அவளும் கண் விழித்தாள். ''அண்ணா, என் மேல்தான் குற்றம்....! என்னை மன்னித்து விடுங்கள், அண்ணா,'' என்று கூறி அழுதாள். அவள் ரத்தக் கண்ணீர் வடித்தாள். அடக்க முடியாத துக்கத்தால் தங்கையை எடுத்துத் தழுவிக் கொண்டான். ''உலா, உன் மீது குற்றமில்லை உலா. என் மீதுதான் குற்றம்.... என் கலையின் மீதுதான் குற்றம்.... என் உளியின்மீதுதான் குற்றம்! அதுவுமில்லை. உலா, என் கலைக் கண்கள் இருக்கின்றனவே, அவை மீதுதான் குற்றம்!'' என்றான்.

அழுதான்; பிறகு அமைதியானான். மீண்டும் தங்கையை நோக்கினான். அவளும் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவன் சிரித்தான். அவளும் சிரித்தாள். அன்புச் சிரிப்பு!

"அண்ணா, என் சிலையையும் முடித்து விடுங்கள்!" என்றாள் தங்கை உலா.

தங்கையின் சிலையை முடிக்க முற்பட்டான் சிற்பி. அவளும் அருகில் வந்து உட்கார்ந்தாள். நேரம் சென்று கொண்டே இருந்தது. இருளும் வந்தது.

இரவு வளர்ந்தது; குறைந்தது. சூரியன் பொற்கதிர்களைப் பரப்பினான். "உலா .... உலா .... பார் உனது சிலையை! என்னுடைய கலைக் கண்களால் இனி உன் சிலையைத் தவிர நான் வேறு சிலையைப் பாரேன்!" என்று கூறிக்கொண்டே கலைஞன் உலாவை எழுப்பினான்.

உலா சருகு போல் அங்கேயே சுருண்டு கிடந்தாள்.

"அண்ணா!" என்றாள். அவன் ஓடிச் சென்று அவளை அழைத்து வந்து அவள் சிலையைக் காட்டினான். அவள் முகம் மலர்ந்தது. "உலா.... இதுதான் என் இறுதி வேலை. இனி எனக்கு இவ்வுலகில் மதிப்பைத் தரக்கூடிய இக்கலைக் கண்கள் எனக்குத் தேவையில்லை!" என்று சொல்லிக்கொண்டே தன் இரு உளிகளைக் கையில் எடுத்தான். சிலையையும், உலாவையும் மாறி மாறிப் பார்த்தான். உலாவின் கண்கள் பயங்கரமாக மாறின. அவள் கையை அசைத்து ஏதோ சொல்ல வாயெடுத்தாள். முடியவில்லை.

அதே சமயம் —

"ஆ ....!" என்ற அலறல் ஒலி விண்ணை முட்டியது.

இரத்தம் சிலையெங்கும் சிதறி ஓடியது. "அண்ணா!" என்ற சத்தத்துடன் அவன்மீது சாய்ந்தாள். அவள் கண்கள் மூடிக்கொண்டன. இன்பமென்னும் இறுதியை நோக்கிப் பயணமானார்கள்.

நிருபர் சரடு!

1937-ஆம் வருஷம் மந்திரிசபை ஏற்பதா இல்லையா என்ற விவாதம் காங்கிரஸ்காரர்களுக்குள் நடந்து கொண்டிருந்தது. அவ்வமயம் காந்தியடிகள் ஹிந்தி சாஹித்ய சம்மேளனத்துக்காகச் சென்னைக்கு ரெயிலில் வந்துகொண்டிருந்தார். யாரோ ஒரு நிருபர் காந்திஜியிடம் வந்து வெகு ஆவலுடன், "என்ன, காங்கிரஸ்காரர்கள் மந்திரிப்பதவி ஏற்றுவிடுவார்களோ?" என்று கேட்டார்.

'ஆம்' என்றோ 'அல்ல' என்றோ பதில் சொன்னால், ஒரே வினாடியில் உலகமெல்லாம் செய்தி பரவிவிடும். மௌனமாயிருந்தால்கூட அதற்கும் ஏதாவது வியாக்கியானம் செய்துவிடக்கூடியவர்கள் இந்தப் பொல்லாத பத்திரிகைக்காரர்கள்.

ஆகவே காந்திஜி சாதுர்யமாக, "ஏன்? நீர் ஒரு மந்திரியாகப் போகிறீரோ?" என்று கேட்டார்.

உடனே எல்லோரும் 'கொல்' என்று சிரித்துவிட்டார்கள். கேள்வி கேட்ட நிருபர் பேசாமல் போய்விட்டார்.

மீண்டும் அதே 'கல்.... கல்' என்ற சத்தம் எதிரொலித்தது!

பெருமிதத்துடன் வந்தாள் கலா. கலைஞனின் கலைத் திறத்தைக் கண்டு களிக்கலாம் என்று எண்ணி ஓடி வந்தாள். கோயிலின் வாயிலை அடைந்தாள். நின்று பார்த்தாள். எவ்விதமான சத்தமும் கேட்கவில்லை. மெதுவாக உள்ளே சென்றாள். அவளுக்குத் தென்பட்டது, அவளுடைய உருவச் சிலைதான்! நேராக அருகில் சென்று பார்த்தாள். தன்னையே நிலைக் கண்ணாடியில் பார்த்துக் கொள்வது போல் இருந்தது. அவள் கண்கள் பிரகாசித்தன. மன்னர் மகள், "உலா!" என்ற பெருஞ் சத்தத்துடன் திரும்பினாள். கால் தடுக்கி விழுந்தாள். கலைஞனின் கலைக் கண்களைப் பறித்துக் கொண்ட அதே உளிகள் தரையில் சிந்தையிழந்து கிடந்தன. ○

அத்தியாயம் – 10

காலம் செய்யும் ஜாலம்

சாவி கொடுக்காவிட்டால் கடிகாரத்தின் சக்கரம் சுழலாது; மாடு இழுக்காவிட்டால் வண்டியின் சக்கரம் உருளாது; சுழற்றி விட்டுக் கொண்டே இராவிட்டால் குயவனின் சக்கரம் சுற்றாது. இப்படி உலகில் எந்தச் சக்கரத்தை எடுத்துக் கொண்டாலும், ஏதோ ஒரு சக்தியால் மாத்திரமே அது இயங்கக் கூடியதாக இருக்கிறது. அந்தச் சக்தி குறையும்போது சக்கரத்தின் சுழற்சியும் குறைகிறது; சக்தி நின்றுவிட்டால் சக்கரமும் நின்றுவிடுகிறது.

ஆனால், எவ்விதச் சக்தியும் இன்றி, எந்தக் கோளாறினாலும் வேகம் குறையாது, நில்லாமல் நிலையாமல் ஓடிக்கொண்டிருக்கும் சக்கரம் ஒன்றும் இந்த உலகில் இல்லாமல் இல்லை. அதுதான் காலச் சக்கரம். அதனால்தான் பெரியோர்கள், ''காலம் ஒரு கர்ம யோகி'' என்று கூறியிருக்கிறார்கள் போலும். கர்மயோகிகள், தனக்காகட்டும், பிறருக்காகட்டும், நன்மையோ, தீமையோ, எது ஏற்பட்டாலும் பாதிக்கப்படாமல் தங்கள் கருமமே கண்ணாக யோகத்தில் ஆழ்ந்திருப்பார்களாம். அவ்வாறுதான் காலமும், யாருக்கு என்ன நேர்ந்தாலும் லட்சியமின்றித் தன் போக்கில் போய்க் கொண்டிருக்கிறது. அது போவதைக்கூட நாம் அதிகமாக உணருவதில்லை. விமானத்தில் ஏறிய பிரயாணி விமானத்திலேதான் இருக்கிறார். அவர் ஓடவில்லை; ஆனால் விமானம் ஓடுகிறது. ஆகவே, அவர் தான் ஓடாமலே தூரத்தைக் கடந்து விடுகிறார். தான் ஓடினால் அல்லவா அவர் தூரத்தைக் கடப்பதை உணரப் போகிறார்? ஆகையால், விமானத்தை விட்டு இறங்கும்போது, 'இவ்வளவு விரைவில் இவ்வளவு தூரத்தைக் கடந்து விட்டோமா?' என்ற வியப்பு அவருக்கு மேலிடுகிறது.

அவ்வாறுதான் காலமும் நம்மைச் சுமந்துகொண்டு ஓடுகிறது.

எப்பொழுதாவதுதான் நாம் நாட்களை, மாதங்களை, வருஷங்களைக் கடந்துவிட்டதை நினைத்துப் பார்க்கிறோம். அதை நமக்கு நினைவூட்டக் கூட ஏதாவது விசேஷ நிகழ்ச்சி ஏற்பட வேண்டியிருக்கிறது.

இதோ, நம் கதையிலும் அத்தகைய நிகழ்ச்சி ஒன்று வருகிறது.

தென்காசி வடக்கு மாசித் தெருவிலுள்ள குத்தாலிங்கம் பிள்ளையின் வீட்டில் ஜனங்கள் கும்பலாகக் கூடியிருக்கிறார்கள். காரணம், அவ்வீட்டில் ஓர் இழவு விழுந்துவிட்டது. வாசலில் பாடை கட்டியாகிறது; தீச்சட்டி புகைகிறது; உள்ளே பெண்கள் மாரடித்து ஒப்பாரி வைக்கும் குரல் கேட்கிறது. 'துஷ்டி'க்கு வந்தவர்கள் தோளில் துண்டுடன், திண்ணையிலும் தெருவிலும் குழுமியிருக்கிறார்கள். அச்சமயம் அவர்கள் காலம் பறந்து செல்லும் விசித்திரத்தைத்தான் எண்ணி வியந்துகொண்டிருக்கிறார்கள். ஆம், அவர்களில் பெரும்பாலானோர், இதே வீட்டில் இதே மாதிரி வேறொரு 'துஷ்டி'க்காக வந்திருந்ததை அப்பொழுது நினைத்துப் பார்க்கிறார்கள். ''நேத்துத்தான் நடந்தாப்பிலே இருக்குது; இன்னான்னு அஞ்சு வருசமில்லா ஓடிப் போயிடிச்சி!'' என்று ஆச்சரியப்படுகிறார்கள்.

இதுதான் காலம் செய்யும் ஜாலம்! இந்த ஜாலத்துக்குக் கட்டுப்படாதவர் யார்? மயங்காதவர் யார்?

ஆம், ஐந்து வருஷங்களுக்கு முந்திய அந்த இழவு! அது ஒற்றை இழவுகூட இல்லை; இரட்டை இழவு! குத்தாலிங்கம் பிள்ளையும் சொக்கையாப் பிள்ளையும் ஒன்றாகக் கடலுக்கு இரையாகிக் கரைந்து போனார்களே, அதே இழவுதான்!

அவர்களது மரணச் செய்திதான் எப்படிப்பட்ட அதிர்ச்சியாகத் தென்காசியை வந்தடைந்தது! மைத்துனரும், மைத்துனரும் கொழும்புக்குப் புறப்பட்டுச் சென்று பதினைந்து நாட்களான பிறகுதான் அச்செய்தி தென்காசியை எட்டிற்று. அதிலும் அழகம்மை அந்த நடவடிக்கையை மேற்கொண்டிராவிட்டால், அவர்கள் உடல்களைப் போல் அவர்களது மரணச் செய்தியும் எவருக்கும் தெரியாமலே போயிருக்கும்.

கோமதியையும் காந்திமதியையும் கூட்டிக் கொண்டு தென்காசிக்குத் திரும்பிய அழகம்மை மன நிம்மதியின்றித் தவித்தாள். அநுபவத்தினால் பொய்யாமொழி எனக் கண்டிருந்த ஜோசியரின் வாக்குப்படி, சொக்கையாப் பிள்ளைக்கு இயற்கை மரணம் இல்லை என்பதைத் தனது கணவர் மூலம் அவள் அறிந்திருந்தாள். அதனால்தான் இச்சமயம் அவரை வெளியூர்ப் பயணம் அழைத்துச் செல்லலாகாதென்று குத்தாலிங்கம் பிள்ளையிடம் அவள் மல்லுக்கு நின்றாள். ஆனால் அவரோ, விதியின் மயக்கத்தால், அப்பிரயாணம் அவசியமென்று காரணம் காட்டி விட்டுப் புறப்பட்டுச் சென்று விட்டார். அவருடைய சாமர்த்தியத்திலும், எச்சரிக்கையிலும், அழகம்மைக்கு நல்ல நம்பிக்கை இருக்கத்தான் இருந்தது. ஆயினும், அவர் கோமுவின் வீட்டுக்காரரை நல்லதனமாகத் திருப்பிக் கொண்டுவந்து சேர்க்கவேண்டுமே யென்று அவளைக் கவலை அரித்துக் கொண்டு இருந்தது.

தெய்வ நம்பிக்கையுடையவர்கள், இம்மாதிரிக் கவலையான சமயங்களில், எல்லாம் நல்லதாக முடிய வேண்டுமென்று தெய்வத்தை வேண்டிக்கொள்ளத் தவற மாட்டார்கள். அவ்வாறே தெய்வ நம்பிக்கை மிகுந்தவளான அழகம்மை, கொக்கர் குளத்திலிருந்து வந்த அன்றே, கோமதியிடம், ''நமக்குப் போறாத காலம், கோமு. ஒங்க அண்ணாச்சி ஒன் வீட்டுக்காரரைக் கூட்டிக் கிட்டுக் கப்பலேறித் தொலை தூரம் போயிருக்காக. அவுக போன காரியத்தெ முடிச்சுக்கிட்டு ஒண்ணுமில்லாம வந்து சேர்ந்துடணுமின்னு வாடா வௌக்கு வச்சு, சாமியை வேண்

டிக்கிட்டிரு!" என்று தன் கவலையைச் சொல்லாமல் சொல்லி, பக்குவமாகப் பரிகாரம் தேடிக் கொண்டிருந்தாள். வாடா விளக்கு வைத்த பிறததான அவள மனம் ஓரளவு சாந்தி பெற்றது. என்றாலும் அந்தச் சாந்தி நீடிதது நிற்கவில்லை. கொழும்புக்குப் போனவர்கள் திரும்பும் நாள் தள்ளிச் செல்லச் செல்ல அழகம்மையை மீண்டும் கவலை வாட்டலாயிற்று. அவள் ஒரு வாரம் பொறுத்துப் பார்த்தாள். 'இன்று வந்து விடுவார்கள்; நாளை வநதுவிடு

வார்கள்' என்று மனசுக்குச் சமாதானம் கூறினாள். ஆனால் போனவர்கள் திரும்பவும் இல்லை; அவர்களைப் பற்றிய தகவலும் இல்லை.

ஆகவே, எட்டாவது நாள் அவள், மேலத் தெருச் செல்லப் பிள்ளைக்குச் சொல்லி அனுப்பினாள். அவர் வந்ததும், "பாட்டையா! இவுக இரண்டு பேரும் போயி அன்னா — இன்னான்னு எட்டு நாளாயிடிச்சு; ஒரு அரையணாக் காயிதத்தைக் கூடக் காங்கலையே? (அக்காலத்தில் தபால்கார்

டுக்கு அரையணுத்தான் விலே!) எனக்கு என்னமோ பயமாயிருக்குது, பாட்டையா. நீங்க ஒரு நடை கொக்கர் கொளத்துக்குப் போயி, அங்கிட்டுக் காயிதம்–கீயிதம் வந்திருக்குதான்னு பாத்துட்டு வந்திடுதேளா? அங்ஙனேயும் ஒண்ணும் வராட்டிப்போனு, நீங்க கொழும்புக்குத்தான் பொறப்பட்டுப் போகணும். அவுகளேக் கையோடே கூட்டிக்கிட்டு வந்தாத்தான் எங்களுக்கு நிம்மதியாகும்'' என்று கூறிப் போதிய பணம் கொடுத்துத் திருநெல்வேலிக்குப் போகச் செய்தாள்.

செல்லம் பிள்ளே கொக்கர் குளத்துக்கு வந்தார். அங்கு கடிதம் எதுவும் வரவில்லே. ஆகவே, அவர் அவ்விவரத்தைத் தெரிவித்து அழகம்மைக்கு ஒருகார்டு எழுதிப் போட்டுவிட்டு, சொக்கையாப் பிள்ளேயின் கணக்கரிடமிருந்து கொழும்பு நிலுவைப் புள்ளிகளின் விலாசங்களே வாங்கிக் கொண்டு அங்கே புறப்பட்டுச் சென்ருர்.

கொழும்பில் அவர் அந்த விலாசதார்கள் ஒவ்வொருவரையும் சந்தித்து விசாரித்தார். அவர்களில் எவருக்கும்–ஏன் – சொக்கையாப் பிள்ளேயின் ஏஜெண்டுக்குக் கூட அவர் அங்கு வரப்போகும் செய்தி தெரியாது; ஆகையால், அவர்கள் திடுக்கிட்டார்கள். ஒருவேளே வேறு ஏதேனும் வேலே அல்லது அசந்தர்ப்பம் காரணமாக அவர்கள் தூத்துக்குடியிலேயே தங்கியிருக்கலாம் என்று அவர்கள் சொன்னுர்கள். ஆனல் கொழும்புக்கு என்று புறப்பட்ட குத்தாலிங்கம் பிள்ளே, இடையே, சமீபத்தில் இருக்கும் தூத்துக்குடியில் தங்கநேரிட்டிருந்தால், வீட்டுக்குத் தாக்கல் எழுதாமல் இருப்பாரா? மேலும் அங்கே, எட்டு நாள், பத்து நாள் என்று தங்கும்படி இந்த சமயத்தில் என்ன அலுவல் இருக்கக்கூடும்?

செல்லம் பிள்ளேக்கும் இப்பொழுது கவலே ஏற்பட்டுவிட்டது. அந்த வியாபாரிகளின் ஆலோசனேப்படி அவர் உடனே தூத்துக்குடியிலிருக்கும் கப்பல் கம்பெனி ஏஜெண்டுகள் ஒவ்வொருவருக்கும் தந்தி அனுப்பினர்–குத்தாலிங்கம் பிள்ளே, சொக்கையாப் பிள்ளே என்ற பெயர்களில் அவர்கள் கொழும்புக்கு டிக்கட்டுகள் விற்றிருந்தால் அதைத் தந்தி மூலம் தமக்கு அறிவிக்கும்படி. ஓர் ஏஜெண்டிடமிருந்து பதில் தந்தி வந்தது. இத்தனம் தேதி தூத்துக்குடியிலிருந்து புறப்பட்ட இன்ன கம்பெனிக் கப்பலில், அவர்கள் முதல் வகுப்பில் பிரயாணமானுர்கள் என்று அத்தந்தி அறிவித்தது.

கொழும்புத் துறைமுகத்தில் வந்திறங்கும் பிரயாணிகள் யாவரும் சுகாதாரப் பரீட்சைக்கு உள்ளாக வேண்டும். சுகாதாரப் பரீட்சை நடத்தப்படும் ஆபீஸிலுள்ள பட்டியலில் அவர்கள் பெயரையும், கொழும்பு விலாசத்தையும் பதிவு செய்து கொள்ளுவார்கள். ஆகவே சொக்கையாப் பிள்ளேயின் ஏஜெண்ட், செல்லம் பிள்ளேயை அந்த ஆபீஸுக்கு அழைத்துச் சென்ருர். ஆனல், தென்காசிப் பிள்ளேவாளும், கொக்கர்குளத்துப் பிள்ளேவாளும் கொழும்பில் வந்திறங்கியிருந்தால் அல்லவா அவர்கள் பெயர்களும், விலாசமும் சுகாதார அலுவலகப் பட்டியலில் இருக்கப் போகின்றன?

இப்பொழுது செல்லம் பிள்ளேக்குப் பீதியே ஏற்பட்டு விட்டது. இருந்தாலும், கடைசித் துரும்பாக அவர், பிள்ளேமார்கள் பிரயாணம் செய்த கப்பலின் கம்பெனிக்குச் சென்று விவரத்தைக் கூறினுர். அதிர்ஷ்ட வசமாக அந்தக் கப்பல் பழுது பார்க்கும் பொருட்டு கொழும்புத் துறைமுகத்திலேயே நங்கூரம் பாய்ச்சப்பட்டது. எல்லோரும் அதில் ஏறி, முதல் வகுப்புப் பிரயாணிகளின் அறைகளே ஒன்றென்ருகச் சோதனேயிட்டார்கள். ஓர் அறையில், குத்தாலிங்கம் பிள்ளேயும் சொக்கையாப்பும் கொண்டு போயிருந்த பெட்டி படுக்கைகளும், கணக்குப்புத்தகங்கள் அடங்கிய துணி மூட்டையும்

காணப்பட்டன. அருகில் படுத்திருந்த மச்சினரைக் காணுததால் திடுக்கிட்டு எழுந்து ஓடிய போதிலும், குத்தாலிங்கம் பிள்ளை முன் எச்சரிக்கையாகத் தங்கள் அறையை இழுத்துப் பூட்டிக் கொண்டுதான் சென்றிருந்தார். ஆகவே, இந்தச் சாமான்கள் உள்ளே இருந்ததை எவரும் கவனிக்க வழியில்லாமலே போய் விட்டது.

செல்லம் பிள்ளைக்கும் மற்றவர்களுக்கும் இப்பொழுது எல்லாம் விளங்கி விட்டன. தூத்துக்குடியில் கப்பலேறிய பிரயாணிகள், கப்பல் அடுத்தாற்போல் நிற்கும் துறைமுகமாகிய கொழும்புக்கு வந்ததும் காணப்பட வில்லையென்ருல், அவர்கள் ஆகாய மார்க்கமாக எங்கேயாவது பறந்தா சென்றிருக்கப்போகிருர்கள்? அதிலும், பணம் உட்படத் தாங்கள் கொண்டுவந்த சாமான்கள் ஒன்றைக்கூட எடுத்துக் கொள்ளாமல், நிச்சயமாகத் தவறியோ, அல்லது வேண்டுமென்ருே, எவரும் அறியாமல் கடலில்தானே விழுந்து மடிந்திருக்க வேண்டும்?

கடைசியில் இந்தத் திகிலான செய்தியைச் சுமந்துகொண்டு தென்காசிக்குத் திரும்பினுர் செல்லம் பிள்ளை.

இடையே தென்காசியிலும் இதற்கான சூசகம் ஒன்றும் ஏற்பட்டு விட்டது.

அன்று வெள்ளிக்கிழமை. கோமதியை வீட்டில் வாடா விளக்கு வைக்கச்செய்திருந்ததோடு, வெள்ளிக்கிழமையன்று உலகநாயகி அம்மனுக்கு நெய் விளக்கும் ஏற்றிவர ஏற்பாடு செய்திருந்தாள் அழகம்மை. அதன் பொருட்டு, பொழுதுசாய கோமதி கோயிலுக்குப் போயிருந்தாள். அழகம்மையின் இளைய மகன் திருமலையும், காந்திமதியும் கூடச் சென்றிருந்தனர். அப்பொழுது தென்காசிக் கோயிலில் தேர்த் திருவிழா நடந்து கொண்டிருந்தது. கொடை ராட்டு, தொட்டில் ராட்டுப் போன்ற ராட்டினங்கள்; மல்லிகை, முல்லை, மருக்கொழுந்து, மற்றும் தேங்காய், பழம் போன்ற பூசைக்குரிய சாதனங்களை விற்கும் கடைகள்; மிட்டாய்க் கடைகள்; ஷாப்புச் சாமான்கள் மற்றும் விளையாட்டுச் சாமான்கள் அடங்கிய கடைகள்; கரும்பு வண்டிகள்; 'வை-பிரைஸ்' முதலான லாட்டிரி விளையாட்டுகள் – இப்படிச் சிறியோரையும் பெரியோரையும் கவர்ந்து இழுக்கும் தாற்காலிகக் கடைவீதியாகக் கோவில் முகப்பு விளங்கிற்று. குழந்தைகளுடன் கோயிலுக்குப் போய், நெய் விளக்கு ஏற்றிவிட்டு, இக் கடை வீதியின் வழியே வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்தாள் கோமதி. வழி நெடுக 'அதை வாங்கிக் கொடு; இதை வாங்கிக் கொடு' என்று அவளை நச்சரித்துக்கொண்டு வந்தான் திருமலை. கடைசியில் 'பட்டம்' விற்கும் கடையண்டை வந்தபொழுது அதில் ஒன்று வாங்கிக் கொடுத்தாலன்றி நகர மாட்டேன் என்று முரண்டடித்துக் கத்த ஆரம்பித்தான். கோமதி 'சீலை'த் தலைப்பில் முடிந்து கொண்டிருந்த 'முக்காத் துட்டை' அவிழ்த்தெடுத்து, பட்டம் ஒன்றை வாங்கி அவனுக்குக் கொடுத்து, அழுகையை நிறுத்தி வீட்டுக்குக் கூட்டி வந்தாள்.

வீட்டை நெருங்கியதும் ஓட்டமாக உள்ளே பாய்ந்தான் திருமலை. வாடா விளக்கின் முன் உட்கார்ந்து, உள்ளத்துக் கவலை நீங்கக் கண்களை மூடிக்கொண்டு, மனமுருகிப் பிரார்த்தித்துக் கொண்டிருந்தாள் அழகம்மை. புயல்போல் அங்கே வந்தான் அவன். "ஏம்மோ, ஏளோ! இந்தாப் பாருளா, பட்டம்; அத்தெ வாங்கித் தந்திச்சு!" என்று வர்ணக் காகிதங்கள் ஒட்டிய அந்தப் பட்டத்தை விளக்கின் முன் அப்படியும் இப்படியும் ஆட்டிக் காட்டினுன். "ஏலே, கூறுகெட்ட மூதி! இங்கிட்டு வாலே, வெளக்கு அவிஞ்சிடப் போகுது," என்று அழகம்மை அவனைப் பிடித்து இழுப்ப

> கற்பனை என்பது அற்புதமான சக்தி. அந்தச் சக்தி மனிதனிடம் இல்லையென்றால், கலையென்ற ஒன்று வாழ்க்கையில் இடம் பெற்றிருக்கவே முடியாது.
>
> — கார்க்கி

தற்கும், வாடாவிளக்கு வாடி விடுவதற்கும் சரியாக இருந்தது. அந்த அறையில் வேறு தீபம் எதுவும் இல்லாததால் இருள் கப்பென்று சூழ்ந்தது. அந்த இருளைப் போலவே அழகம்மையின உள்ளமும் மறு நிமிஷம் இருண்டு போயிற்று. உள்ளம் மாத்திரந்தானா? அவள் வாழ்க்கையும் இருண்டுவிட்ட செய்தியுடன் அதே சமயம் செல்லம் பிள்ளையும் பிரவேசித்தார்.

பிறகு என்ன? இரண்டு வாரங்களுக்கு முன்பு கொக்கர்குளத்துச் சொக்கையாப் பிள்ளையின் வீடு இழவு விழுந்த வீடுபோல் இருந்ததென்றால், இன்று தென்காசி குத்தாலிங்கம் பிள்ளைவாளின் வீடு அசல் இழவு. அதிலும் இரட்டை இழவு விழுந்த வீடாகவே ஆகிவிட்டது. இதில் வேறொரு கண்ணறாவி என்னவென்றால், கொள்ளி போட மணி–மணியாக இரண்டு பிள்ளைகள் இருந்தும், ஒரு பாடைகூடக் கட்டாமல், ஒரு தீச்சட்டி தூக்காமல் குத்தாலிங்கம் பிள்ளையின் ஈமக்கடன்களை நிறைவேற்ற வேண்டியதாயிற்று.

குத்தாலிங்கம் பிள்ளையின் மரணச் செய்தியைக் கேட்டுத் தென்காசியே மாளாத் துயர் கொண்டது என்றால், அழகம்மை, நெல்லையப்பன் போன்றவர்களின் துயரை அளவிட்டுக் கூறமுடியுமா? அவருடைய மரணத்தால், அவருடனே செத்த சொக்கையாப் பிள்ளையின் மரணத்துக்கு முக்கியத்துவமோ, துக்கமோ இல்லாது போயிற்று. சொக்கையாப்பிள்ளை தான் திடீரென்று 'பாப்பர்' ஆகிவிட்டதால், மனமுடைந்து தற்கொலை செய்து கொண்டார் என்றால். குத்தாலிங்கம் பிள்ளை ஏன் சாகவேண்டும்? இதைத்தான் எல்லோரும் திருப்பித் திருப்பிச் சொல்லி ஆற்ற மாட்டாது பட்டனர்.

அழகம்மையும் அதையேதான் சொல்லி அழுதாள். "அவுகதான் பொஞ்சாதி–புள்ளைகளை மறந்து செத்தாகன்னா, நீங்களுமா எங்க தலை மேலே மண்ணை அள்ளிப் போடுவீக? 'புரு' தெரியாத ரெண்டு புள்ளைக; கல்லுக்கணக்கா நான் ஒருத்தி; ஒண்ணுமில்லாமப் போயுட்ட தங்கச்சி; அவலமா நிக்கப் போகுத அவ மக; இப்பிடி அஞ்சு உசிரு ஒங்களை நம்பி இருக்குதே; அதெ நெனெச்சுக்கிடாம, மச்சினருக்குத் தொணையா நீங்களும் போயிட்டீகளே! இது நாயமா? பணம் வெச்சிருக்கீக; வீடு வெச்சிருக்கீக; நெலம் வெச்சிருக்கீக; யாபாரம் வெச்சிருக்கீக; எல்லாத்துக்கும் எல்லாந்தான் வெச்சிருக்கீக; ஆனா, எனக்கு என்ன வெச்சிருக்கீக? எனக்கு நீங்க ஒருத்தருதானே எல்லாம். அதெ நெனெச்சுப் பார்காம, என்னெ வெள்ளச் சீலை போட்டு, மூலைக்கிருக்க வச்சுப் போட்டு நீங்க போயிட்டீகளே! இனிமே எனக்கு என்ன இருக்குது இந்த உசிரெ வச்சுக்கிட்டிருக்க?"

அழகம்மை, பாவம், புலம்பினாள்; எல்லையின்றிப் புலம்பிப் புழுவாகத் துடித்தாள்; துடித்துக் கொண்டே இருந்தாள். அவளை யார் தேற்றுவது? யார் ஆற்றுவது?

இழவுக் காரியங்கள் அவை பாட்டுக்கு நடந்தன. இன்றுபோல் அன்றும், அண்டை அயலாரும், பந்து ஜனங்களும் வந்து, இரட்டை இழவைக் கருமாதி வரையில் கூட இருந்து நடத்தி வைத்தனர்.

எல்லாம் முடிந்து விட்டது. குத்தாலிங்கம் பிள்ளையும், சொக்கையாப் பிள்ளையும். இனி வருஷத்துக்கு ஒரு தடவை 'திதி' வாங்கும் 'பிதுர்'க்களாகி விட்டனர்.

நையாண்டிக்காரன் அறிவைத் தேடுகிறன்: அதைக் கண்டறிவதில்லை. ஆனால் உணர்வுள்ளவனுக்கோ அறிவு வெகு சுலபமாய் வரும்.

— பைபிள்

பொறுப்பெல்லாம் இப்பொழுது நெல்லையப்பனின் தோளைச் சார்ந்தன. கூடமாட இருந்து ஒத்தாசை செய்தார் செல்லம் பிள்ளை. முதலில் 'கு'ஞ விலாசம் கடையை ஏடு கட்டினர்கள். பணம், நிலம், வரவு, செலவு, எல்லாவற்றிலும் நெல்லையப்பனைப் 'பரிச்சிய'ப்படுத்தி விட்டார் செல்லம் பிள்ளை.

துக்கம், துயரம், ஓலம், அழுகை, ஒப்பாரி, எல்லாம் படிப்படியாகக் குறைந்து, வீடு வீடாயிற்று. சொத்திழந்து, சொம்பிழந்து, வாழ்வையும் இழந்துவிட்ட சின்னஞ்சிறு வயதினளான கோமதிகூடத தன் துயரைச் சிறுகச் சிறுக மறந்து விட்டாள். ஆனல் அழகம்மை மாத்திரம் உள்ளம் தேறவேயில்லை. வெளிப்படையாக அவளும் எல்லாவற்றையும் மறந்து விட்டவள் போலவே காணப்பட்டாள். உண்டாள்; உறங்கினுள்; பேசினுள்; சிரித்தாள். ஆயினும், உள்ளூர அவளைச் செல்லாக அரித்து வந்தது, நடந்துபோன துக்கத்தின் விளைவாக முளைத்திருந்த கவலை ஒன்று. அது வேறென்றும் இல்லை; காந்திமதியின் வருங்காலம் பற்றிய கவலை தான்!

மகளின் அவலம் நிறைந்த வருங்காலத்தைப் பற்றிக் கோமதி எதுவும் அறியாள். ஆகவே, அவள் இப்பொழுதெல்லாம் நெல்லையப்பனையும் காந்திமதியையும் இணைத்துப் பேச ஆரம்பித்திருந்தாள். ''ஏ மூதி! அவன் ஒன் புருசனிட்டி? அவனெப் போயி, நீ–நான்னு பேசிக்கிட்டிருக்கியே?'' என்று மகளுக்கு அவ் வயசிலிருந்தே நெல்லையப்பனிடம் பயபக்தி ஏற்படுமாறு போதித்து வந்தாள். ஊர்க்காரர்களும் அவர்களைக் கணவன்–மனைவியராகவே இணைத்துப் பேசிக் கொண்டிருந்தனர். அத்தை மகளும், மாமன் மகனும் இருந்தால், அவர்களைத் தம்பதிகளாகக் காண்பது உலகத்தில் இயற்கைதானே! ஆனல் இந்த இணைப்புப் பேச்சைக் கேட்கும்போதெல்லாம் அழகம்மையின் நெஞ்சு திடுக்கிடும். ஜோசியர் சொன்னபடியே எல்லாம் நடந்து விட்டன. ஆகவே, இனி இது மாத்திரம் நடக்காது என நினைப்பதற்கு இடமேயில்லை. எந்த அதிர்ஷ்டங்கெட்டவன் காந்திமதியை மணக்க முன்வரப் போகிறனே, அவன் அவளுடைய கரம் பற்று முன்னே, உலகிலிருந்து விடை பெற்றுக் கொள்ளத்தான் போகிறன். அந்தக் கதி தன் மகனுக்கு ஏற்பட அவள் பார்த்துக்கொண்டிருக்க முடியுமா?

குத்தாலிங்கம் பிள்ளையும் இந்த இடத்தில் ஒரு தவறு செய்துவிட்டிருந்தார். அவர் அழகம்மையிடம் காந்திமதியைப்பற்றிச் சொல்லி, அவளை நம் பிள்ளைகளுக்குக் கட்டி வைக்க முயன்று விடாதே என்று மாத்திரம் எச்சரித்துவிட்டுப் போயிருந்தாரே தவிர, அப்படிப் பட்ட நிலை ஏற்படும்போது, அதைச் சமாளிப்பதற்காகத் தாமும் சொக்கையாப் பிள்ளையும் தயாரித்து வைத்திருந்த காந்திமதியின் மாறுபட்ட ஜாதகத்தைப் பற்றிக் கூற அவர் மறந்துவிட்டார். அதைக் கூறியிருந்தால், அழகம்மை இவ்வளவு திண்டாடும் படி ஆகியிராது. முறைப்பெண், முறை மாப்பிள்ளை என்றிருக்கும் போது, அவர்களில் யாராவது ஒருவருக்கு ஏதாவது குண தோஷம் இருக்கலாம் என்ற சந்தேகம் தட்டினலன்றி, சாதாரணமாக அவர்கள் திருமணம் ஜாதகப் பொருத்தம் பார்க்காமலே நடந்தேறிவிடும். இருந்தாலும், தன் மக்களைக் காப்பாற்ற அப்படி ஒரு

வழி வகுக்கப்பட்டிருப்பதை அழகம்மை அறிந்திருந்தால், திருமணப் பேச்சு முதிர்ந்து வரும்போது, ஏதாவது குற்றங் குறைகளைக் காட்டி, ஜாதகப் பொருத்தம் பார்க்க வேண்டும் என்று கோமதியிடம் வற்புறுத்தியிருப்பாள். ஆனல் அதுதான் அவளுக்குத் தெரியாது போய் விட்டதே! ஆகவே இந்த நிலையை எப்படிச் சமாளிப்பது என்பது தோன்ருமல் அவள் திண்டாடிஞள்; திணறிஞள்.

ஒவ்வொரு சமயம், கோமதியிடமே இதைச் சோல்லிவிட்டால் என்ன என்று அவளுக்குத் தோன்றும். "ஒங்க அண்ணுச்சியும் ஒன் புருசரும் இதெ நெனெச்சுத்தான் மாஞ்சு மருகிக்கிட்டு இருந்தாக, கோமு. ஆன, அவுக ரெண்டு பேரும், 'நல்லவுங்களுக்கு அடையாளம் சொல்லாமப் போகுது' இங்கறதுபோலே நல்லவுகளாகப் போயிட்டாக. இப்பொம் நீயும் நானுந்தான் நம்ம பாளாப்போன கண்ணுலே, காந்தி கன்னி களியாமலே நிக்கப் போகுதெப் பார்த்கிட்டிருக்கும்படியா ஆயிடிச்சு," என்று உள்ளதை உள்ளபடி சொல்லி விட்டால், தொல்லை தீர்ந்துவிடுமே என்று நினைப்பாள். ஆனல், இன்னும் ஆலோசித்துப் பார்க்கும்போது வேருெரு கேள்வியும் தொடர்ந்து எழும். கோமதியே இதைத் தவருக எடுத்துக் கொண்டு விட்டால்? 'என் மகள் ஏழையாகி விட்டதால், அவளைத் தன் மகனுக்குக் கட்டிக் கொள்ள மதனிக்குப் பிரியமில்லை; அதனல் தான் இப்படி ஏதேதோ கதை கட்டிக் கூறுகிருள்' என்று அவள் நினைப்பதற்கும் இடம் இருந்ததே!

'சே! நம்ம கோமு அப்பிடி நெனெக்கக்கூடிய புள்ளெ இல்லே. அதுக்கு அதன் அண்ணனும் மதனியும் எப்படிப்பட்டவங்கன்னு தெரியாதா? இல்லே, நெனெச்சுதுன்ஞலும் நெனெச்சுட்டுத்தான் போகட்டுமே? எப்படியாவது நம்ம கொளந்தைகளுக்கு ஆபத்தில்லாமப் போயிடுமில்லே!

'ஆமா, அது சரி. இதுனலே கோமு வாயை மூடிப் போடலாம்; ஆன ஊர்ச் சனங்க வாயை மூட வளி? நாளைக்கு இந்தப் புள்ளெ 'சமஞ்ச'துன்னு, கலியாணம் எப்பொம், கலியாணம் எப்பொம்னு ஒருத்தர் ஒருத்தராகக் கேக்கத் தொடங்கிடுவாங்களே? அவுங்க கிட்டேயும், இதுன் தலையெளுத்து இப்பிடீன்னு சொல்லிக்கிட்டிருக்குதா? சொன்ஞக்கூட, அவுங்களுமில்லா கோமு நெனெச்சாப்பிலே நெனெச்சு என்னெப் பளிச்சுப் பேசுவாங்க!'

இப்படி நினைக்க நினைக்க, சிக்கல் மேல் சிக்கலாகத் தோன்றிக் கொண்டே போயிற்றேயன்றி, யாருக்கும் எவ்வித மனக்கசப்பும் இன்றி இப்பிரச்சினை தீரும் வழியைக் காண அழகம்மையால் முடியவில்லை. எப்படிப் பார்த்தாலும் கோமதிக்கு மனமுறிவு, ஊர்க்காரர்களின் அவதூறு – இவை போன்ற பல வம்புகளுக்கு இடமளிக்காமல் தன் மக்களைக் காப்பாற்ற முடியாது என்றே அவளுக்குப் பட்டது. அப்படியானல், அதற்குக் காந்திமதியின் வருங்கால இருள் ரகசியத்தை வெளியிட்டுத்தான் ஆகவேண்டும் என்ற கட்டாயங்கூட இல்லையே! நாளைக்குக் கலியாண விஷயமாகக் கோமதி பேச்செடுக்கும்போது, 'அவளுக்கு வேறே மாப்பிள்ளெ பாத்து முடிச்சுக்கலாம்; ஏன் புள்ளெகளுக்கு அவளெக் கட்டிக்கிட மாட்டேன்' என்று முரட்டுத்தனமாகக் கூறிவிட்டால் போதுமே!

கடைசியில் அழகம்மை இந்த முடிவுக்குத்தான் வந்தாள். அவளுக்குத் தெரியும், கோமு தன்னை ஒருபோதும் சந்தேகிக்க மாட்டாள் என்று. ஆகவே அவளுடைய மகளின் வருங்காலம் துயரம் வாய்ந்தது என்பதை எடுத்துச் சொன்ஞல், ஏற்கனவே மனம் நொறுங்கியிருக்கும் அவள் அப்படியே ஏங்கிப் போய் வாயைப் பிளந்தாலும் பிளந்துவிடக் கூடும் என்ற அச்சமும் அவளுக்கு இருந்

தது. ஆகையால்தான், என்ன வந்தாலும் வரட்டும், அவள் மனசைப் புண்படுத்திப் பரீட்சை செய்யக் கூடாது என்ற திடமான முடிவுக்கு அவள் வந்து சேர்ந்தாள்.

ஆனால் நாம் செய்யும் முடிவுகள் எல்லாம் சாசுவதமா? பச்சோந்தி சூழ் நிலைக்கு ஒப்ப நிறம் மாற்றிக் கொள்வதே போல், மனிதரின் மனமும் சமயத்துக்குத் தகுந்தபடி தனது கருத்துக்களை மாற்றிக் கொண்டு விடுகிறதே!

அப்படித்தான் அழகம்மையும் தன் முடிவை மாற்றிக் கொள்ளும் படியான கட்டம் ஒன்று ஐந்து வருஷங்களுக்குப் பின்பு வந்தது.

காந்திமதி 'திமு–திமு' வென்று வளர்ந்து கொண்டிருந்தாள். இதழ் விரிக்கத் தயாராகும் மொட்டைப் போல், அழகும் அங்கங்களும் பூரித்து வந்து கொண்டிருந்தன அவளுக்கு. முன்போல் அவள் நெல்லையப்பனுடன் வாய்விட்டுப் பேசிக் கல கலப்பாகப் பழகுவதில்லை. அந்தக் காளையை நேர் நோக்க நாணமுற்று, ஒளிந்தும், மறைந்தும், கடைக்கண் வீசிக் கண்டுகளித்து வந்தாள். இவற்றையெல்லாம் பார்க்கும்போது அழகம்மையின் உள்ளம் பொருமும். 'ஐயோ! இந்தக் குழந்தையின் ஆசைக் கனவுகளில், இன்ப நினைவுகளில், உல்லாசக் கனிவுகளில் மண்ணடிக்க வேண்டுமே!' என்று அவள் நெஞ்சு விம்மி அழும். ஆனால் அழுது என்ன பயன்? அழுகை அவள் அதிர்ஷ்டத்தை மாற்றிவிடப் போகிறதா? அவள் தலையெழுத்தை அழித்து எழுதிவிடப் போகிறதா? இனி எந்தச் சமயமும் இந்த மொட்டு மலர்ந்து விடும்; மணம் பரப்பத் தொடங்கி விடும். அந்தச் சமயம் மனசை முறித்துக் கொண்டாவது, அழகம்மை தன் கடமையை நிறைவேற்றித்தானே ஆக வேண்டும்? அதற்காக அவள் தயாராகிக் கொண்டிருந்த போதுதான், அந்த

தேவை

இவரைத் தெரியுமா?
சோர்வுற்றிருக்கும் இவருக்கு அயர்வைப் போக்க ஒரு சிட்டிகை ரத்தினம் பொடி தேவை

T.A.S.ரத்தினம் பட்டணம் பொடி

தபால் பெட்டி - 1151 சென்னை - 2.

முடிவையே கட்டாயமாக மாற்றிக் கொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

அழகம்மை மஞ்சள் குங்குமம் நீத்து வெள்ளைச் சேலைக்குள் புகுந்து உருமாறி விட்டாலும், அவள் உடல்நிலை என்னவோ சற்றும் மாறிவிடவில்லை. சொல்லப் போனால், அது முன்னிலும் கேவலமாகத்தான் ஆகிவிட்டிருந்தது. வழக்கமாக வருஷத்தில் சில நாட்கள் மட்டும் அவளுக்கு வரும் இழுப்பு நோய், இப்பொழுது பல நாட்கள் வர ஆரம்பித்திருந்தது. அதோடு முன்னிலும் அதிக நாள் நின்று, அவளை அதிகமாக அவதிப்படுத்தியும் வந்தது.

அப்பொழுது மார்கழி மாதம். பின்பனிக் காலம். இழுப்பு நோய்க்குக் கொண்டாட்டமான காலம் இல்லையா அது? அழகம்மைக்கு இத்தடவை இழுப்பு பிரமாதமாக வந்துவிட்டது. மூச்சு விடுவதே சிரமமாகி, ஆஸ்பத்திரி டாக்டர் வந்து சிகிச்சை செய்யும்படி ஆயிற்று. அப்படியும் விசேஷக் குணம் ஏற்படவில்லை. ஆகவே நெல்லையப்பன் 'கிருஷ்ணா அண்ட்

கோ' வாடகை மோட்டாரைச் 'சட்டம் கட்டி'க்கொண்டு பெரிய டாக்டரை அழைத்துவரத் திருநெல்வேலிக்குப் போயிருந்தான். முன்பு இத்தகைய நிலையில் இருந்த போது, எப்படிக் குத்தாலிங்கம் பிள்ளைக்கு இனித் தாம் பிழைக்க மாட்டோம் என்று தோன்றிற்றோ, அவ்வாறே அழகம்மைக்கும் இன்று அத்தகைய எண்ணம் ஏற்பட்டது. ஆகவே, அவரைப் போலவே இவளுக்கும் காந்திமதியின் இந்த வாழ்க்கை அலங்கோலத்தைப் பொறுப்பானவர் எவரிடமாவது கூறிவிட வேண்டியது அவசியமாயிற்று. முதலில் அவள் இதைத் தன் மகன் நெல்லையப்பனிடம் மாத்திரம் கூறி எச்சரித்து விடலாம் என்றுதான் நினைத்தாள். ஆனால் அவனோ இப்பொழுது ஊரில் இல்லை. அவன் திரும்பி வரும் வரையில் தன் உயிர் நிற்குமா என்ற சந்தேகம் அழகம்மைக்கு ஏற்பட்டது. ஆகவே, அவள் இவ்விஷயத்தைக் கோமதியின் காதுகளில்தான் போட வேண்டியதாயிற்று.

கவலை தோய்ந்த முகத்தோடு அருகில் அமர்ந்திருந்தாள் கோமதி. அவள் முகத்தை ஒரு தடவை கண் திறந்து பார்த்தாள் அழகம்மை. பிறகு மனசைத் திடப்படுத்திக்கொண்டு, மூச்சுத் திணறலையும் பொருட்படுத்தாமல், அந்த அவலச் செய்தியை அறிவித்து, ''இனிமே நீதான் கோமு, என் நெல்லைக்கும் திருமலைக்கும் அப்பனும் அம்மையும். அதுனாலே, அதுக நல்லாயிருக்க எது நல்லதுன்னு ஒனக்குப் படுதோ, அதைச் செய்துக்கிடு. இனிமே நான் என்ன சொல்லக் கெடக்குது....?'' என்று முடித்தாள்.

இதைச் சொல்வதற்காகவே காத்திருந்ததுபோல், அடுத்த சில நிமிஷங்களில் அழகம்மையின் தலை சாய்ந்துவிட்டது.

இந்த இழவுக்குத்தான் அன்று குத்தாலிங்கம் பிள்ளையின் வீட்டு வாசலில் ஊர் கூடியிருந்தது. அந்தக் கூட்டத்தில் இருந்தவர்கள் ஐந்து வருஷங்களுக்கு முன்னர் நிகழ்ந்த இழவை அச்சமயம் எண்ணி, காலம்செய்த ஜாலத்தை வியந்து கொண்டிருந்தனர்.

ஆனால், காலம் அந்த ஒரு ஜாலத்தைத்தானா செய்தது? இல்லை; மற்றொரு வர்ண ஜாலத்தையும் செய்துவிட்டது. மனிதரின் உள்ளத்திலிருந்தும் நினைவில் எட்டாத விசித்திர ஜாலம் அது.

அழகம்மையைப் பாடையில் ஏற்றி, முக்கடல் சுடுகாட்டுக்கு அனுப்பிய பிறகு, அழுதுகொண்டிருந்த பெண்டிர் குளிக்கக் கிளம்பினர். கோமதியைக் கிளப்பிக் கொண்டு காந்திமதியை அவர்கள் தேடினர். அவள் பட்டகசாலையில் ஒரு மூலையில் ஒதுங்கி உட்கார்ந்து கொண்டிருந்தாள். அழுது வீங்கியிருந்த அவள் கண்களில் ஒருவித நாணமும் கவிந்திருந்தது. ''வா காந்தி. அத்தை போயிட்டா; அவளுக்கு ஒரு முளுக்கும் போட்டுட்டு வந்து பெறகு அளுதுக்கிட்டிரி'' என்று அவளைத் தொட்டு எழுப்ப வந்த சவுந்திரத்தாச்சியிடம், ''என்னைத் தொடாதீங்க, ஆச்சி!'' என்று கூறி எழுந்து விலகிக் கொண்டாள் காந்திமதி. அவளுடைய தலை வெட்கத்தால் கீழே தாழ்ந்தது.

சவுந்திரத்தாச்சி புரிந்துகொண்டாள். அவளுடைய கடாரம் போன்ற வாய் அச்சமயம் கிளப்பிய சொற்கள் அவ்வீடெங்கும் எதிரொலித்தன:

''இந்த அதிசயத்தைப் பாருங்கட்டி. எட்டியளா! எளவு விளுந்த வீட்டிலே கல்யாணமும் வந்து நிக்குது. சொக்கம்பட்டியா மக 'சமஞ்சு' இருக்கா....!''

(தொடரும்)

சிறையிருக்க நீதியுண்டோ?

அருள் செல்வநாயகம்

நுங்கும் நுரையுமாக வெருகல் கங்கை பெருகி ஓடிக்கொண்டிருந்தது. ஈழநாட்டினுக்கே தனியோர் அழகை ஈட்டும் மகாவலி கங்கையின் ஒரு கிளையான வெருகல் கங்கை ஓடும் அந்தக் கிராமத்திற்கே பெயர் வெருகல்தான்.

பச்சைப் பசேலென்ற பரந்த வயல் வெளிகளுக்கு உறைவிடமான வெருகல்ப் பண்ணையின் சொந்தக்காரன் முருகன். பெயருக்கேற்ப அவன் முருகு ததும்பிய அழகு வாலிபனாக இருந்தான்.

பெருகி ஓடும் வெருகல் கங்கை நீரைத் தன் பண்ணைக்குப் பாயவிட்டுக் கொண்டு துறைக்கு வந்தான் முருகன்.

மறு கரையிலே புதுக் குடத்துடன் நின்று கொண்டிருந்த பொன்னி அவனது கண்களுக்குப் பெரு விருந்தாகத் தோன்றினாள்.

பருவம் மெருகிட்டிருந்த பொன்னியின் மோகன உருவம் கட்டிளங்காளையான முருகனுக்கு இனிய விருந்தாக இருந்தது.

பொன்னி முருகனுக்கு முறைப் பெண். அவனுடைய அருமை மாமனின் ஒரே ஒரு குலக்கொடி. தனது பண்ணையைப் போல் இன்றொரு பண்ணைக்குச் சொந்தக்காரியான பொன்னியை அவன் சிறுவயதிலேதான் பார்த்தான். அன்றையத் தோற்றத்துக்கும், இன்றையத் தோற்றத்துக்கும் எடை போட்டான் முருகன்.

தன் அத்தான் தன்னையே குறிப்பாகப் பார்ப்பதைக் கீழ்க் கண்ணால் நோக்கிப் பெருமைப்பட்டாள் பொன்னி. ஆடி விளையாடிய ஆசை அத்தான் அல்லவா? துறையில் எத்தனை நாழிகைதான் அவளால் தாமதிக்க முடியும்? பருவப் பெண் அல்லவா? ஊரிலே நாலு கதை பரவுமே!... ஆசை அத்தானை நோக்கிப் புன்முறுவல் பூத்தவாறு வீட்டுக்குத் திரும்ப முனைந்தாள் அழகுப் பதுமை.

அவள் போக முனைவதைக்கண்ட முருகன், தான் விரும்பின அவளை மனைவியாக அடைய வேண்டுமென்ற ஆசையை வெளியிடுகிறான். எப்படி?

"மாதாளம் பூவே, மலையில் அடை
பொழுதே
சிங்க மக ராசாத்தி, நீ சிறை யிருக்க
நீதியுண்டோ ?"

கன்னிச் சிறை இருப்பதை அத்தான் சொல்லக்கேட்ட அவள் பூரித்துப் போனாள். அத்தானுடன் வாழ வேண்டுமென்று சிறுவயது முதற் கொண்டு எண்ணியவளல்லவா? தன் எண்ணத்தை அப்படியே கவிதையிலே காட்டி விடுகிறாள்.

"வானத்தில் வெள்ளி மங்காமல் பூத்தது
போல்
சீனத்து வண்டே, சிறை இருக்கேன்
உன்னாலே!"

இனியென்ன?—உரித்துக்காரர்கள் ஒருவருக்கு ஒருவராகக்காத்திருந்தார்கள். காத்திருந்ததின் காரணமும், சம்மதமும் வெளியாகி விட்டனதானே! குறிக்கப்பட்ட சுப முகூர்த்தத்திலே, வெருகல் முருகன் சந்நிதியிலே பொன்னியின் கழுத்தில் மூன்று முடிச்சுக்களை முடிந்தான் முருகன். ★

தேவை — தியாகிகள்!

'இளம்பாரதி'

"தம்பி, தங்கம் தியேட்டருக்கு எதுடாப்பா வழி?"

"அடுத்த சந்து வழியே வலது பக்கம் திரும்பினுல் தெரியும்; சினிமாவுக்கா போறீங்க?"

"ஆமாம்ப்பா!"

"அடடா, நேரமாச்சே? இதுக்குள்ளே ஆரம்பிச்சாலும் ஆரம்பிச்சிருப்பாங்களே? மணி ஆறே முக்காலாச்சே?"

"அதனுலே என்னப்பா! வீட்டிலே ஜோலி முடிஞ்சுதானே வர முடியறது?"

அடுத்த சந்தின் திருப்பம் வந்து விடவே, அந்த அம்மாள் விடை பெற்றுக் கொண்டாள். தெருவோடு போய்க் கொண்டிருந்த என்னையும், என் நண்பர் கூட்டத்தையும் 'கவர்ந்திழுத்த' அந்த அம்மாளுக்கு வயது ஐம்பதுக்குக் குறையாமலிருக்கும். 'மடிசார்' வைத்துக் கட்டப்பட்ட அந்தப் புடவை, அந்த அம்மாள் கட்டாயம் இருபதாம் நூற்ருண்டின் தொடக்கத்தில் பிறந்து ஆசார நியமங்களில் ஊறிப்போனவள் என்று விளக்கம் தந்தது. 'தலை மயிர் நரைத்துப் போயிருப்பது சரியான பருவத்தில்தான்' என்று அந்த அம்மணியின் தளர்ந்த உடலும், தோல் சுருக்கங்களும் கிழட்டுத் தன்மைக்குச் சாட்சியம் கூறின.

"சினிமாப் பார்க்கப் போகிற வயசைப் பாருடா! இந்தக் கட்டைகளெல்லாம் படம் வெளி வந்த முதல் வாரத்திலேயே ஆஜரானுல் நமக்கெல்லாம் எப்படிடா டிக்கெட் கிடைக்கும்?" — இவை நண்பன் ராமகிருஷ்ணன் அனுபவித்துச் சொன்ன வார்த்தைகள். அத்தனையும் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவையே— முடிந்தால் வைர எழுத்துக்களால்!

"ஏண்டாப்பா அலுத்துக் கொள்றே? நேற்று சினிமாவுக்குக் கிளம்பினுயே, டிக்கெட் கிடைக்கலையாக்கும்?" — இப்படிச் சொல்லி, எனக்குத் தெரியாத ரகசியத்தைக் கிளறி விட்டான் இன்னொரு நண்பன் சங்கரன்.

பிறந்தது முதல் கேட்டிராத ஏதோ ஹாஸ்யத்தைக் கேட்டு அனுபவிப்பதாக 'படீர்'ச் சிரிப்பை வெளிக் கிளப்பி அடக்கியதும், நண்பர்களைப் பிரிந்து என் வீட்டிற்குச் செல்ல வேண்டிய திருப்பம் வந்தடைந்ததும் ஒன்று போலச் சரியாக இருந்தது.

அவர்களிடம் விடை பெற்றுக் கொண்டு வீடடைந்தேன். நான் எதிர்பார்த்தபடி என் இதயத்துச் சொந்தக்காரி வசந்தா வாசற்படியில் எனக்காகக் காத்திருந்தாள். நாங்கள் இருவரும் ஒரு மாதத்திற்கு முன்புதான் சிரித்த மலர்களாக இணைக்கப் பட்டிருந்தோம்.

"ஏன் வசந்த், ரொம்ப நேரமாகக் காத்திருக்கிருயோ? அம்மனை கர்ப்ப கிருகத்திலல்லவா பக்தன் தரிசிப்பது வழக்கம்!"

"என்னேடு பேசினது போதும். நானும் அதுமாதிரி கல்லாக இருந்தால், அடுப்பங்கரையிலேயே இருந்திருப்பேன். பாழும் மனசுண்ணு ஒண்ணை...."

"ஆண்டவன் படைச்சிருக்கானேண்ணு வருத்தப் படுறியா? அது எனக்காக, வசந்த், எனக்காக.... மறந்திடாதே!"

"அத்தை தியாகி மட்டுமல்ல; அறிவாளியுங் கூட!" என்று மாமியாருக்கு நற்சாட்சிப் பத்திரம் வழங்குகிருள் மருமகள்!

"உங்க கிட்டே கோழைத் தனமுண்ணு ஒண்ணை அவனே படைச்சிருக்கானே அது எனக்காக. அன்பரே, எனக்காக!"

இவ்வளவு அழகாகப் பேசும் மனைவியைவிட ஒருவனுக்கு வாழ்க்கையில் என்னதான் தேவையாக இருக்க முடியும்? என்னில் பீறிட்டு வந்த உணர்வை – என் வசந்தாவிற்கு மட்டுமே உரிமையான உணர்வை–அடக்க மாட்டாமல், ஏற்கனவே சிவப்பாகியிருந்த அவளது கன்னத்தைக் கிள்ளக் கையெடுத்தேன். சாகஸக்காரி, தன் சடைப் பின்னல் சுழன்றாட என்னை மயக்கும் சிரிப்பைச் சிந்திக்கொண்டே உள்ளறையை நோக்கி ஓடினாள். வழக்கம் போல அவளைப் பின் தொடர்ந்தேன் – சிந்தப்பட்ட சிரிப்பை என் மனப் பைக்குள் பத்திரமாக எடுத்துப் போட்டுக்கொண்டு.

"நீங்க செய்ய வேண்டிய வேலையை இன்றைக்கு நானே செய்துட்டேன். நான் தைரியசாலிதானே?"

"என்னவாம்?"

"இப்போது நாம் ரேஸ் கோர்ஸுக்குப் போகிறதுக்கு அத்தையிடம் அனுமதி வாங்கி விட்டேன்."

"உண்மையாகவா, வசந்த்? எனக்கு மயக்கம் வருகிறதே! அம்மாவாவது அனுமதி தருகிறதாவது? சும்மா அளக்காதே!"

"உங்களைப்போல அசடா நான்? அப்படியே ஜான்ஸி ராணியின் நேர் வாரிசாக்கும், தெரிந்து கொள்ளுங்கள்."

எழில் நிலவு குளுமை கூட்டிச் சிரிக்க எத்தனித்தது.

"அங்கே என்னடா அரட்டை, காபிக்கூடக் குடிக்காமல்? ஏம்மா, அவனுக்குத்தான் தெரியலே ....! நீயாவது இதையெல்லாம் கவனிக்க வேண்டாமா?"

எழில் நிலவைக் கிரகணம் பீடித்தது. இந்த உலகத்தில் தான் ஒருத்தி இருப்பதை எங்களுக்குத் தெரிவிக்க என் தாய் அந்த அறைக்குள் நேரே தோன்றி விட்டாள். கிரகணம் எப்போது நீங்குமோ?

தாய் கொண்டு வந்த காப்பியைக் கொட்டிக் கொண்டேன்.

"ஏண்டாப்பா, குழந்தை ரேஸ் கோர்ஸுக்குப் போகணும்னுளே, போகல்லியா?"

"போகிறதிற்காகத்தான் கிளம்பிக்கிட்டிருக்கோம்."

எச்சில் கூட்டி விழுங்கி அபிப்பிராயத்தை வெளியிட்டேன். என்னுடைய பயங்கொள்ளித்தனத்தை ஏளனம் செய்து வசந்தா என்னைப் பார்த்தாள். நல்ல பிறப்பெடுத்தேன்—தாய்க்கு அடங்கின பிள்ளையாக! சொல்லிக் கொள்ளவே வெட்கமாக இருக்கிறது.... சேச்....சே....!

"நீ கொஞ்சம் சிக்கிரமாக ஆபீஸிலிருந்து வந்திருந்தால் நானும் வெளியே எங்கேயாவது போயிருப்பேன். இனி இருட்டின பிறகு எங்கே போக...?"

அம்மா பேசி முடித்த போது எனக்கு 'பகிர்' என்றது. அவளும் எங்களுடன் ரேஸ் கோர்ஸுக்குக் கிளம்பி விடுவாளோ? பெருமூச்சு விடுவதைத் தவிர அந்தச் சமயத்தில் எனக்கு வேறொன்றும் தோன்றவில்லை.

"சரி, கிளம்புங்க சிக்கிரம். இப்பவே நேரமாகுது!"—அம்மா தான் பேசினாள்: "நான் இன்றைக்கு விட்டிலேதான் இருக்கணும் போலாச்சு. இருட்டிப் போச்சே!"

அப்பாடா! அவள் நீடூழி வாழ்க! கிரகணம் விடை பெற்றுக் கொண்டது.

எழில் நிலவு வானத்தில், சிரிக்க ஆரம்பித்தது. நாங்கள் இருவரும் ரேஸ் கோர்ஸை அடைந்த போது.

"வசந்த், இன்றைக்கு ஒரு வேடிக்கை, கேளேன்! ஆபீஸிலிருந்து வரும்போது நம்ம அம்மா மாதிரி ஒருத்தி தங்கம் தியேட்டருக்கு ஓடோடிப் போகிறாள். வயசு என்ன இருக்கும்னு நினைக்கிறே? அம்பதுக்கு ஒரு விநாடி குறையாது, ஆமாம்!"

"இப்படிக் கணக்கிலே துல்லியம், பயமுறுத்தல், அரட்டை எல்லாம் என்னிடத்திலேதான். நீங்களே சொல்லுங்க, தினம் அத்தை வெளியே போறுங்களே, அப்படி நம்மாலே போக முடியறதா? 'கோவிலுக்குப் போறேன், அங்கே போறேன்'னுட்டு சுத்தப் போயிடறுங்க. இனிமே என்ன ஆனாலும் சரி, நானும் அவங்களோடே கிளம்பிடப் போறேன்."

"ஏய், இனிமேல் நம்மை நட்டாற்றில் விட்டுடுவே போலிருக்கே?"

"உங்க அம்மாவை எதிர்க்கத் தைரியம் வந்துட்டுதுன்னு சொல்லுங்கள். நாளைக்கே 'நல்ல காலம் வந்து போச்சு' படத்துக்குப் போகலாம் ...ம், சரின்னு சொல்லுங்களேன்."

"ஆல் ரைட்!"

"ஆகா!"

இப்படி ஒன்பது மணி வரை தனிமையை அனுபவித்துவிட்டு வீட்டிற்குக் கிளம்பினோம். பஸ்ஸிலிருந்து மேல மாசி வீதியில் இறங்கும் போது, நண்பன் சீனிவாசனின் நினைவு வந்தது. இரண்டு வாரங்களுக்கு முன்புதான் அவனுக்குத் திருமணம் நடைபெற்றிருந்தது. போகிற வழியில் அவனைப் பார்த்துப் போகலாமென்று அவனுடைய வீட்டை நோக்கிப் போனோம். நாங்கள் போன சம

யத்தில் நண்பனும் அவனுடைய மனைவியும் வராந்தாவில் இருந்து பேசிக் கொண்டிருந்தார்கள்.

"கல்யாணத்தை ஆந்திராவில் நடத்திவிட்டு வந்து விட்டாயே? நாங்களெல்லாம் உன் கல்யாணத்திற்கு வரக்கூடாதென்று உன் நினைப்பா?"

"என்ன அப்பனே செய்யறது? இவளைக் கேளு... தன் வீட்டிலே தான் நடக்கணும்னுட்டு இவளுடைய அப்பா அங்கே நடத்திட்டாரு."

"சரி, சரி. என்னிடமிருந்து கல்யாணப் பரிசு வாங்க உனக்குக் கொடுத்து வைக்கல்லே, அவ்வளவு தான்! அதனுலென்ன, சிக்கிரமே கிலுகிலுப்பை பரிசு தந்து விடுகிறேன். சரிதானே?"

புதுமணத் தம்பதிகள் சிரித்தார்கள்.

"சீனிவாசா, நாங்க வர்றோம்! நேரமாச்சு; அம்மா காத்திருப்பாங்க....!"

"இதோ, எங்கம்மா வருகிற நேரந்தான். வந்ததும் பார்த்துவிட்டுப் போகலாம்."

"சரி, நானும் இதுவரைப் பார்த்ததில்லையல்லவா? பார்த்துவிட்டே போகிறோம். ஆமாம், கல்யாணத்திற்கு வந்தவங்க இன்னும் கிராமத்துக்குத் திரும்பிப் போகலையா?"

"இன்னும் போகவில்லை. அவள் தானப்பா எங்களுக்கு ஒத்தாசையாக இருக்கிருள். இல்லையானல், 'இவளு'டைய சமையலைச் சாப்பிட்டுவிட்டு இப்படி இருக்க முடியுமா?"

"வீட்டுக்கு வீடு நிலைப்படி தானப்பா!"

சாமர்த்தியமாகப் பேசிவிட்டதாக நினைத்துக்கொண்டு, கிண்டலாக வசந்தாவை நோக்கினேன்.

பேச்சுரிமை ஆணினத்திற்கு மட்டும்தானு சொந்தம்? பெண்ணினத்திற்கும்தான் உண்டு!—இதை என் மனைவி வசந்தா உடனே நிரூபித்து விட்டாள்.

''நாங்க பேசாமலிருந்தால் கைக்கெட்டாத தூரம் போயிடு விங்க போலிருக்கே? கொஞ்சம் 'ப்ரேக்' போடுங்க....!''

பெண்ணினம் காக்கப்பட்டதற்காக நண்பனின் மனைவி சிரித்தாள். தன் கட்சியை ஆதரிக்க இன்னொருத்தி இருப்பதை அறிந்த என் மனைவி வெற்றிப் புன்னகை புரிந்தாள்.

''யாருடா தம்பி, இவங்களெல்லாம்? ஏன் இங்கேயே உட்கார வச்சிருக்கே; உள்ளே கூட்டிப் போகக் கூடாதோ?''

வாசலிலிருந்து ஒலி அலை மிதந்து வந்தது.

''அம்மா வந்தாச்சு,'' என்று நண்பன் கூறியதைக்கேட்டுவாசற் புறத்தை நோக்கிக் கழுத்தை வளைத்தேன் நான்.

''உங்க அம்மாவை எனக்குத் தெரியுமே!'' என்றேன், நண்பனை ஆச்சரியக் கடலில் மூழ்கச் செய்ய எண்ணி.

''அப்படியா? இன்னொரு விஷயம் தெரியுமோ? உங்கம்மாவும் எங்கம்மாவும் அடுத்தடுத்த கிராமங்களில் பிறந்து வளர்ந்தவங்களாம். ஆச்சரியமாக இல்லையா? நேற்று அம்மா கூடக் கோவிலுக்குப் போன போது உங்க அம்மாவைப் பார்த்தேன். விஷயத்தைத் தெரிந்து கொண்டேன்.''

''இந்தப் பிள்ளைதானப்பா இன்னிக்கு சினிமாக் கொட்டகைக்குப் போக வழி சொன்னான். திண்டாடிப் போயிட்டேன்!''

''அவன் எப்போதுமே யாருக்கும் ஆபத்பாந்தவன் தான் அம்மா!''

''இந்நேரத்திலே ஐஸ் கட்டியைத் தலையிலே வைக்காதே, அப்பனே, உடம்பு தாங்காது!''

அதன் பிறகு நானும் சீனிவாசனும் பல விஷயங்களைப் பற்றிச் சிறிது நேரம் தனிமையில் பேசிக் கொண்டோம். 'மனைவிகள்' தனியே அளவளாவிக் கொண்டார்கள். பின்னர், முறைப்படி நானும் வசந்தாவும் அவர்களிடமிருந்து விடை பெற்றுக் கொண்டோம்.

நள்ளிரவைக் குறிக்க மஹாலிலிருந்து எழுந்த மணியோசை சன்னமாகக் கேட்டது.

''உங்கள் நண்பரோடு ரொம்ப ரொம்ப நேரமாக என்னமோ பேசிக் கொண்டிருந்தீர்களே, என்னவாம்?''

''சொல்றேன், சொல்றேன். ரொம்ப சுவாரஸ்யமாகவும் இருக்கும். அம்மாவினுடைய திருட்டுத்தனத்தைக் கண்டுபிடித்து விட்டேன்...ஆமாம்!''

''............''

''என்ன, பேசமாட்டேங்கிறே? மாமியார் மேலே இருக்கிற கோபம் இன்னும் உனக்குத் தீரலையாக்கும்!''

''சத்தம் போடாதீங்க, அத்தை எழுந்து வந்துடப் போறாங்க!''

''அந்தப் பயமே வேண்டாம்!''

''ஏது, துணிவு பிறந்திருக்கு போலிருக்கே?''

''அம்மா தினமும் நம்மிடம் டிமிக்கி கொடுத்துவிட்டு எங்கே போகிறாள் தெரியுமோ, உனக்கு? அந்தக் கோவிலுக்கு, இந்தக் கோவிலுக்கு...''

''இவ்வளவுதானா? இது எனக்கு எப்பவோ தெரியுமே!''

''சரி, அதன் மூல காரணம் தெரியுமா? சொல் பார்க்கலாம்!''

''...............''

''இளம் உள்ளங்களைச் சஞ்சலப் படுத்த வேண்டாமென்பது எனது

மதிப்பிற்குரிய தாயின் உயரிய நோக்கமாகும். எனவே...''

"இங்கே ஒருவரும் தேர்தல் பிரச்சாரம் நடத்தச் சொல்லவில்லை. விஷயத்தைச் சீக்கிரம் சொல்லுங்கள்.''

''அம்மா வீட்டிலிருந்தால், நாம் எப்படி வீட்டிலே இருக்க முடியும்? வெளியே போனால் ஒரே சந்தை இரைச்சல். இந்த ஊர் நிலை ஒத்து வருகிற வரைக்கும் நீ அனாவசியமாக வெளியே சுற்றக் கூடாதாம். இன்னும் கேளு: பத்து நாட்களுக்கு முன்னே சீனிவாசனுடைய அம்மாவும் மீனாக்ஷியம்மன் கோவிலுக்குப் போயிருக்காங்க. அங்கே நம்ம அம்மாவும் அவங்களும் கண்டு பேசிக் கொண்டார்களாம். சின்ன வயதிலேயே நல்ல சிநேகமாம். 'குழந்தைகள் வீட்டிலேயே இருக்கட்டும். நீ தினமும் என்னைப் போல இங்கேயே இந்நேரத்துக்கு வந்துவிடு' என்று அம்மா சொன்னாங்களாம். அன்றிலிருந்து தினமும் 'இரண்டும்' எங்கேயானும் போயிடுமாம்; இன்னிக்கு ரெண்டு பேரும் தங்கம் தியேட்டரிலே சந்திச்சு, சினிமாப் பார்க்கிறதாகத் திட்டம் போட்டிருந்திருக்காங்க. ஆனால், பாவம், நான் ஆபீஸிலிருந்து தாமதமாக வந்ததினாலே, அம்மாவாலே அங்கே போக முடியவில்லை....!''

''இதே நிலை நீடிக்குமானால், அத்தை மற்றவங்களையும் சேர்த்து 'மாமியார் சங்கம்' ஏற்படுத்தி, மதுரையைத் தலைமைக் காரியாலயமாக அமைச்சுடுவாங்க போலிருக்கே!''

''அம்மா மாதிரித் தியாகிகள் தான் நம் உலகத்திற்குத் தேவை, இல்லையா, வசந்த் தேவி?''

"அத்தை தியாகி மட்டுமல்ல; அறிவாளியும் கூட. இல்லாவிட்டால் என்னைத் தம் மருமகளாகத் தேர்ந்தெடுப்பார்களா?'' ★

நாணயத்தின் விலை

அழுக்கும் வியர்வைக் கறையும் படிந்த தனது பழைய கோட்டின் உட்புறமிருந்து, கழுகாசலம் பிள்ளை ஒரு காகிதக் கற்றையை வெளியே எடுத்தார். அவர் நெஞ்சு அடித்துக் கொண்டது; கைகால்கள் நடுங்கின. ஒரே சமயத்தில் வெறுப்பும் வெளுப்பும் முகத்தில் இழை இழையாகப் படர்ந்தன. செம்பட்டை விழுந்த உடல் ரோமங்கள் வியர்வையால் நனைந்து உடம்போடு படிந்து போயிருந்தன. நெற்றிச் சுருக்கங்களிடையே தேங்கி நின்ற வியர்வைத் துளிகள் அந்தக் காகிதக் கற்றையின் மீது கொட்டின.

கழுகாசலம் பிள்ளை, அழுக்குப் பட்டுக் கிழிந்து போன மேல் துண்டினால் அந்தக் கற்றைக் காகிதங்களின் மீது விழுந்த வியர்வைத் துளிகளை வழித்துத் துடைத்தார். அவருடைய அலங்கோல நிலையும் படபடப்பும் அவருடைய மனைவி லோகநாயகியை ஓர் ஆட்டம் ஆட்டி விட்டன. அவளுக்கு விஷயம் எதுவும் புரியவில்லை. கழுகாசலம் பிள்ளையின் தோற்றம் அவளுடைய வாயையும் இறுக்கி மூடி வைத்து விட்டது; அசைவற்றுப் போய் எதிரேயே நின்று கொண்டிருந்தாள்.

கழுகாசலம் பிள்ளையின் கிழடு தட்டிப் போன கைகள் இரண்டும், லோக நாயகியின் வலிமையற்ற கைகள் இரண்டையும் பிடித்து இழுத்து, அந்தக் கைகளில் அந்தக்



நாணயம் சிரித்தது: அந்தச் சிரிப்பில் தந்தை, தாய், தனயன் மூவரும் சாகாமல் செத்துக் கொண்டிருந்தார்கள்!

காகிதக் கற்றையை வைத்துத் திணித்தன.

லோகநாயகியின் கைகள் 'வெட வெட' வென்று ஆடின. கற்றையைப் புரட்டிப் பார்த்தாள். ஒரு சில விநாடிகளுக்குள், அந்தக் கற்றையையும், கமுகாசலம் பிள்ளையின் முகத்தையும் நான் கைந்து முறை மாறி மாறிப் பார்த்தாள் லோகநாயகி.

இந்தக் கற்றையிலுள்ள அவ்வளவும் பத்து ரூபாய்த் தாள்கள்! எல்லாவற்றையும் கூட்டிப் புள்ளி விவரம் போட்டால், ஆயிரத்து நூறு ரூபாய்க் கணக்குக்கு வரும்! அடேயப்பா! ஆயிரத்து நூறு ரூபாயா? கந்தல் வேஷ்டி ஐயனார் கோவிலில் பட்டு வேஷ்டியா?

"இவ்வளவு ரூவா ஏதுங்க...?"

இடுப்பு வேஷ்டிக்கு அரையணாச் சவுக்காரக் கட்டி வாங்க முடியாத கமுகாசலம் பிள்ளைக்கு ஆயிரத்துச் சொச்ச ரூபாய் எப்படிக் கிடைக்கக் கூடும்?

"என்னடி, அப்பிடிப் பாக்கிறே? ரூவாயைக் கொண்டேயெக் குடு."

"பணம், யார் குடுத்தாக?"

"குடுப்பாக...."

"அப்பிடியின்னு...."

"திருடியாந்தேன்."

"ஆ.........?"

"சரிதான், சீக்கிரமாக் கிளம்பு புள்ளே ரயிலுக்கு....!"

* * *

கமுகாசலம் பிள்ளைக்கு ஏறக் குறைய வயது ஐம்பத்தாறு ஆகிக் கொண்டிருந்தது. சுமார் முப்பது வருஷங்களுக்கு முன்பு வட்டிக் கடை ராமலிங்கம் செட்டியாரிடம் கணக்குப் பிள்ளையாக அமர்ந்தார் அவர். அதற்குப் பிறகுதான் லோகநாயகியைக் கை பிடித்தார். அவரிடம் விசுவாசமும், பணிவும் உள்ள ஊழியராக முப்பது வருஷங்கள் கணக்கு எழுதினர். இருபது ரூபாயில் ஆரம்பித்த சம்பளம், முப்பத்தைந்து ரூபாயாக மாறியது. கிழடு தட்டிப் போன உள்ளத்தைக் கொண்டு நல்லது செய்யக் கற்றுக் கொண்டவர் தான் பிள்ளை.

கு. நா. கிருஷ்ணமூர்த்தி

கமுகாசலம் பிள்ளைக்கு இரண்டு பெண்களும், ஓர் ஆணும் பிறந்தனர். ஆண்தான் கடைசிப் பிள்ளை. பெண்களைப் பற்றித்தான் உலகம் கவலைப்படும். ஆனல், கமுகாசலம் பிள்ளை கவலைப்பட்டதெல்லாம் தன்னுடைய ஒரே மகனைப் பற்றித்தான். செட்டியாரின் தயவினல் இரண்டு பெண்களையும் 'காமா—சோமா' என்று பிடித்துக் கொடுத்து விட்டார். பையன் மட்டுமே பாக்கிப் பட்டுப் போய் நின்ருன். அவனை ஒரு தாசில்தாராக ஆக்கா விட்டாலும், ஒரு தாலுகா ஆபீஸ் குமாஸ்தாவாகவாவது ஆக்கிவிட வேண்டும் என்றுதான் அவரும் மகனைப் படிக்க வைத்தார். முடிவில், 'பையனுக்குப் படிப்பு வராது' என்பதைத்தான் அவர் படித்துக்கொள்ள வேண்டியதாயிற்று. பையன் சுந்தரம்—அது தான் அவன் பெயர்—படித்துக் கொண்டவைகளும் உண்டு. பிள்ளையைப் பெற்றவர்கள் எல்லோரும் அடிக்கடி சொல்லிக் கொண்டிருப்பார்களே—ஊதாரித்தனம், போக்கிரித்தனம் என்று—அவைதாம் சுந்தரத்திற்குப் புலமை அளித்த பாடங்கள்!

பையனைச் சீர்திருத்த கமுகாசலம் பிள்ளை எத்தனையோ முறைகளை யெல்லாம் கையாண்டு பார்த்து விட்டார். வெற்றியெல்லாம் பையனுக்கே கிடைத்தது. அவர்

தனக்குக் கிடைத்த சலிப்பையும், வெறுப்பையும் வைத்துக் கொண்டு என்ன செய்ய முடியும்? ''நீ கெட்டுக் குட்டிச் சுவராப் போ'' என்று முடிவில் பையனைப் பற்றிக் கவலைப் படுவதையே விட்டுவிட்டார்.

வாயும் வயிறும் வேருக இருந்தாலும், தாயும் பிள்ளையும் ஒன்று தானே? கையைக் கழுவினாலும், தலையை முழுகினாலும், தகப்பன், தன் பிள்ளைக்குத் தகப்பன்தான்; மகன் தன் தகப்பனுக்கு மகன் தான். இதில் யாருக்கு விதிவிலக்குக் கொடுக்க முடியும்?— அதுவும் சுந்தரம் அவருக்கு ஒரே பையன். அவருக்கும் வயதாகிவிட்டது. எப்படி அவர் மகனை அடியோடு மறந்துவிட முடியும்? பாசம் என்பதுதான் இலேசுப்பட்டதா? அது காட்டாறு. பெருக்கெடுக்க ஆரம்பித்தால், அதன் வேகமும் போக்கும் நமக்குத் தெரியாதா?

சுந்தரம் ஊரில் உள்ள காலிகளுடன் சேர்ந்து முழுக்க முழுக்கக் கெட்டுப் போய் விட்டான். எல்லை மீறிப் போனதும், 'வயிற்றிற் கில்லை என்ருல் பையன் வழிக்கு வந்துவிடுவான்' என்ற நினைப்பில், கழுகாசலம் பிள்ளை தன் மகனை, ''வீட்டு வாசற்படியிலே காலை வைக்கப்படாது!'' என்று கண்டித்து விரட்டி விட்டார்.

அப்போது சென்றவன்தான் சுந்தரம்! நாலைந்து வருஷங்கள் வரை அவனைப் பற்றிய செய்திகள் எதுவுமே கழுகாசலம் பிள்ளைக்கு எட்டவில்லை. பையனைப் பற்றிய எண்ணங்கள் அடிக்கடி கழுகாசலம் பிள்ளைக்கு வேதனையைத் தந்தாலும், அவர் அந்த வேதனையை இதுவரை வெளிக் காட்டிக் கொண்டதில்லை. லோக நாயகி மட்டும்தான் பல சமயங்களில் அழுதழுது தேம்புவாள். ஒரு நாள் கழுகாசலம் பிள்ளை வழக்கம் போல வீட்டிற்குள்ளே நுழைந்த போது, அங்கே தாயும் மகனும் ஒருவரை ஒருவர் கட்டிப் பிடித்துக் கொண்டு அழுது குலுங்குவதைக் கண்டதும், அப்படியே ஸ்தம்பித்துப்போய் விட்டார். அவர் மனம் பழைய துயரத் திருப்பங்களுக்கெல்லாம் சென்று திரும்பி வந்து கொண்டிருந்தது. லோக நாயகியும், சுந்தரமும் நின்று கொண்டிருந்த நிலை, கழுகாசலம் பிள்ளையின் நெஞ்சையும் ஒரு கலக்குக் கலக்கி விட்டது. தானும் மகனைக் கட்டிப் பிடித்துக்கொண்டு ஒரு குரல் அழவேண்டும் என்றுகூட நினைத்து விட்டார்.

வாசற் படியில் நின்றபடியே தன்னைப் பார்த்துக் கொண்டிருப்பதைத் தற்செயலாகத் திரும்பிச் சுந்தரம் பார்த்தான். அவ்வளவு தான், 'அப்பா' என்றபடி ஓடி வந்து, கழுகாசலம் பிள்ளையின் கால்களில் விழுந்தான். ''என்னை மன்னித்து விடுங்கள், அப்பா,'' என்று சுந்தரம் தேம்பினுன். அதைக் கண்டபோது, கழுகாசலம் பிள்ளைக்கு ஆனந்தத்தினுல் எலும்புகளெல்லாம் உருகி வழிவதைப்போலத் தோன்றியது. உண்மையில், ஒரு தந்தைக்கு வேறு எந்தச் செயல் மகிழ்ச்சியைக் கொடுத்துவிட முடியும்? மகன் திருந்தி நல்வழியில் நடக்கிருன் என்பதைக் கேட்பதிலும், பார்ப்பதிலும் உண்டாகும் இன்பத்தை விட, அந்த மகனுல் உண்டாகும் வேறு எந்த இன்பமும் இரண்டாந் தரந்தானே?

கழுகாசலம் பிள்ளை, தன் மகன் முற்றிலும் திருந்தி விட்டான் என்று நினைத்து, அவனை ஆசையோடு வாரித் தழுவி அணைத்துக் கொண்டார். உச்சி முதல் உள்ளங்கால் வரை அவருக்கு ஒரே புல்லரிப்பாக இருந்தது. கண்கள் இரண்டும் வெள்ளத்தைக் கொட்டிக் கொண்டிருந்தன.

மின் போக்கு 'திடு திப்'பென்று தடைப் படுவதைப்போல, அங்கே நிலவிக் கொண்டிருந்த அமைதியும், 'திடுதிப்'பென்று தடைப் பட வேண்டியதாயிற்று.

''அப்பா, உங்கள் வார்த்தையைக் கேட்காமல் போய் விட்டேன். பத்தாயிரம் தடவை படித்

துப் படித்துச் சொன்னீர்கள். அப்போது எனக்கு ஏருமல் போய்விட்டதே! நான் எப்படியப்பா வாயைத் திறந்து சொல்வேன்?'' என்று சுந்தரம் கதறினன்.

''நான் எப்படியப்பா வாயைத் திறந்து சொல்வேன்?'' —இந்த ஐந்து வார்த்தைகளும் அவருடைய காதுகளில் மோதி எதி

ரொலி செய்தன. அவருக்குச் சுந்தரம் என்ன சொல்லுகிறன் என்று சரிவரப் பிடிபடவில்லை. இரண்டு வினடி வரை அந்த அதிர்ச்சியும் அவரை விட்டு நீங்கவில்லை. 'மகன் உண்மையிலேயே திருந்தியிருந்தால், அவனுக்கு என்ன துன்பம் வந்திருக்கக்கூடும்?' என்று சற்று சிந்தனை செய்தார். திகைப்பும், குழப்பமுமே உண்டாயின. 'அவன் ஏதோ ஒரு பெரும் குற்றத்தைச் செய்திருக்க வேண்டும்' என்று மட்டும் அவருக்குத் தெளிவாகத் தெரிந்து விட்டது.

'என்ன குற்றம் செய்து விட்டு வந்திருப்பான்?' —கழுகாசலம் பிள்ளை, மகனை வெறுப்புக் கலந்த பார்வையுடன் நிமிர்ந்து நோக்கினர். அந்தப் பார்வைக்கு முன்னே சுந்தரத்தினல் நிமிர்ந்து நிற்க முடியவில்லை. தீராத விசாரம் ஏறி அமுக்குவதைப் போல அவனுடைய தலை கீழே தாழ்ந்தது.

ஒரு மாதிரியாகக் கழுகாசலம் பிள்ளைக்கு விஷயத்தை மிக ஜாக்கிரதையாக எடுத்துச் சொன்னள் லோகநாயகி. 'தன் மகன், யாரையோ கொலை செய்து விட்டுத் தப்பி ஓடி வந்திருக்கிறன்' என்பதைக் கேட்டதும், கழுகாசலம் பிள்ளைக்குச் 'சொரேர்' என்றது. பீதியும் கலக்கமும் தோன்றி, நெஞ்சிலும் முகத்திலுமாகப் பரவி நின்றன. ''தன் மகன்

கொலேகூடச் செய்து விட்டானு?' என்று நினைத்துப் பார்க்கக் கூட அவரால் முடியவில்லை.

"அப்பா, என்னைக் கைவிட்டுடாதிங்க, அப்பா...?"

"அட, கொலேகாரப் பாவி! இப்பவே எழுந்திருச்சு ஓடிப்போயிடு. இருந்தே, நானே போலீஸிலே புடுச்சுக் குடுத்திடுவேன்!"

"அம்மா, நான் ஸ்டேஷனுக்குப் போறேன், சொன்னதை மறந்துடாதே!" என்று கூறி விட்டு அங்கிருந்து ஓடினுன் சுந்தரம்.

"ஸ்டேஷனுக்கா? அட, எந்த ஸ்டேஷனுக்குப் போருனும்?"–கழுகாசலம் பிள்ளை வாயைத் திறந்து, ஏதோ ஓர் ஆவேசத்துடன் லோகநாயகியைப் பார்த்துக் கேட்டார்.

"'ஆயிங்குடி டேசன்லே இருக்கிறேன்; துணி மணிகளே மூட்டை கட்டி எடுத்துக் கிட்டு வா'ன்னு சொல்லியிருந்தான். அங்கேதான் போருன்."

"போறத்துக்கும், கைச் செலவுக்கும் கொஞ்சம் பணம் வேணுமாம்...." என்று லோகநாயகி விஷயத்தைச் சொல்லி முடிப்பதற்குள், கழுகாசலம் பிள்ளைக்குச் செய்தி விளங்கி விட்டது.

"என்ன புள்ளே! பணமா...?" என்று இழுத்தபடி நிமிர்ந்து பார்த்தார். அவளுடைய தோற்றம், 'ஏதாவது கொடுத்து அனுப்ப வேண்டாமா?' என்று முறையிடுவதைப் போல் காணப்பட்டது.

கழுகாசலம் முப்பத்தைந்து ரூபாய்க்குக் கணக்கெழுதிக் கொண்டிருக்கிருர். ஒரு நல்ல சாப்பாடோ, துணிமணியோ எதுவுமே அபூர்வமாக இருக்கும் போது, பணத்திற்கு எங்கே போவார்? அவருடைய கை, கால், நெஞ்சு, வாய் எல்லாமே மடங்கிப் போயிருந்தன.

'பெற்ற கடமைக்காக ஏதாவது கொடுத்துத் தொலேக்கத் தான்

பயிற்சி மொழி தமிழ்

கல்வித் துறையில் அந்தந்தப் பிரதேசத்து மொழியிலே தான் அந்த அந்தப் பிரதேசத்தில் படிப்பு நடைபெற வேண்டும்.

—ராஜாஜி

எல்லாக் கல்வியும் ஆரம்பத்திலிருந்தே பிரதேச மொழியில்–தமிழில்தான் போதிக்க வேண்டும் என்ற கொள்கையை உடனடியாகச் செயற்படுத்த ஆரம்பிப்பதுதான் நல்லது.

—நாமக்கல் கவிஞர்

கல்வி, கலே, கலாசாரம் ஆகிய துறைகளில் தாய் மொழிக்குரிய இடத்தை எக்காரணத்தை முன்னிட்டும் அன்னிய மொழிக்கு வழங்கக் கூடாது. அப்படி வழங்குவது காந்தியத்துக்கு விரோதமாகும்.

—ம. பொ. சி.

தாய் மொழியிலேயே எந்தக் கல்வியும் எவர்க்கும் தரலாம்.

— சோமசுந்தர பாரதியார்

ஒருவர் தான் கற்கும் பாடங்களேத் தாய் மொழியிலேயே கற்றல் வேண்டும்.

—க. பொ. இரத்தினம்

தமிழ்வான் கலேச் சொல் மழை பொழியும்;

தமிழ்க் கடல் விஞ்ஞானச் சொல் முத்துச் சொரியும்.

புரட்சிக் கவிஞர்

'கலேக்கதிர்'

அத்தானும் நித்திரையும்

மைத்துனியின் குறும்பினுல் மலர்ந்த பாடல்:

உத்தமர் அத்தானும்
நித்திரை செய்திடவே
உடனே வழிசெய்வாய் தோழி ! (உத்)

பொத்த லான கட்டில்
போட்டதன் மேலே கோரைப்
புல்லை நிரப்பிச் சரல்
கல்லையும் மேல்பரப்பி (உத்)

கடியெறும் பினில் ஒரு படிசேர்த்து—நீ
கட்டிலின் மேல் சிதறிவிடு பெண்ணே !
கொடிய பொடிமுட்டைப் பூச்சிகளை— வாரிக்
கொட்டி ரத்தங் குடிக்க விடு கண்ணே !
(உத்)

[அருமை மைத்துனியின் வம்பைக் கண்டு அத்தான் கோபங் கொள்கிருர் ; உடனே அத்தானுக்கு மனக் கிளர்ச்சி ஊட்டுவதற்காகப் பாடலின் கருத்தைத் திருத்திப் பாடுகிருள் மைத்துனி .]

(வேறு சந்தம்)

இத்தனை கோபமேன் அத்தானே?—உமக்கும்
இதுதான் கட்டிலென்று நினைத்தீரோ ?

இல்லையில்லையோ அன்பு மனத்தீரே !
ஏமாந்து போனீர் நல்ல குணத்தீரே! (இத்)

புத்தம் புதிய பட்டு
மெத்தை பரப்பி – ரோஜாப்
பூவின் இதழை மெத்தை
போலே நிரப்பி
அத்தர்ஜவ் வாது மணம்
மூக்கைத் துளைக்கும் !
ஆளை மயக்குந் தங்கக்
கட்டி லுமக்கே ! (இத்)

—புத்தனேரி ரா. சுப்பிரமணியன்

வேண்டும்' என்று அவருக்கும் தோன்ருமல் இல்லை. எதைக் கொடுத்து அனுப்ப முடியும்? 'முப்பது வருஷம் செட்டியாரிடம் உழைத்தும், ஓர் அபயஞ் சமயத் திற்கென்று கையில் ஒரு நூறு ரூபாய்கூட இல்லையே?' என்று அவருடைய உள்ளத்தில் ஒரு புதிய கோணல் உண்டாகியது !

* * *

அந்த ஆயிரத்து நூறு ரூபாய்களும், கழுகாசலம் பிள்ளை மீது அளவு கடந்த நம்பிக்கை வைத்திருந்த செட்டியாரிடமிருந்தே களவாடப்பட்டிருந்தன. என்ன துணிச்சல் ! கழுகாசலம் பிள்ளை எப்படி இந்தக் காரியத்தைச் செய்திருப்பார்? முப்பது வருஷங்களாகச் சிறுகச் சிறுகச் சம்பாதித்து வைத்திருந்த அத்துணை நம்பிக்கையையும் ஒரே நாளில், மகன் மீதுள்ள பாசத்தினுல் கெடுத்துக் கொண்டுவிட்டாரே !

லோக நாயகியினிடம் பணத்தைக் கொடுத்தனுப்பினுர். சுந்தரத்திடம் பணம் போய்ச் சேரும் வரை அந்தப் பணத்திற்கு எந்த வித ஆபத்தும் வரக்கூடாது என்று தனக்குத் தெரிந்த தெய்வங்களை யெல்லாம் வேண்டிக் கொண்டார். தனக்கு ஏற்படப் போகும் பழி பாவங்களைப்பற்றி அப்போது அவர் ஏதும் நினைத்துப் பார்க்கவே இல்லை. லோக நாயகியும் சுந்தரத்திடம் பணத்தைக் கொடுத்துவிட்டுத் திரும்பி வந்து விட்டாள். கழுகாசலம் பிள்ளை, 'இனிப் போலீஸே வந்தாலும் சரி, செட்டியாரே வந்தாலும் சரி' என்று சற்றுத் துணிந்தவராகவே வீட்டிலேயே உட்கார்ந்து விட்டார்.

கழுகாசலம் பிள்ளை விநாடிக்கு விநாடி போலீஸாரின் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்.

இருபது ஆண்டுகளுக்கு முன்பு, கழுகாசலம் பிள்ளையிடம் செட்டியார் இருபதினுயிரம் ரூபாய்ப் பணத்தைக் கொடுத்து வியாபார விஷயமாகச் சென்னைக்குப் போய் வரச் சொன்னுர். செட்டியா

ருடைய நெருங்கிய உறவினர் ஒருவர், 'அறிமுகம் சரியாக இல்லாத கணக்கப் பிள்ளையிடம் இருபதினுயிரத்தைக் கொடுத்து அனுப்புவது உசிதமாகத் தெரியவில்லை' என்று மெதுவாகச் சொன்னுர். அதைக்கேள்விப்பட்ட கழுகாசலம் பிள்ளையும், வேறு நம்பிக்கையான ஆள் வசமே கொடுத்து அனுப்பும்படி கூறிவிட்டார். செட்டியார் மட்டும், அவர் மீது துளி கூட அவநம்பிக்கைப் படாமல், 'நீமரு, கவலைப்படாதீம். அந்த மனுஷ்யன் ஆயிரத்தைச் சொன்னுலும், எனக்கு நம்பிக்கையான மனுஷ்யன் நீமரு தான்! நீமருதான் பணத்தை எடுத்துக்கிட்டுப் போயிட்டு வரோணும்'' என்று கழுகாசலம் பிள்ளையையே அனுப்பி வைத்தார். மற்றுமொரு முறை செட்டியாருடைய பணத்தை எடுத்துக் கொண்டு சென்னைக்குச் சென்றிருந்த சமயம், சென்னைப் பேர்வழி ஒருவன், வெளிப் பாக்கெட்டிலிருந்த ரூபாய் ஓராயிரத்தை அப்படியே விரல்ப் படாமல் அபேஸ் செய்து விட்டான். அப்போதும், கழுகாசலம் பிள்ளையின் மீது செட்டியார் சந்தேகப்பட வில்லை. கழுகாசலம் பிள்ளையின் இரண்டு பெண்களுக்கும் செட்டியார்தான் கைப் பணத்தைப் போட்டுத் திருமணமும் செய்து வைத்தார்.

இப்படிப் பலவிதமான சிந்தனைகள் கழுகாசலம் பிள்ளையைச் சுற்றிச் சூழ ஆரம்பித்தன. செட்டியாருடைய பரோபகாரக் குணமும், உயர்ந்த பண்பாடும் வெளிப்பட வெளிப்படக் கழுகாசலம் பிள்ளையின் மனம் தன்னுடைய குற்றத்தை நினைத்துப் புண்படத் துவங்கியது.

நன்றி கொன்ற மகனுக்கு எந்த அறநூலில் உய்வு கூறப்பட்டிருக்கிறது? மன உளைச்சலுக்கு ஈடு கொடுக்க முடியாமல் கழுகாசலம் அப்படியே கவிழ்ந்து போய் உட்கார்ந்திருந்தார். நிமிர்ந்து பார்க்கச் சந்தர்ப்பம் ஏற்பட்ட போது, எதிரே தோன்றினுர் போலீஸ் இன்ஸ்பெக்டர். அவருடைய வருகையினுல், உள்ளத்திலேயோ, தோற்றத்திலேயோ எவ்வித மாறுதலும் ஏற்பட வில்லை. அப்படியேதான் உட்கார்ந்திருந்தார்.

மாட்டை அடித்து அதட்டுவதைப் போல, ''நீர், இவனுக்கு ஆயிரத்து நூறு ரூபாய் கொடுத்தது உண்டா?'' என்று கழுகாசலம் பிள்ளையைப் பார்த்துக்கேட்டார் சப்-இன்ஸ்பெக்டர். அவர் நிமிர்ந்து பார்த்தபோது, அவருடைய மகன் சுந்தரம் போலீஸாருக்கு இடையே நின்று கொண்டிருந்தான்.

''ஆமாங்க....ஐயா .... நான்தான் கொடுத்தேன்.''

''இவன் உமக்கு என்ன உறவு?''

''எம்....மகன்''.

''இந்தப் பணம் உம்ம பணந்தானே?''

''பணம் எங்க செட்டியாருடையது.''

''உமக்கு அவர் கொடுத்தாரா?''

சப் இன்ஸ்பெக்டர் கேட்ட கடைசிக் கேள்விக்குக் கழுகாசலம் பிள்ளையினுல் சரியாகப் பதில் சொல்ல முடியவில்லை. சற்று நேரத்திற்கெல்லாம் செட்டியாரும் வரவழைக்கப் பட்டார்.

''நீங்கள் இந்த மனிதரிடம் ஆயிரத்து நூறு ரூபாய் கொடுத்தது உண்டா?''

''ஆமாம், நான்தான் கொடுத்தேன். அந்தப் பணம் அவரைச் சேர வேண்டியது'' என்று செட்டியார் அடுத்த கேள்வி பதில்களுக்கு இடமின்றி விடையளித்தார். பிறகு மூவரும் ஓரளவு மகிழ்ச்சியுடன் போலீஸ் ஸ்டேஷனை விட்டு வெளியே வந்தார்கள்.

செட்டியார் கழுகாசலம் பிள்ளையை மட்டும் தன்னேடு அழைத்துச் சென்ருர். ''நீமர் முப்பது வருஷமாக நாணயமாக நடந்துக்கிட்டீர். இந்த வருஷக் கடைசி

யில் உமக்கு இரண்டாயிர ரூபாயைக் குடுத்து ஒய்வெடுத்துக்கச் சொல்ல நெனைச்சிருந்தேன். நீமர், கடைசியிலே நாணயப் பிசகாக நடந்துபுட்டீர். போகட்டும், உம்மை மன்னிச்சுப் புட்டேன். நீமர் இப்பவே விலகிக் கிடலாம். இந்தாரும் உமக்குத் தரவேண்டிய இரண்டாயிரத்திலே இந்தப் பணம் போகச் சொச்சம் தொள்ளாயிரம்!'' என்று கூறி, ஒன்பது நூறு ரூபாய்த் தாள்களை நீட்டினார்.

கழுகாசலம் பிள்ளையால் எப்படிப் பேச முடியும்? கண்ணீர் மட்டும் கரகர வென்று வழிந்தோடிக் கொண்டிருந்தது.

அவர் வீட்டிற்கு வந்ததும், அவர் மகன் சுந்தரம், மறுபடியும் அவருடைய கால்களில் விழுந்து விவரம் கூறினான்: ''அப்பா, நான் யாரையும் கொலை செய்யவில்லை. உங்களிடம் பணம் பறிக்கவே அப்படியெல்லாம் புளுகினேன். மது விலக்குச் சோதனையில் என்னைப் போலீஸ் பிடித்து விட்டது. ஆயிரத்து நூறு ரூபாயை என்னிடம் கண்டதும் சந்தேகப்பட்டு விசாரணைக்காகவே உங்களையும் ஸ்டேஷனுக்கு அழைத்து வந்தார்கள். நான் உண்மையிலேயே சீர் திருந்தி விட்டேன். நான் இனிமேல் யோக்கியனாக வாழ்கிறேன்.''

கழுகாசலம் பிள்ளைக்கு நம்பிக்கை உண்டாகவில்லை.

அவர் ஒன்றும் நிதானிக்க முடியாமல் வீற்றிருந்தார். அவருடைய மனச்சாட்சி அவரைத் துளைத்தெடுத்தது. அவருடைய பெயரில் களங்கம் சேர்த்த நாணயப் பிசகு அவருடைய மனச்சாட்சியைக் கண்டு துடித்தது. இத்தகைய இக்கட்டான நிலையிலே, மகனின் திருந்திய பேச்சு எப்படி அவரது காதுகளிலே விழுந்திருக்க முடியும்?

சுந்தரம் தன் மடியிலிருந்த ஆயிரத்து நூறு ரூபாயையும் அவிழ்த்து அவர் முன்னே வைத்துவிட்டு ''நான் வருகிறேன் அப்பா'' என்று சொல்லி, மீண்டும் வீட்டை விட்டு வெளியேறினான். ★

தி. தி. ஏகப்ப செட்டி அண்டு ஸன்,

(உலோக வியாபாரம்)

அரசாங்கப் பதிவு செய்யப் பெற்ற

இரும்பு எஃகு விற்பனையாளர்

துவக்கம்: 1860

செயலகம்: 116, நைனியப்ப நாய்க்கன் தெரு,

சென்னை – 3.

உரிமையாளர்:

தி. தி. குப்புசுவாமி செட்டியாரும் அவர் புதல்வர்

தி. தி. சண்முக வடிவேலும்

எல்லா வகைப்பட்ட இரும்பு, எஃகு, கம்பி, தகடு, முதலியவைகளும், செம்பு, பித்தளைத் தகடுகளும் எங்களிடம் கிடைக்கும்.

தங்கச் சங்கிலி

காசாவயல் மணி

குமாரசாமி மைனர் மாதிரியாக உடை உடுத்துக் கொண்டு, ஜன நெருக்கமற்ற அத்தெரு வழியே சென்று கொண்டிருந்தான். அவனுக்கு முன்னல் சுமார் பத்து கஜ தூரத்தில் பிச்சைக்காரன் ஒருவன் தள்ளாடிய வண்ணம் போய்க் கொண்டிருந்தான்.

பிச்சைக்காரன் திடீரென்று குனிந்து எதையோ ஒன்றைக் கையில் எடுத்தான். மறு கணம், "ஆ! தங்கச் சங்கிலி!" என்று அவன் வாய் விட்டுக் கூவினன்.

குமாரசாமி அவனிடம் பாய்ந்து சென்ருன். "எங்கே இப்படிக் கொடு பார்ப்போம்!" என்று ஆவலோடு சொல்லியவாறு அவனிடமிருந்து அந்தச் சங்கிலியை வாங்கினன். 'இரண்டு பவுனுக்குக் குறையாது' என்று அவன் கண்கள் எடை போட்டன. தன் கையிலே அது அகப்பட்டிருக்கக் கூடாதா என்னும் ஏக்கத்தின் சாயலும் அவனுடைய முகத்தில் தெரிந்தது.

பிச்சைக்காரன் பேசினன்: "சாமி, உங்களுக்கு இந்த நகை மேல் ஆசை விழுந்து விட்டது. நீங்களே இதை எடுத்துக் கொள்ளுங்கள். எனக்கு வேண்டாம். அது எனக்கு உபயோகப்படாது. வேறிடத்தில் விற்கச் சென்ருலும், 'பிச்சைக்காரப் பயலுக்கு ஏதடா தங்க நகை?' என்று சந்தேகப்பட்டு, என்னைக் கம்பி எண்ண அனுப்பி விடுவார்கள். அதனல் தான் நான் அதைத் தங்களிடம் கொடுத்துவிட விரும்புகிறேன். நீங்கள் ஏதாவது எனக்குக் கொஞ்சம் பணம் கொடுங்கள், இந்த உதவியே போதும்!"

குமாரசாமியின் உள்ளம் மகிழ்ந்தது. 'ஆஹா, ரஷ்யாவிலே பிறக்க வேண்டியவன் தப்பித்தவறி இங்கே பிச்சைக்காரனக அவதாரம் செய்துவிட்டானே....!' என்று எண்ணினன். மறுபேச்சுப் பேசாமல், தன் சட்டைப்பையிலிருந்து இரண்டு பத்து ரூபாய் நோட்டுக்களை வெகு தாராளமாக எடுத்து, அவனிடம் நீட்டினன்.

எதிர்ப்பேச்சுப் பேசாமல் வாங்கிக் கொண்டு மறைந்து விட்டான் அப்பிச்சைக்காரன்.

குமாரசாமி, நகை வியாபாரி நாகமுத்துச் செட்டியார் கடைக்கு விரைந்தான். தான் மலிவான விலைக்குத் 'தட்டிக்கொண்டு' வந்த தங்கச் சங்கிலியை அவரிடம் கொடுத்துப் பரிசோதிக்கும்படி கூறினன் குமாரசாமி.

கோட்டை கட்டிக்கொண்டிருந்த குமாரசாமி, திடீரென்று வெடித்துக் கிளம்பிய சிரிப்போசையைக் கேட்டுத் திரும்பினன்.

"இந்த 'கோல்டு கவரிங்' சங்கிலியை இப்போது தானே ஒரு பிச்சைக்காரன் என்னிடம் இரண்டரை ரூபாய்க்கு வாங்கிக்கொண்டு போனன்? அது உங்கள் கைக்கு எப்படி வந்தது?" என்ருர் செட்டியார்.

பாவம், குமாரசாமியின் சிரித்த முகம் சவம் போல் வெளுக்க ஆரம்பித்து விட்டது. ○

நிலவின் வீக்கம்!

டர்பன் ச. மு. பிள்ளை

ஆண்டவனின் அருள் குளிர்ச்சி உடையது என்பது நம் நாட்டுப் பெரியோர் கூற்று. திருநாவுக்கரசர், இறைவனின் இணையடி நிழல் 'மாலை மதியம் போலக் குளிர்ந்திருந்தது' என்கின்றாரல்லவா?

மேற்றிசையிலே செக்கர்வானத்தில் தோன்றிய மூன்றாம் பிறைச் சந்திரனைச் செஞ்சடை வானவன் திருமுடி மேலன்றோ வைத்து வணங்குகின்றோம்!

சந்திரன், மண்ணுலகத்தில் தவழ்ந்தவுடன், இம்மண்டலமே புதியதொரு பொலிவு பெற்று விளங்குகின்றது. பிரபஞ்சத்திலுள்ள எல்லாப் பொருள்களுமே புதுமையடைகின்றன.

இக்காட்சியைக் கண்ட கம்பன், 'பிரமன் படைத்த அண்டம் பழையதாயிற்று என்றும், சந்திரன் என்னும் தச்சன் அதனைப் புதுப்பிக்கின்றான்' என்றும் மொழிந்தான்.

கடலும் காட்சியின்பத்தில் உயர்ந்ததே. பருவச் சந்திரன் நீலவானத்திலிருக்கும்போது அக்கடலைப் பார்த்து மகிழ ஆயிரம் கண்கள் வேண்டும்.

நாம் பாற்கடலைப் புலவரது கற்பனை உலகில் காண்கின்றோம். சந்திரன் சாதாரண உவர்க்கடலைத் தனது கதிர்களால் பாற்கடலாக்கிக் காட்டுகின்றது. சந்திரன் தவழும் குன்றங்கள் வெள்ளி மலைகள் போல் விளங்குகின்றன. எளிய காட்டாறுகள்தான் சந்திரனால் எத்துணை அழகாக விளங்குகின்றன. ஒவ்வொன்றும் கடவுள் நதியாகிய கங்கைபோல் காண்கின்றனவே! இவ்வரிய காட்சியனைத்தையும் ஒருங்கே கண்டான் கம்பன் அக்காட்சியைச் செய்யுள் அமுதத்துடன் சேர்த்து இதோ, அளிக்கின்றான்.

"ஆறெல்லாம் கங்கையே ஆய, ஆழிதான்
கூறுபாற் கடலையே ஒத்த குன்றெலாம்
ஈறிலான் கைலையே இயைந்த என்னினி
வேறுயாரும் உரைப்பது நிலவின்வீக்கமே!"

"நிலாவே! நிலாவே! இவனுடன் விளையாட வா! வந்தாயானால் உனக்கும் பால் தருவேன்," என்று அந்தத் தாய் கூறுவது உங்கள் செவிகளில் விழுகின்றதா? மழலைச்சொல் மாறாத பச்சைக் குழந்தைக்கு அவள் கூறும் பொய்மொழி புரியுமா, என்ன!

மனத்திற்கு இசைந்த மாதரொடு காண்பவனுக்கு இன்ப நினைவுகள் அனைத்தையும் அச்சந்திரன் வெறியேற்றி விடும் என்பதில் என்ன தடை? அதனாலன்றோ 'கலந்தவர்க் கினியதோர் கள்' என்றான் கம்பன்! இத்தகைய இன்பப் பொருள் அவ்வளவும் துன்பமாக மாறி விடுகின்றது. அது அப்பொருளின் குற்றமன்று. வெப்புநோயுடையானுக்குப் பால் விஷமாகும். அது பாலின் குற்றமா? இதுபோலக் காதலர் பிரிந்துவாழ நேர்ந்தால், அவர்கள் சந்திரனால் துன்பமே அடைகின்றனர் என்பது, சந்திரன் தோற்றத்தினால் பொங்கியெழுந்த இன்ப உணர்ச்சியை ஆற்ற மாட்டாமல் இருப்பதனால்தானே! ★

தென் ஆப்பிரிக்காவில் தமிழ்த் தொண்டு புரிந்துவந்த ஒரு பண்புக்குன்றம் கடந்த 10-11-56 ஆம் நாளோடு அடங்கி விட்டது. [illegible] அறிஞர் திரு ச. மு. பிள்ளை அவர்களைத் தமிழ்ப் பத்திரிகை ஈடுபாடுடைய[illegible] 'தமிழ்மணி', 'செந்தமிழ்ச் செல்வன்', போன்ற பத்திரிகைகளின் ஆசிரியப் பொறுப்பை ஏற்றவர் திரு பிள்ளை. நல்ல கவிஞர். நாடகாசிரியருங்கூட. அன்னாரின் சேவைக்கு நினைவாக அவருடைய கட்டுரை ஒன்றை இப்பொழுது வெளியிட்டிருக்கின்றோம்.

இர்ராஜ ராஜ சோழன்

தோல்வியில் இராஜ ராஜன்!

ஒரு புத்தகம். பெயர்: 'நம்புங்கள்; இல்லாவிட்டால் போங்கள்!' அதில் செய்தி ஒன்று: இன்று உலகம் போற்றும் விஞ்ஞானி ஐனஸ்டைன், அன்று விஞ்ஞானப் பரீட்சையில் தோல்வி கண்டார். அமைதி பூத்த உள்ளத்தோடு இந்த வரிகளை எண்ணிப் பார்க்கிறேன். அதிசயந்தான் விளைவு. தோல்வி. வெற்றிக்கு முதற் படி என்கிறார்கள். உண்மைதான். இந்த உண்மையை மேலை நாட்டு மேற்கோள் காட்டி நிரூபிக்க—அல்லது, உண்மையென்று திட்டவட்டமாகக் கூறுவதற்கு இது சந்தர்ப்பமல்ல; ஆனாலும், தொடக்கத்தில் கூறிய எடுத்துக்காட்டு கை கொடுக்கும். மேற்படி செய்திக்கு இணைப்பாக மற்றுமோர் அதிசயத்தையும் நான் கேட்டேன்; கண்டேன்.

''நான் கல்லூரியில் சரித்திரப் பரீட்சையில் தோல்வி அடைந்தேன்,'' என்ற அவையடக்கத்தோடு 'உண்மை' பேசியது. ஒரு கணம் நான் அதிர்ச்சி பெற்றேன். நினைவு மீண்டபோது, ''ராஜராஜ சோழன் வாழ்க!'' என்ற குரல் கேட்டது. திசை காண, பூகோளப் படத்தைப் பார்த்தேன். தமிழ் முழங்கும் சகல பகுதிகளையும் சுட்டிக் காட்டிற்று. வெற்றிக்குத் தோல்வி முதற்படி மட்டுமல்ல—அதுவே வெற்றியின் வெற்றிப் பிரவேசம்—'இராஜராஜ சோழன்' ஆசிரியரைப் பொறுத்தமட்டில்!

தனக்கு எப்பொழுதும் ஞாபக மறதி அதிகம் என்கிறார் திரு அரு. இராமநாதன். அதனால்தான், தான் எழுதிய 'இராஜராஜ சோழன்' நாடகத்தைப்பற்றிக் கடந்த பத்து ஆண்டுகளாக மறந்துவிட்டாராம். நாடகாசிரியரது மறதிக்குப் 'பொறுமை' என்ற பொருள் சேர்க்கின்றார் இராஜேந்திரன் சண்முகம். ஒரு தரப்பு மறதியும், எதிர்த் தரப்புப் பொறுமையும் சேர்ந்து, சோழச் சக்கரவர்த்திகளைத் தமிழ் மண்ணுக்கு நினைவு படுத்தி விட்டன.

''என்னை முதன் முதலில் எழுத்துத் துறைக்குத் திருப்பியது இராஜராஜ சோழன்தான். 'ஏன் இந்த எழுத்துத் துறைக்கு வந்தோம்?' என்று நான் அலுத்துக் கொள்ளும் போதெல்லாம், எனக்கு இராஜராஜ சோழன் மீது தான் கோபம் வரும். அது எவ்வளவு பெரிய தவறு என்பது எனக்கு இப்போதுதான் புலப்படுகிறது. 'தம்பி, பாவலனுகி வரும் பகைவனுக்கு இராஜராஜன் மாபெரும் பரிசு தருவது மட்டுமல்ல; உனக்கும் பொதுமக்களிடமிருந்து மாபெரும் பாராட்டு வாங்கித் தருவான்!' என்று மேடையேறிய இராஜராஜ சோழச் சக்கரவர்த்திகள் நிரூபித்து விட்டார்,'' என்கின்றார் ஆசிரியர்.

இறந்த காலத்திற்கு 'சூ, மந்திரக்காளி!' போட்டு அதைத் திரும்பவும் நிகழ்காலமாக்கி, அத்துடன் எதிர்காலத்திற்கு ஒரு முன்னறிவிப்பாகவும் அமைக்கும்

அரு. இராமநாதன்

ரஸவாதத் தன்மைக்கு ஓர் உதாரணம் 'சரித்திரம்'. காலம் என்ற மாயாவிக்த இடப்படும் சவால் இது என்றும் சொல்ல வேண்டும். இத்தகைய சரித்திரத்திற்குக் கதை உரு கொடுத்து வெற்றி காணுவதென்பது கிள்ளுக் கீரையல்ல. இப்படிப்பட்ட அபாயகாமான—அதே சமயத்தில், உயிர்நிலை போன்ற—இந்தச் சரித்திரத்தைச் சஸ்திர சிகிச்சை செய்யப் புகும் ஆரம்ப மருத்துவனைப் போல 'கன்னுபின்னு' வென்று சிதைத்துவிட்டு, 'ஆபரேஷன் வெற்றி; ஆனால் கேஸ்தான் காலி!' என்று பெருமையடிக்கும் சரித்திர ஆசிரியர்களைப் பற்றி இப்போது பேச்சில்லை. ஆனால் உண்மையான சரித்திர ஆதாரத்தை மையமாக்கிக் கதை புனையும் இமாலயப் பணி மிகப் பொறுப்பு வாய்ந்தது. இது தமிழ் இலக்கியத்திற்குச் செய்யும் கடமை மட்டுமல்ல; தமிழ்ச் சரித்திரத்திற்குக் காட்ட வேண்டிய நன்றிக் கடனுங்கூட. இத்தகைய 'பயம் செறிந்த' ஒற்றையடிப் பாதையில் முதல் அடி எடுத்து வைத்துத் துணிவோடு முன்சென்ற பெருமை பேராசிரியர் கல்கி கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்கே உரியது. அவருடைய பெயரைத் தொடர்ந்து, வேறு தமிழ்ப் பெயர்கள் சிலவும் எண்ணத்தில் பளிச்சிடுகின்றன. எம். எஸ். சுப்பிரமணிய ஐயர், சாண்டில்யன், தி. நா. சுப்பிரமணியன், சோமு போன்ற பெயர்களுடன் அரு. ராமநாதனின் பெயரும் குறிப்பிடத்தக்க இடம் பெறுகிறது.

பொன்னியின் செல்வனை இராஜராஜனின் இளமைப் பருவத்தின் கதையை 'பொன்னியின் செல்வனி'ல் சொல்லியிருந்தார் கல்கி அவர்கள் இராஜராஜ மும்முடிச் சோழன் ஆன பிறகு, விருத்தாப்பிய தசையில் நடந்த நிகழ்ச்சிகளையும், பொன்னியின் செல்வனுக்கு ஒரு மகள் பிறந்து, அவள் காதற் போர் நடத்திய கதையையும் அடித்தளமாகக் கொண்டது இந்த 'இராஜராஜ சோழன்'.

கதை-வசனம் அரு. இராமநாதன்

"தமிழ்நாட்டுச் சரித்திரக் கதைகளைத் தமிழுலகம் நன்கு வரவேற்கும்படியான சூழ்நிலையை வளப்படுத்திய பெருமை 'கல்கி' அவர்களையே சேரும். அந்த மேதை, அரிய ஆராய்ச்சியின் பயனாகச் சரித்திரத்திலிருந்து உருவாக்கிய இளமைப் பாத்திரங்கள் என்னுடைய நாடகத்தில் முதுமைப் பிராயமடைந்தாலும், குணச் சிறப்புக்களில் குன்றிவிடக் கூடாதே என்கிற பொறுப்பும் கவலையும் எனக்கு ஏற்பட்டுவிட்டன!" என்று மேலும் எழுதுகிறார் ஆசிரியர். இவருடைய கவலை மகிழ்ச்சியாக மாறியது; பொறுப்பில் நன்னம்பிக்கை வளர்ந்தது—பேராசிரியர் ரா. கி.யின் வாழ்த்தைப் பெற்றபோது.

சொல்லின் செல்வர் ரா. பி. சேதுப் பிள்ளை, "தமிழர் வீரம், தமிழ்க் காதல், தமிழ்ப் பண்பு, தமிழர் சமயம், நெறி யாவும் இந்த நாடகத்தில் நடமிடுகின்றன." என்று புகழுரைகள் வழங்கினார்.

"ஆசிரியரைத் திருநெல்வேலியில், சபையில் அறிமுகப்படுத்திய போது, 'இவர் ஓர் அகஸ்தியர்' என்று வேடிக்கையாகக் குறிப்பிட்டோம். அது அவருடைய உருவத்தை மட்டும் குறிப்பிட்டதல்ல, அறிவின் திறத்தையும் தமிழ்ப்

பேட்டிக் கட்டுரை :

பூவை எஸ். ஆறுமுகம்

புலமையையும் இணைத்துக் கூறுவதாகும். திரு இராமநாதன் அவர்கள் தமிழ்ப் பண்டிதரல்ல. ஆனால், சிறந்த தமிழறிஞர். ஆராய்ச்சித் திறன் படைத்தவர். நாடகத்திலே வரும் நிகழ்ச்சிகளுக்குரிய வரலாற்றுக் குறிப்புக்களைப் பற்றி நாங்கள் அவ்வப்போது விவாதிப்பதுண்டு. அப்போதெல்லாம் தமது புத்தகக் குவியல்களிலிருந்து பல புத்தகங்களைப் புரட்டியெடுத்து, அவற்றிற்குரிய குறிப்புக்களை எடுத்துக்காட்டி, உடனுக்குடன் விளக்கியதைக் கண்டபோது, எங்கோ பல்கலைக் கழகத்திலே சரித்திர ஆராய்ச்சிப் பேராசிரியராக வீற்றிருக்க வேண்டிய இந்தச் சிறிய உருவம் இப்படிப் பத்திரிகையுலகிலே உழல்கிறது என்று உண்மையிலேயே நாங்கள் பெருவியப்படைந்தோம்!''— இராஜராஜ சோழனுக்கு அவ்வை தந்த பரிசில் இது.

'மனிதன் பழக்கத்திற்கு அடிமைப்பட்ட பிராணி. ஒரு நாடகம் எழுதினால் போதும், அப்பால் அவனால் எழுதாமல் இருக்கவே முடியாது!' என்று 'ஷா' எப்போதோ எழுதியதை நான் எப்பொழுதோ படித்தேன். ஷா விஷயத்தில் 'பலித்த' இவ்விஷயம், திரு இராமநாதன் விஷயத்திலும் பலித்தது.

தமிழ்த் திரைப்பட விளம்பரங்கள் சிலவற்றிலே கதை-வசனம் அரு. இராமநாதன் என்ற முத்திரையைக் கண்டேன். 'பூலோக ரம்பை', 'கள்ளழகர்', 'ஏழை சொல் அம்பலம் ஏறாது', 'வீர பாண்டியன் மனைவி', 'தங்கப் பதுமை'—சித்திரங்களின் பெயர்ப் பட்டியல் இது.

சுதேசமித்திரனும் 'கல்கி'யும்!

வணக்கம். சுதேசமித்திரன் தீபாவளி மலரிலே சிறுகதை, நவீனம் பற்றிய விமரிசனக் கட்டுரைகள் வெளியாகியிருந்தன அல்லவா? அவற்றிலே, 1947க்குப் பின் சிறுகதை, நவீனம் இரண்டிலும் 'தேக்க காலம்' என்று குறிப்பிட்டிருந்தார்கள் திருவாளர்கள் சி. சு. செல்லப்பாவும் க. நா. சுப்பிரமணியமும். இலக்கிய வட்டத்தில் பெரியதொரு சலசலப்பை ஏற்படுத்தி விட்ட இவ்விவாதத்தைப்பற்றி நீங்கள் என்ன எண்ணுகின்றீர்கள்?

1947-க்குப் பிறகுதான் கதை இலக்கியம் பொதுமக்களுக்குப் பயன்படும் இலக்கியப் பண்ணையாக மாறத் தொடங்கியது. அதற்கு முன்னால், இலக்கியத் துறையில் மலர்ச்சிகள் ஏற்பட்டனவே தவிர, அவையெல்லாம் ஒரு சிலரின் அந்தப்புரங்களிலே ஒளிந்து கொண்டிருக்கும் பூக்களாகவே இருந்து வந்தன. பொதுவாக, இலக்கியம் பற்றிய விமரிசனம் என்று எடுத்துக் கொண்டாலே, அது அவரவர்களின் மனநிலையைப் பொறுத்த தொடர் விவாதமாகவேதான் இருந்து கொண்டிருக்கும்.

''கல்கி' சகலகலாவல்லவர்!''— இலக்கிய உலகத்தின் ஒருமனப்பட்ட தீர்ப்பு இது. தங்கள் கருத்து என்ன?

அதில் சந்தேகமே இல்லை!— ''கல்கி''யின் அவதார விசேஷம் அது!

தாங்கள் 'இராஜராஜ சோழன்' நாடகத்தை எழுத ஏதுவாயிருந்த தனி நிகழ்ச்சி ஏதாவது உண்டா?

கல்லூரிப் பரீட்சையில் சரித்திரத்தில் நான் தோல்வி கண்டேன். அதன் பின்னர், போட்டி உணர்ச்சியுடன் எழுத்துலகில் புகுந்த முதல் பிரவேசந்தான் அந்த நாடகம்.

இலட்சியத்திற்காக வாழ்பவர்களுடைய வாழ்க்கை வெற்றி பெறுமா? பெறுதா? அத்தகைய லட்சிய வெறி அம்மனிதர்களின் நலனுக்கு — வளர்ச்சிக்குத் தேவை தானா?

சொந்த வாழ்க்கை வெற்றி பெறுவது சொந்த மூலதனத்தை

யும் மூலாம்சங்களையும் பொறுத்த தாகும்.

சொந்த வாழ்க்கை வெற்றி பெற்றாலும் பெறுவிட்டாலும், லட்சியத்திற்காக வாழ்பவர்களின் சேவை மற்றவர்களின் வாழ்வைப் பல தலைமுறைகளுக்கும் வெற்றி பெறச் செய்யுமல்லவா? — அதாவது, லட்சியம் என்பது தான் தோன்றித்தனமாகவும், அனுபவ சாத்தியமற்ற முட்டாள்த்தன மானதாகவும் இல்லா விட்டால்!

டி. கே. எஸ். சகோதரர்களின் நாடகப் பணி எவ்வகையில் இலக்கிய சேவைக்கு உதவுகிறது?

நாடக இலக்கியத்தில் மறுமலர்ச்சி ஏற்படும் வகையில் டி.கே எஸ். சகோதரர்களின் நாடகப் பணி அமைந்து வருகிற தென்றே கருதுகிறேன். 'ராஜ ராஜ சோழன்' நாடகத்தை அரங்கேற்றுவதற்கு முன்னால். அத்தகைய செந்தமிழ் நாடகம் போதிய பண வருவாயைத் தராது என்றாலும், வெறும் தமிழ்த் தொண்டு என்ற அளவிலாவது அதை அரங்கேற்ற வேண்டுமென்று ஆசைப் பட்டார்கள். ஆனால், தமிழுக்குச் சேவை செய்ய வேண்டுமென்ற மனப்பூர்வமான ஆவலுடன் அரங்கேற்றும் எந்த இலக்கியப் பணியும் மக்களிடையே நிச்சயம் வெற்றி பெறும் என்பதையும் கண்டு கொண்டார்கள். இதற்கு மேல் நான் அதிகமாகச் சொன்னால், என்னவர்கள் என்ற முறையில் பாராட்டுரைகளை வளர்ப்ப தாகவே தோன்றக் கூடும்.

இந்தியாவிற்குப் பொது மொழியாக விளங்கக்கூடியது ஹிந்தியா? ஆங்கிலமா?

ஒரே உலகம் என்ற முறையில் பூலோகம் முழுவதும் நம்மை நெருங்கிச் சுருங்கிக் கொண்டு வரும் இக்காலத்திலே, ஆங்கிலம் தான் நமக்கு உபயோகப்படக் கூடிய பொதுமொழியே தவிர, ஹிந்தியைப் பொது மொழியாகத் திணிக்க முயல்வது குறுகிய மனப் பான்மையும் சக்தி விரயமும், வடிகட்டின முட்டாள்த்தனமும் ஆன ஒரு வெறியே யாகும்.

'திரை உலகிலே நான்'

தாங்கள் திரையுலகில் அடி யெடுத்து வைத்திருக்கின்றீர்கள். இத்தகைய புதிய சூழலிலே இலக்கியத்தோடு தொடர்பு கொண்ட பசுமை மிக்க நினைவுகள், மறக்க முடியாத அனுபவங்கள் ஏதாவது இருக்குமே, சொல்லுங்களேன்!

திரையுலகில் நான் ஈடுபட்டதற்குக் காரணமே, அது 'திரை இலக்கிய'மாக மாறவேண்டுமென்ற ஆவலினால்தான். ஆனால், அதனால் ஏற்படும் அனுபவங்களின் விளைவுகள் இனிமேல்தான் விளங்க வேண்டும்!

சரித்திரத் தொடர் கதை, சமூகத் தொடர் கதை — இவற்றில் வாசகர்கள் எவ்வகையை அதிகம் விரும்புகிறார்கள்? பத்திரிகாசிரியர் என்ற தொடர்பில் இக்கேள்வியைக் கேட்கின்றேன்.

வாசகர்களைச் சரித்திர காலத்திற்குக் கொண்டு போக முடிந்தால் சரித்திரத் தொடர் கதைகளையும், சமூகத்தின் வாசகர்கள் ஒவ்வொருவரும் ஒரு பாத்திரம் என்ற உணர்ச்சியை உண்டாக்க முடிந்தால் சமூகத் தொடர் கதைகளையும் வாசகர்கள் அதிகம் விரும்புகின்றார்கள். நல்ல சமூகத் தொடர் கதைகள் அதிகமாகவும், நல்ல சரித்திரக் கதைகள் குறைவாகவும் வெளிவருவதால், வாசகர்களிடையே சரித்திரத் தொடர் கதைகள் மிகவும் அபாரமான தாகத் தோற்றமளிக்கின்றன.

தங்களைப் போலச் சரித்திரத் தொடர் கதைகள் எழுதுவதில் தங்கள் மனத்திற்குப் பிடித்தமான சக ஆசிரியர்களின் பெயர்களைக் குறிப்பிடுவீர்களா? வாசக நேயர்களின் திருப்திக்கென இந்தக் கேள்வி புறப்படுகிறது!

சரித்திரத் தொடர் கதை எழுதும் சக ஆசிரியர்கள் அனைவரும் என் மனத்துக்குப் பிடித்தமானவர்களே! — அதாவது, ஜாதி மதம்

எடுத்தேன் பாட்டெழுத: 1

அன்னை மொழி நீயன்றோ?

என். எஸ். சிதம்பரம்

உன்னைநான் மறப்பதுண்டோ? — தாயை
உலகில்செய் துறப்பதுண்டோ?
அன்னைமொழி நீயன்றோ? — என்றன்
ஆருயிரும் நீயன்றோ?

தீங்கரும்பும் கற்கண்டும் — உன்றன்
தேன்மொழிக்கு நிகராமோ?
பாங்குடைய கலைபலவும் — அமைந்த
பைங்கிளியே! என்தமிழே!

என்றுமுள தென்தமிழே! — மாறு
இளங்கன்னி யாகிவிட்டாய்;
நன்றுன்னை முடிசூட்டிப் — புலவோர்
நாடறியச் செய்துவிட்டார்!

வள்ளுவரை ஈன்றதனல் — என்றும்
வான்புகழைப் பெற்றுவிட்டாய்;
தெள்ளுதமிழ்க் கவிபலரால் — உன்சீர்
தேசமெங்கும் ஓங்குதன்றோ?

தித்திக்கும் இனிமையென்ற — நல்ல
திருப்பேரால் இயங்குகின்ற
எத்திக்கும் புகழ்தமிழே! — அறிஞர்
இதயத்தில் வளர்அமிழ்தே!

உன்னைநான் எண்ணுகையில் — இன்பம்
ஊற்றுகப் பொங்கிடுது:
என்னைநான் மறந்திருக்கும் — அரிய
எழில்நிலையும் தங்கிடுது!

என்ற உணர்ச்சிகளுக்கு இரையாகி, தமிழரின் தனிச் சரித்திரத்திலே விஷமம் செய்யாத அணை வரும்!

சரி, நீங்கள் விரும்பும் பத்திரிகாசிரியர் யார், யார் என்றுவது தெரிவியுங்கள். தங்கள் பதில் பத்திரிகாசிரியர்களின் கவனத்தைக் கவர வேண்டுமல்லவா?

தமிழை மனம், மொழி, மெய்களினல் வழிபடும் எல்லாத் தமிழ்ப் பத்திரிகாசிரியர்களும் நான் விரும்புபவர்கள்தாம்!

போகட்டும். அரசியல் உலகை மீண்டும் எட்டிப் பார்க்கட்டுமா? ஆமாம், நம் நாட்டின் தற்போதைய அரசியலைப் பற்றி நீங்கள் என்ன கருதுகிறீர்கள்?—தேர்தல் முரசு முழங்கத் தொடங்கி விட்டதல்லவா?

ஜனநாயகத்தை ஊட்டி வளர்த்துத தாயாக விளங்க வேண்டிய அரசியல் தற்போது ஜனநாயகத்தின் உயிரைக் குடிக்க முயலும் பூதகி உருவம் எடுத்துக் கொண்டிருக்கிறது. அதற்குமேல், பூதகியின் முடிவு பற்றிய கதைதான் உங்களுக்குத் தெரியுமே....!

எழுத்தாளனுக்குக் கட்சி!

மற்றுமொரு கேள்வி. எழுத்தாளனுக்கோ அல்லது கலைஞனுக்கோ கட்சி உண்டா?

ஆஹா! அவனுக்கென்று ஒரு தனிக் கட்சி உண்டு. அதற்கு அவன் ஒருவனே தலைவன். தமிழ்நாட்டுக் கட்சிகளின் கொள்கைகளிலே நல்லவை யெல்லாம் அவனுடைய கட்சியின் அங்கத்தினர்களாவார்கள்.

நம் தமிழ்த் திரைப்படத் தயாரிப்பாளர்கள் நம்முடைய தமிழ் எழுத்தாளர்களை உரிய முறையில் பயன் படுத்திக் கொள்ள நீங்கள் கூறும் யோசனைகள் யாவை?

நல்ல கேள்விதான். சொல்கிறேன். வடநாட்டுப் படப்பிடிப்பா

ளர்கள் நல்ல சத்துப்பிடிப்பான கதைகளுக்குத் தமிழ் நாட்டைத் தேடிவருகிறார்கள் என்பதை நமது தமிழ்த் திரைப்பட முதலாளிகள் ஆழ்ந்து சிந்திப்பார்களேயானால், நம் தமிழ் எழுத்தாளர்களை உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ள, பிறர் யோசனைகளை எதிர்பார்க்கும் நிலையில் அவர்கள் இருக்க மாட்டார்கள்! ஆனால், ஒன்று மட்டும் கூறுவேன். ஒரு கதையைப் படம் பிடிக்கும்போது, படமுதலாளிகளும் கைதேர்ந்த நம் தமிழ் எழுததாளர்களும் பரஸ்பரம் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையையும் அனுசரிப்பையும் ஓரளவாவது கைக்கொள்ள மனம் உள்ளவர்களாக இருக்க வேண்டும்.

இது நாள் வரை உங்களுடைய இலக்கியப் பேனா படைத்த கதாபாத்திரங்களுள் தங்களது இலக்கிய மனம் மறக்க முடியாதவை எவை?

'வீரபாண்டியன் மனைவி'யில் ஜனநாதனும், 'ராஜ ராஜ சோழ'னில் குந்தவியும், 'அசோகன் காதலி'யில் சாணக்கியனும், 'கறுப்புத் திராட்சையும் வெள்ளை ரோஜா'வும் கதையில் கதாநாயகனும் நானே மறக்கமுடியாத பெயர்கள்!

''எழுத்துலகில் நான்!''—இதே கேள்வியைப் பெரும்பாலான பேட்டிகளில் கேட்டிருக்கிறேன். அபிப்பிராயங்களை அறிந்துகொள்வதில் இலக்கிய ஆர்வம் கொண்டவர்களுக்கு ஓர் ஈடுபாடு உண்டு என்பதாலேதான் இக்கேள்வி.

எழுத்துலகில் என்னைப் பற்றி வாசகர்கள்தாம் சொல்லவேண்டும்; விமரிசகர்கள் சொல்வதுகூட வெற்றுரையாகவே இருக்கும். என்னை வற்புறுத்திக் கேட்டால், வேறு உலகங்களைப் பார்த்து வரும் என்னை எழுத்துலகம் விடாப்பிடியாக மயக்கி வைத்திருக்கிறது என்றே சொல்லுவேன்!

ஏடெடுத்தேன் பாட்டெழுத: 2

தமிழ் நல்லமுதே!

இரா. கந்தசாமி

பச்சைப் பசுங்கிளிப் பெண்ணமுதே!—தமிழ்ப்
பண்ணிடைத் தோன்றிய நல்லமுதே!
இச்சைப் பெருக்கமே, என்மகளே!—எந்தன்
இன்னுயிர் ஈர்த்திடும் வார்ப்படமே!

விந்தைச் சமூகத்தை எண்ணிவிடில் — அதில்
வீணுரை பேசிடு வாருமுண்டு;
சிந்தை மறுக்கும் செயல்களையே — நம்
செந்தமிழ் வாள்கொண்டு சாய்த்துவிடு!

தானதருமங்கள் செய்துவிடில் — வேதம்
சாக்காடு உற்றபின் மோட்சமென்னும்;
வானவெளியினைப் பாராயோ? — உந்தன்
வல்லறிவால் உண்மை கூறுயோ?

ஓடிப் பறந்திடும் பட்சியினம் — மண்ணில்
ஓங்கி வளர்ந்திடும் தென்னைமரம்
நாடிப் பழகிடும் நாய்மிருகம் — வீட்டை
நணுகிக் கிடந்திடும் பூனைக்குட்டி!

ஏழைத் தொழிலாளி கண்டிடுவாய் — அவர்
என்றும் உழைத்திடும் பண்புடையார்;
வாழ வழிவகை செய்திடுவார் — நீயும்
வற்றிடா அன்பைச சொரிந்திடுவாய்!

கூடிப் புசித்திடும் காக்கையினம் — அது
கொண்டிடும் ஒற்றுமை பெற்றிடுவாய்;
ஜோடிப் புறாவினைப் போலமக்கள் — எங்கும்
சுற்றித் திரிந்திட வேண்டுமம்மா!



காதல் என்ருல் என்ன ?

'காதல் இன்றேல் சாதல்!' சுளுவாகப் பாடிவிட்டார் பாரதியார். நின்று நிதானித்துப் பார்ப்போமேயானுல், ஒரு ரகசியம் தெரியவரும்—அதாவது, காதலும் அத்துணை லகுவான விஷயமல்ல; சாதலும் அவ்வளவு லேசான காரியமன்று! ஆனுல், வாழ்க்கையில் காதலும் சாதலும் இயற்கையான திரும்பு முனைகளென்றுதான் கொள்ள வேண்டும். இத்தகைய விந்தையான வாழ்க்கையைச் சரிவரப் புரிந்து கொண்டு 'காதல்' ஆசிரியர் எழுதியிருக்கின்ற கதைகள் எண்ணிக்கையில் அதிகம்.

'வாழும் காதல்' என்றொரு நவீனத்தை நான் எழுதினேன்—ஆருண்டுகளுக்கு முன்னர். அது சிலருக்குத்தான் பிடிக்கும். பிரச்சினைக் கதை. ஆனுல் பேராசிரியர் ரா. ஸ்ரீ. தேசிகன் மிகவும் புகழ்ந்திருந்தார்—சுதேசமித்திரன் மதிப்புரையில். இதற்கு முன்னுரை வழங்கியவர் இராமநாதன் அவர்கள். காதலைப் பற்றிக் குறிப்பிடும்போது, 'பூமியிலிருந்து கிடைக்கும் மூல உலோகப் பொருள்களைக் கொல்லுப் பட்டறையில் வைத்துக் காய்ச்சி, உருக்கி, தட்டி அடித்து உருவாக்குவது போல, சுரங்கத் தங்கத்தை உருக்கிப் பத்தரை மாற்றுப் பசும் பொன்னுக்குவது போல, பிரகிருதி சுபாவத்தோடு மூர்க்கத்தனமாய் இறுகிப் போயிருக்கும் மனித மனங்கள் பண்படக் காதல் உணர்ச்சி தேவைதான்' என்று தெளிவுபடுத்துகிருர்.



அகில இந்திய வானெலி நிலையம் சோமு அவர்கள் தம்முடைய 'மஞ்சள் ரோஜா'வில் கதாசிரியனுடைய ஜாதகத்தைக் கணிக்கும் விதம் இவ்வாறு அமைகிறது: '....வாழ்க்கை என்ற ஆழமான கடலில் முங்கி முத்துக்குளிக்கும் போது, அவனுடைய இதயப் பாங்கிற்கும் கையின் வலிமைக்கும், அவன் மூழ்கிய இடத்துக்கும் ஏற்பக் கையிலே அகப்படுகிற பொருள் அமைகிறது!'—இப்படிப் பட்ட தீர்ப்பை நெஞ்சில் எழுதிப் பார்க்கையில் 'காதல்' ராமநாதன் அவர்களின் பேனு பலபல ராகங்களில் பண்பாடுவதை நாம் அனுபவித்து ரசிக்க முடியும்.

"காதல், காதல் என்கிருர்களே, காதல் என்ருல் என்னடி?" என்று சினிமாக்காரியான காமினி லேடி டாக்டர் ஒருத்தியிடம் கேட்டு விட்டுச் சொன்ன விசித்திரமான காதற் கதை, சர்க்கஸ் உலகிலே மிருகங்களிடையே சஞ்சரிக்கும் காதலர்களின் உணர்ச்சியைப் பல கோணங்களில் ஆராய்ந்து சித்தரிக்கும் வியப்புக் கதை, நாடோடி இலக்கியத்தில் வழங்கி வந்த அம்பிகாபதி—அமராவதி என்னும் பண்டைக் கதையைப் புதிய சரித்திரக் கண்ணேட்டத்தில் நிறுத்தி எழுதிய உணர்ச்சிக் கதை—இப்படிப்பட்ட பலபிரிவுகளில் அவரது பேனுவுக்கு நல்ல திறம் உண்டு.

மோகினிப் பேய் ஒன்று. அது அவளாக மாறினுல், 'பழையனூர் நீலி.' சாவு கடந்த நிலையிலுங்கூட பதிபக்தி கொண்டு திரிகின்ருள் அவள். உடற் தத்துவம், ஆத்ம தத்துவம் — இவற்றினை ஊடுருவிப் பார்த்துப் படைத்த உணர்ச்சிப் பின்னல் ஒன்றும் உண்டு.

'காதல் பிறக்கும்போது கவிதையும் பிறக்கிறது' என்கிருன் ஒருவன். அவனும் ஒரு கவி. பெயர் ஷெல்லி எனறு ஞாபகம். இந்த எல்லைக் கோட்டிற்குள் முடங்கிக் கிடக்கிருன் ஓர் அப்பாவி. அவன் கவிஞன். காதல் பிறந்ததும் கவியானுை, அல்லது கவி பிறந்ததும் தான் காதல் பிறந்ததா என்பது

தேவையற்ற ஆராய்ச்சி. ஆக, அந்தக் கவிஞன் வெள்ளை ரோஜாவின் மென்மையிலே இனிமை காணவில்லை; ஆனால் கருப்புத் திராக்ஷையின் போதையில் புதிய ஜீவன் பெறுகின்றான். நரிக்குறத்தி 'அம்மே!' என்று குரல் தருகிறாள். 'அப்சரஸ்' என்ற மகா காவியம் உருவாகிறது. குப்பை மேட்டில் மூழ்கிக் கிடந்த சித்தர் வேதாந்தம் படிக்கிறான்; அல்ல, பேசுகிறான். இப்படியும் ஒரு கதை.

கோழிப் பந்தயத்தில் காதல் பரிட்சை நடத்தப்படும் அதிசயத்தையும் ஆசிரியர் விவரிக்கிறார். நால்வகைப்பட்ட கதாநாயகிகளின் பட்டியலுக்குக் கதை உருவம் கொடுக்கவும் இவர் மறக்கவில்லை. மனோரஞ்சிதத்தின் நறுமணத்தையும் காற்றில் மிதக்க விட்டிருக்கின்றார்.

'ஒவ்வொரு கதையிலும் காதலின் ஆற்றல்—எல்லாம் அழிந்தாலும். தான் அழியாமல் தலையெடுக்கும் தன்மை—விளங்கி நிற்கிறது' என்று 'கோழிப்பந்த'யத்திற்கு முன்னுரை எழுதுகின்றார் டாக்டர் மு. வ. அவர்கள். பேராசிரியர் சொல்லியிருப்பது மாதிரி. குடிசையில் வளரும் மருதாயி முதல் அரண்மனையில் புரளும் நூர்ஜஹான் வரையில், பிச்சைக்காரி ரோசாத்தியைத் தேடி வரும் குட்டரோகி முதல் நாகரிக நங்கையை நாடும் ஆடம்பரப் பட்டதாரி வரையில், தவச் சாலையின் முனிவர் முதல் விஞ்ஞானி படைத்த யந்திர மனிதன் வரையில் எல்லோரையும் அந்தப்புரத்திலிருந்து அரங்கிற்கு இழுத்து வந்து அம்பலப்படுத்தும் புண்ணியமும் இவரையே சேரும்.

போலியைச் சுட்டெரிக்கும் புதுமைகளை, வாழ்க்கையை அலசி அலசிப் பரிசீலிக்கும் ரஸாயனங்களை, சமுதாயத்தின் புற்றுநோய்களுக்கு மின்சார சிகிச்சையளிக்கும் புத்தம் புது முறைகளை, குரூர வசீகரங்களைப் படம் பிடித்துக் காட்டி, மனித உள்ளத்தில் எங்கோ ஒரு மூலையில் செய்வதறியாது ஏங்கிக் கிடக்கும் மனிதாபிமானத்தைத் தட்டியெழுப்பும் உணர்ச்சிமிக்க உயிரோவியங்களின் தேவையை வலியுறுத்துகிறார் திரைப்பட வசனகர்த்தா திரு விந்தன். இந்தப் புதுமுறைப் பாணியில் அமைந்த கதைகள் தாம் இராமநாதன் அவர்களுடைய 'ஐந்தாவது பசி', 'யாமினி', 'கதாநாயகி', 'சங்கமம்' போன்றவை.

அவர் திகைத்தார்!

முருங்கை மரத்து ஒரிஜினல் வேதாளம் சொன்ன கதைகளையும் 'மர்மக் கதை' அதிபர் நேருக்கு நேர் கண்டும் கேட்டும் அஞ்சல் செய்கிறார். 'கற்பனை கட்டுண்டு போன வேதாளத்திற்கும், புத்திசாலிகளான விக்கிரமாதித்த மகாராஜாக்களுக்கும் 'வேதாளம் சொன்ன கதைகள்' சமர்ப்பணம்.

திரு விந்தன் அவர்கள் என்னிடம் சொல்லுவார்: ''ஆசிரியர் கல்கி அவர்கள் எங்களுக்குச் சொல்லித் தந்த பாடம், எதை எழுதினாலும் அதில் ஒரு தனிப்பட்ட புதுமை இருக்கவேண்டும் என்பதுதான்!''

பேராசிரியர் கல்கி எதிர்பார்த்த புதுமையை மேற்படி சமர்ப்பணத்திலேயே காண முடிகிறது.

> அறிவாளிகள் எப்போதும் வலுவான சக்திகள் படைத்தவராய் சிந்தனை ஒருமிப்புடனும், தளராத உறுதியுடனும், சீரான போக்குடனும், நிர்வாணத்தை அடைகின்றனர். அந்த நிர்வாணமே அதி உன்னதமான ஆனந்தம்.
>
> — புத்தர்.

திரு அரு. இராமநாதன் அவர்களை இப்பொழுது நாம் படிப்போம்:

தஞ்சை அரண்மனை; அங்கே ஓலோக்க மண்டபம். அதில் வெள்ளணி விழா. நாவலரும் பாவலரும் மன்னர் புகழ்பாடிப் பரிசில் பெறுகின்றனர். கடைசியில் வேங்கி மன்னன் விமலாதித்தன் வருகிறான். பாராள வேண்டியவன் பாடிப் பிழைக்கவா என்ற ஐயப்பாடு சக்கரவர்த்திகளுக்கு. ஆனால் விமலாதித்தனுக்கோ, நிகழ்காலத்தை ஆளும் நெடுநில மன்னர்களைவிட எதிர்காலத்தின் எண்ணங்களையும் ஆளும் கவிஞனே உயர்ந்தவன் என்பது முடிவு பாடுகிறான். 'பரிசு என்ன வேண்டும்?' என்கிறார் இராஜ ராஜ சோழன். அவனோ மன்னர் மகளைப் பரிசாகக் கேட்கிறான். மதுராந்தகர் தமிழர் குலப்பண்பை நினைவூட்டுகிறார். பாலதேவருக்கு எல்லாமே சொக்கட்டான் விளையாட்டு — அரசியல் தந்திரியாயிற்றே! — நையாண்டி பேசுகிறார். மன்னர் மன்னனின் தயக்கம் கேட்டுப் பேசுகிறான் வேங்கி மன்னன்:

"இராஜ ராஜ சோழரே! பட்டினப் பாலை பாடிய பாவலருக்குப் பதினாயிரம் பொன் பரிசளித்தான் கரிகாலன் அவன் வமிசத்தில் வந்தவர் நீர். மாரி ஒயினும் பாரி உள்ளான் என்று மகிழ்ந்தது தமிழ்நாடு. அந்நாட்டில் பிறந்தவர் நீர்! பல்காதமுள்ள முக்தியைச் சௌதமனுக்குப் பரிசளித்தான் பல் யானை செல்கெழு குட்டுவன். கபிலர் என்னும் புலவருக்கு நன்று மலையில் ஏறி நின்று கண்ணுக்கெட்டிய நாடெல்லாம் கொடுத்தான் செல்வக்கடுங்கோ வாழியாதான். பெரும் பரிசில் பெற வந்த அரிசில் கிழாருக்குத் தன் அரியணையையே அன்புடன் அளித்தான் பெருஞ் சேரல் இரும்பொறை. போரில் வென்ற அப்பொறையனையும் பொய்கையார் பாடிய களவழி நாற்பதிற்காகச் சிறை விட்டான் சோழன் செங்கணன். இன்னும் கேளும். ஔவைக்கு ஆயிரம் ஆண்டு ஜீவித்திருக்கும் நெல்லிக் கனியைக் கொடுத்தான் அதிகன். மனைவியின் மாங்கல்யம் தவிர மற்றதெல்லாம் கொடையீந்தான் ஆய் நாட்டு அண்டிரையன். ஆளும் தன் நாடு அனைத்தையும் பரிசிலருக்குப் பகிர்ந்தளித்தான் ஆதன் என்னும் ஓரி. பாவலர் யார் வரினும் பாத்திரமறியாமலே பரிசு பயந்தான் காரி. முல்லைக்குத் தேரும் முது பரிசிலருக்கு முந்நூறு ஊரும் கொடுத்தான் பாரி. பெருஞ் சித்திரனுக்கு யானையும், பெருந்தலைச் சாத்தனுக்குத் தன் தலையையும் தந்தான் குமணன். தாகமெடுத்துத் தவித்த ஒருவனுக்குத் தன் இரத்தத்தையே குடிக்கக் கொடுத்தான் ஒரு தமிழ் வேந்தன்!"

உணர்ச்சிச் சுழிப்பிலே சிக்கிய இராஜ ராஜன், "பகைவனுக்குக் கொடுத்தான், தான் பெற்ற செல்வத்தை!" என்று பரிசளிக்கிறான்.

புள்ளி விவரங்கள் சிலருக்கு அவ்வளவாகப் பிடிபடா விட்டாலும், வசனங்களின் கோர்வை கட்டாயம் இனிமை தரும்.

பேட்டி ஆசிரியருக்கு நகைச்சுவைப் பகுதியிலும் தேர்ந்த பரிசயம் உண்டு. இதே நாடகத்தில் வரும் விகட கவிகள் இருவரைப் பெயரிட்டுக் கூறிவிட்டால் கூடப் போதும். பேச்சுக்களைக் கேட்காமலே சிரிப்பு தன்னாலே வந்துவிடாதா?

அந்த நாட்களில் 'குடும்பக் காட்சி' என்ற ஒரு பகுதி 'காதல்' சஞ்சிகையின் பல பக்கங்களைச்

சுவையாக்கித் திகழ்ந்தது. சுவை சேர்த்தவர் அதன் அதிபர் 'ராமையா'. சிரிக்க முடிந்தவர்கள் மட்டுமே படிக்க முடியும்!

புரட்சி மிக்க சிந்தனைகளுக்கெல்லாம் தந்தை போன்றவர் பிளேட்டோ. சுதந்திரப் புரட்சியின் விடிவெள்ளியாக விளங்கியவர் பெஞ்சமின் பிராங்க்ளின். இவ்விரு மேதைகளையும் பற்றிய ஆராய்ச்சி நூல்களையும் எழுதியிருக்கிறார் அரு. ரா. அவர்கள். ஆண்-பெண் உடலுறவு சம்பந்தப்பட்ட சகல விதமான சந்தேகங்களுக்கும் கட்டுரை வடிவில் விளக்கம் தந்தவர் 'ரதிப்ரியா.'

ஆசிரியருடைய வருணனை நயத்துக்கு ஒரு முன்னோட்டம்:

'...பருவ வயசு. வெள்ளை மனசு. அசட்டுத் தினுசு. கிராமியக் கோப்பு. கையில் பிச்சைச் சட்டி. கண்ணில் மருட்சி. அழகை மறைக்காத கந்தல் துணி. அவள் அழகுக்கு அழகாய் இருந்தாள். அவள் பிச்சைக்காரி!' ('ஐந்தாவது பசி')

'....வானத்து நிலாவை மறைத்திருந்த மேகப் பட்டாடை அகன்றது. அமராவதியின் கூந்தல் அலையலையாகக் கலைந்தது. கூந்தலில் சூடிய மலர்கள் உதிர்ந்தன. கண்கள் சுழன்றன. கண் இமைகள் மூடின. கைவளையல்கள் குலுங்கின. முத்துமாலைகள் புரண்டன. மேகலையின் மணியாரங்கள் முழங்கின. காற்சிலம்புகள் நடன கீதங்கள் பாடின. பவளச் சுனையில் ஊற்றுக் குமிழிகள் பறிந்தன. விரிந்த பூமலர்களின் பூந்தாதுக்களில் ரத்தமயமான தேன் துளிகள் துளிர்த்தன. ஆழ்கடல் மீது விரிந்திருந்த நீலப் படுதா அகன்றது....!' ('அம்பிகாபதி')

'....தூரதரிசினிக் கருவிக்கும் புலப்படாத கடவுளையே உருவாக்கிய மனிதனுக்குத் தன்னைப் போலக் காரியாதிகளைச் செய்யக் கூடிய யந்திர மனிதனைச் சிருஷ்டிப்பதுதானா பிரமாதம்? யந்திர மனிதன்! – பளபளக்கும் அலுமினிய உடல்; அதற்குள்ளே ஒரு மோட்டார் யந்திரம்; பஞ்சு ரப்பர் மிதிகளுள்ள பாதங்கள்; பித்தளைத் தலை; இருதயத்திற்குள் மூச்சுக் காற்றை உற்பத்தி செய்யும் பிராண வாயுப் பெட்டி; உடலெங்கும் மின்சாரக் கம்பிகளால் ஆகிய நரம்புக் கருவிகள்; அவற்றில் ரசாயனக் கலவைகளால் ஏற்படும் உணர்ச்சிகள்; பல ஆயிரம் போட்டோ எலக்ட்ரிக் அணுக்களைக் கொண்ட விழிகள்; அந்த விழிகளுக்குப் பின்புறம் சூழ்நிலைக்குத் தோதாக இயங்கக் கூடிய செயற்கை மூளை – இவற்றின் கூட்டுச் சரக்குதான் யந்திரமனிதன்! அட கடவுளே, செயற்கை மூளையா?....' ('யந்திர மனிதன்')

வாழ்க்கையை ஒரு வேடிக்கையாக்கிச் சித்துவேலை செய்து பத்திரிகை வாயிலாகத் தம் பெயரை நிலைப்படுத்திக் கொண்டு, இப்போது மாயாலோகத்திலும் அற்புதம் செய்து காட்ட நேர் நடை போட்டுப் பிரவேசித்திருக்கும் ஆசிரியர் இராமநாதன் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன் – 'உமா'வின் சார்பிலே! ★

இனாம்

எங்கள் கருங் கூந்தல் தைலம் நெ. 501 உபயோகிப்பதன் மூலம் எல்லாவிதமான கேசமும் நன்கு கருத்து, எப்பொழுதுமே கருமையாக வளரும். இது மயிர் உதிர்வதைத் தடுத்து, நீண்டு கருகருவென்று சுருண்டு வளரச் செய்கிறது. ஒரு சீசா விலை ரூ. 1/15. முழு உபயோகத்திற்கும் தேவையான 3 சீசாவின் விலை ரூ. 5/-. இந்த அற்புத தைலத்தை பிரபலப்படுத்துவதற்கென, அழகிற்கும் உறுதிக்கும் 15 வருஷ உத்தரவாதம் பெற்ற ஓர் அழகிய பான்ஸி கை கடியாரமும், ஒரு மோதிரமும் (நியூ கோல்ட்). 3 சீசா வாங்குபவர்களுக்கு 6 பான்ஸி கை கடியாரங்களும் மற்றும் 6 மோதிரங்களும் (நியூ கோல்ட்) முற்றிலும் இலவசமாக அளிக்கப்படும். திருப்தி இல்லையேல் பணம் வாபஸ்.

AMRIT PHARMACY, (U.M.) Nakodar. (Pb)

தெய்வப் பிரச்சினை ஊர் வாய் பட்டுச் சலனத்தை உண்டாக்கிவிட்டது. சலனம் சாந்தியடைந்தபோது, உண்மை பேசத் தொடங்கியது.

வழிபடு தெய்வம்...!

மா. கு. நெடுமாறன்

கிராமத்தின் அமைப்பு தரும் எழிலுடன் விளங்கிய அந்த இடத்தில், புலவர் செல்வநாயகம் தன்னை மறந்து அமர்ந்திருந்தார். அவருக்கு எதிரே பூட்டி வைக்கப் பட்டிருந்தது, கையடக்கமான வெள்ளிப் பெட்டி ஒன்று. இனம் புரியாத மர்மங்களை அடக்கி வைத்திருப்பது போலக் காட்சி யளித்த அது.

சர்வ சாமான்ய உணர்ச்சி களால் உருவாக்கப்பட்ட இந்தக் கபட உலகத்தை முற்றிலும் மறந்து விட்டு, முடிவற்ற வழி பாட்டால் கிடைக்கும் மோன அமைதியை ரசித்துக் கொண்டிருந் தார் புலவர்.

ஏதோ ஓர் உணர்ச்சிக்குத் தன்னை அர்ப்பணித்துவிட்ட எந்த ஒரு மனிதனும் கால தேவனின் துரிதப் பாய்ச்சலை அலட்சியப் படுத்தத்தான் செய்கிறான்.

செல்வநாயகம், ஓடி மறையும் நிமிஷக் கூட்டங்களைப் பற்றிய எண்ணமில்லாமலேயே அமர்ந் திருந்தார்.

''அப்பா''—அன்பும், பாசமும் தவழும் மெல்லிய குரல் ஒன்று ஏந்தி வந்த அழைப்பு. செல்வ நாயகத்தை மீண்டும் இவ்வுலகத் திற்குப் பிடித்திழுத்து வந்தது. விழி இமைகள் திறந்தன. அவரது அருமைச் செல்வி சிரித்தவண் ணம் நின்று கொண்டிருந்தாள்.

''சாப்பிடவல்லே நீ?'' — திருந் தாத மழலையில் உருவான இந்தக் கேள்வி, செல்வநாயகத்திற்கு ஓடி மறைந்துவிட்ட கால வரம்பை நினைவு படுத்திக் காட்டியது.

''வாம்மா போவோம், அல்லி!'' என்று கூறியபடியே எழுந்து உள்ளே சென்றார் புலவர்.

* * *

புலவர் செல்வநாயகம், பூட் டப்பட்ட அப்பெட்டியைப் பூஜித்து வரும் விஷயம் ஊரறிந்த இரக சியம். அந்த அளவுக்கு, அந்தப் பெட்டியும் அவரும் இரண்டறக் கலந்திருந்தனர்.

ஆனால், அந்தப் பெட்டிக்குள்ளே என்ன இருக்கிறது என்பதுதான், ஒருவருக்கும் புலனாகாமல் இருந்த மர்மமாகும்.

''புலவரின் வழிபாட்டுக்குரிய அந்தக் கடவுள் எது? அது ஏன் எவர் கண்ணிலுமே படாமல், எப் போதும் இப்படிப் பெட்டியினுள் ளேயே உட்கார்ந்திருக்கிறது?''

இப்படித் தமக்குள்ளேயே கேட் டுக் கொண்டு, பதில் புரியாமல் திணறிக் கொண்டிருந்தனர், புலவ ரைச் சுற்றி வசித்தவர்கள்.

அவரது நெருங்கிய நண்பர் களுக்காவது இந்தப் பரமரகசியம் தெரியுமா என்றால் அதுவும் இல்லை.

ஒரு நாள் புலவரிடமே ஓரிருவர் நேரிடையாகக்கூடக் கேட்டார்கள்: ''நீ வணங்கும் அந்தத் தெய்வம் எது? அதன் பெயர் என்ன? அது ஏன் இப்படி இருண்ட பெட்டியி னுள்ளேயே சிறை வைக்கப்பட் டிருக்கிறது?''

அதற்கு அவர் தந்த புன்னகை தோய்ந்த பதில், நண்பர்களை மற்றுமொரு புதுக் குழப்பத்திற் குத்தான் அழைத்துச் செல்ல உதவியது; வழி வகுத்தது.

"நான் வணங்கும் தெய்வத்தையா கேட்கிறீர்கள்? அன்று என்னை வணங்கிக் கொண்டிருந்த ஓர் அன்புக் கருவூலத்தை இன்று நான் வணங்குகிறேன். அதன் பெயரைக் கேட்காதீர்கள். ஆனல், என்னுடைய இத்தகைய உணர்ச்சிக்கு வாழ்வளித்த ஒரு பெரும் உயிர்ப்பு என்று வேண்டுமானல் அதைக் கருதிக் கொள்ளுங்கள். நான் வழிபடும் தெய்வத்தைப் பெட்டியினுள்ளேயே வைத்திருக்கிறேன் - பிறர் காணக் கூடாது என்ற நோக்கத்தால் மட்டுமல்ல; பிறர் கண்டாலும் பயனில்லை என்ற காரணத்தால்!"

பாவம், கேள்வி எழுப்பிய நண்பர்கள், பதிலில் எழும்பிய பல புதிய புதிர்களை இனம் கண்டு கொள்ள முடியாமல் தவித்தனர். ஆனல், அதற்குப் பினகூட, அவர் வணங்கும் தெய்வத்தை எப்படியாவது பார்த்துவிட வேண்டும் என்ற ஆசை அவர்களுக்கு அதிகமாகப் பெருகியதே தவிர, சிறிதும் குறைந்தபாடில்லை.

ஒரு பொருள் மூடி வைக்கப்படும் போதுதானே மனிதனுக்கு அதன் மீதுள்ள பற்று அல்லது ஆவல் மிகுதிப்படுகின்றது....!

*

புலவரின் விந்தையான போக்கால் குழம்பிக் கிடந்த உள்ளங்கள், கடைசியில் சிரமப்பட்டு அந்த மர்மத்தைக் கண்டு பிடித்தன.

"புலவர் வணங்கும் தெய்வம்— அவருக்கு இதய சாந்தியைத் தரும் அக் கடவுள் — வெறும் அறுபது வெண் பொற் காசுகளை மட்டும் ஊதியமாகப் பெற்றுக்கூட அவரை எப்போதும் நினைத்துக் கொண்டே இருக்க வைக்கும் அந்தப் புனித மாதா.... ஆம்; அதுதான், மலையாள நாட்டிலிருந்து அவர் சிலை உருவில் கொண்டு வந்து வழிபடும் அந்தத் தேவி — அந்த ஈஸ்வரிதான் அவருக்கு மகிழ்ச்சியான வாழ்க்கையைத் தந்திருக்கிருள்!"

கடைசியில், நண்பர்கள் தாம் கண்டுபிடித்த இந்த உண்மையைப் புலவரின் செவிகளையும் தொட வைத்தனர்.

அவர் அப்போது ஊமையாகச் சிரித்துக் கொண்டே கூறினர், "ஆம், நான் ஈஸ்வரியைததான் வணங்குகிறேன்...!" என்று.



"சரி, நீங்கள் வணங்கும் ஈஸ்வரி ஓர் அதிருஷ்ட தேவதைதானே?"

"ஆமாம். வர்ணிக்க முடியாத மகிழ்ச்சியை எனக்குத் தந்து வந்த அந்த அன்புத் தெய்வம். அதிருஷ்டத்தின் இணையற்ற தலைவி....!"

"அந்தத் தேவியின் உருவத்தை நாங்கள் பார்ப்பதற்கு இனியாகிலும் நீங்கள் எங்களை அனுமதிக்க முடியுமா?"

"அதனால் உங்களுக்கு ஒரு பயனும் இல்லையே....?"

"பரவாயில்லை. பார்த்துத் தெரிந்து கொண்டால், அதுவே போதும். மலையாள நாட்டிலிருந்து நீங்கள் அந்தத் தேவியை...!"

"ஆமாம், அங்கிருந்துதான் என் வழிபாட்டுக்குரிய அவளை நான் அழைத்து வந்தேன்....!"

புலவர் பேசினார்: "அருமை நண்பர்களே, நன்றாகப் பாருங்கள்; அந்த என் குலதெய்வத்தின் திருஉருவத்தை நன்றாகப் பாருங்கள்; அன்பும் அறனும் கொண்டு, தன் இல்வாழ்வைப் பண்பும், பயனும் பெறச் செய்த அந்தக் குடும்ப விளக்கைப் பாருங்கள்; என் அமைதிக்கு வழி வகுத்த வழிபடு தெய்வத்தைப் பாருங்கள்! 'அதிருஷ்ட தேவதை' என்ற உங்களது வர்ணனைக்கு இலக்கான அந்த மங்கையர்க்கரசி இவள்தான்....! கோளத்தில் பிறந்து, என் கை பிடித்து இங்கே வந்தவள்; ஈஸ்வரி என்ற சிறப்புப் பெயர் பூண்டவள். அவள் வாழும் வரை என்னை வணங்கி வந்தாள்; அவள் செத்தவுடன் நான் அவளை வழிபட்டு வருகிறேன். அதனால் அந்த நிரந்தரமான மன அமைதியும் மகிழ்ச்சியும் எனக்குக் கிடைக்கிறது. சாதாரண அன்பு வரம்புக்கு மீறி விட்டால், பக்தியாகத்தானே உருவெடுத்து விடுகிறது....!"

கெடுமதியாளர் பலருடன் சிவப்புத் தொப்பிக்காரர்கள் சிலரும் தெருமுனையிலே தலை தெறிக்க ஓடிக் கொண்டிருந்தார்கள்! ★

உரைநடைச் சித்திரம் : 'ரமன்'

துயிலினி

இனிய தூக்கமே!

நீ எங்கிருந்து வருகிறாய்? எப்படி வருகிறாய்? ஏன வருகிறாய்? எனக்குப் புரியவில்லையே? நீ ஆணா, பெண்ணா என்பதும் தெரியவில்லையே? நீ யார் என்பதைக் கருணை கூர்ந்து சொல்லமாட்டாயா? தேனினுமினிய உன மழலைச் சொற்களை என் காதுகளில் அள்ளித் தெளிக்கமாட்டாயா? உன் திருவாயில் ஊறும் அமுத மொழிகளைத் தாகம் படிந்த என்னுடைய செவிகளில் சொரியமாட்டாயா?—சொல்லேன்; வாயைத் திறந்து ஒரு வார்த்தை சொல்லேன்! — நீ யார், யார் நீ?

ஆஹா, இப்பொழுதுதான் எனக்குப் புரிந்தது. உன மௌனத்தைப் பார்க்கும்போது, உண்மையில் நீ ஓர் ஆணாக இருக்க முடியாது. நீ ஒரு பெண்! — அதிலும் அழகே உருவானவள். மலர்களின் மென்மையையெல்லாம் பிழிந்து உன் உருவத்தை வடித்திருக்கிறான் மலரவன்; குயிலின் குரலினையும், கிள்ளையின் மொழியினையும் கூட்டிக் குழப்பிக் குழலோசையாக உன் நெஞ்சில் பெய்திருக்கிறான். உன் உருவில் மென்மை இருக்கிறது; கனிவு இருக்கிறது; இனிமை இருக்கிறது. பெண்ணே, நீ யார்? உன் பெயர் என்ன?— பெயரும் உன் உருவத்துக்கேற்ற மாதிரி அழகாய்த்தான் இருக்க வேண்டும். அதையாவது கொஞ்சம் சொல்லேன்! ஏன் சொல்லமாட்டேன் என்கிறாய்? என் மீது கோபமா? கோபம் எதற்கு, கண்ணே? இத்தனை நாள் மறந்து விட்டிருந்தேனே என்றா? ஐயோ, நிச்சயமாக உன்னைப்பற்றி எனக்கொன்றும் தெரியாதே! தெரிந்தால் சும்மா இருப்பேனா? — என் ஜீவ மலரைக் கிள்ளி உன் செந்தாள்களில் அர்ப்பணித்து, குளிர் தேங்கிக் கமழும் உன செவ்விய திருவடி நிழலில் வீழ்ந்து கிடக்க மாட்டேனா? எழிலரசியே, நீ யார்? சொல்லேன்! சொல்லமாட்டாயா? சொல்லவே மாட்டாயா?

சரி; நான் சொல்லட்டுமா?— சொன்னால் கேலி பண்ண மாட்டாயே? உன் பேர்....வந்து...தூக்க குமாரி! சேசே, அதுவல்ல! வந்து ...துயில் குமாரி! ஊஹூம், இதுவும இல்லை. எல்லாம கர்நாடகமாகவே இருக்கிறதே! உன தெய்விக அழகுக்கு இதெல்லாம் பொருந்தாதே! என செய்வேன், சீக்கிரம் வரமாட்டேனென்கிறதே! பெண்ணே, பெண்ணே! கொஞ்சம் பொறு; இதோ, ஒரு நொடியில் யோசித்துச் சொல்லி விடுகிறேன.

ஆஹா, நினைவு வந்து விட்டது. உனது திரு உருவின் திருநாமம் துயிலினி! — ஆம், துயிலினியேதான்! ஒரு தரம் துயிலினி எனச் சுவைத்தால் உடல் இனிக்கும்; உள்ளம் இனிக்கும்; உயிர் இனிக்கும். துயிலினி, என் கண்ணே! இப்பொழுதாவது சொல்லேன், நான் சொன்னது உண்மைதானே?

மலர் முகமே!

ஏன் இந்த மௌனம், எதற்காக இப்படிப் பேசா மடந்தையாக இருக்கிறாய்? இன்னுமா என் மீது கோபம்? நான்தான் என உயிரையே உன் காலில் பணயம் வைத்துக் கெஞ்சிக் கெஞ்சி ஏற்றுக் கொள்ளச் சொல்கிறேனே — கொஞ்சம் தஞ்சம் கொடேன். வேண்டுமானால் இந்த முறை மன்னித்து விடு. அடுத்த முறை தவறும்போது கிஞ்சித்தும் என்னிடத்தில் பேசாதே; உன்னை

துயிலினி — அதிசயமான பெயர்தான்! துயிலினிக்குப் பேச நா எழவில்லை. வெட்கமோ, வேதனையோ, ஆத்திரமோ!"- தெரியாது. ஆனால் பாவம், விழி கெஞ்சிக் கொஞ்சிக் கேட்கிறது; இதயம் திறந்து பேசுகிறது!

வஞ்சித்துவிட்டேன் என்று என்னை உதறித் தள்ளி விட்டுப் போய்விடு; போயே போய்விடு! துயிலினி; என்னை மறக்காதே; என்னைப் புறக்கணிக்காதே!

என் இனிய உயிரே!

இப்பொழுதுதான் எனக்கு உண்மை விளங்கியது. இதுவரையில் எதையெதையோ பார்த்தேன்; எதையெதையோ நேசித்தேன்; எதையெதையோ காதலித்தேன்; எல்லாம் கானல் நீர் என்று இப்பொழுது தெள்ளெனத் தெரிந்து விட்டது. பார்த்துப் பார்த்து அலுத்து விட்டேன்; அலைந்து அலைந்து சலித்து விட்டேன்; தேடித் தேடிக் களைத்து விட்டேன். எல்லாம் மாயை; பசப்பு; பகட்டு; பகல் வேஷம்! இவையே நித்தியம் – நிரந்தரம் என்று எண்ணியெண்ணி என் வாழ்நாளையெல்லாம் வீணாக்கிவிட்டேன; என் பார்வையும் மூப்பு எய்தித் தள்ளாடித் தடுமாறுகிறது.

நான் இறுமாந்து செருக்குடன் துள்ளித் திரிந்த காலத்திலும் என்னை நீ மறக்காமல் துறக்காமல் அன்பைக் காட்டித் தாலாட்டினாய்; சீதளம் வழியும் சந்தனத் தென்றலை மேனியிலே வீசச் செய்தாய். என்னை அறவணைத்து ஆலிங்கனம் செய்தாய். என்னே உன் பெருமை! என்னே உன் தியாகம்! என்னே உன் கருணை!

எழில் ஓவியமே!

என் இதயம் கூப்பி வணங்குகிறேன். நீ யார், நான் யார்? நம் பந்தம் என்ன, சொந்தந்தான் என்ன? எந்தக் காலத்திலிருந்து நம் காதல் ஏற்பட்டது என்பதையாவது கொஞ்சம் உளம் கனிந்து விளக்கிச் சொல்லேன். அதைக் கேட்டாவது உள்ளம் குளிர்ந்து உயிர் குளிர்ந்து மூச்சு விடுகிறேன். மூன்று நாட்களாக அன்ன ஆகாரமின்றி வழிமேல் விழி வைத்து ஏங்கினேன் உன்னைத் தரிசிக்க. நீயோ அப்பொழுதெல்லாம் ஒதுங்கியே நின்று வேடிக்கை பார்த்துவிட்டு, நான் கொஞ்சம் அசரப் போனதும், போதை சொரிந்து இமைக் கதவுகளை மெல்லத் திறந்து உள் தாழ்ப்பாளிட்டுக் கொண்டாய். பொழுது விடியும் அருணோதயத்தில் ஓசைப்படாமல் நழுவி விழித்து விடுகிறாய். நானோ ஏமாந்து விடுகிறேன். ஏமாந்த சோணகிரியாக ஏங்கி ஏங்கி வினாடிக்கு வினாடி இறந்து பிறக்கிறேன்; பிறந்து சாகிறேன. பெண்ணே, கொஞ்சம் கருணை காட்டேன்; கொஞ்சம் பேசேன்!

இந்தச் சமயத்தில் ஒரு விஷயத்தை உன்காதில் போட்டு வைக்கிறேன்; கேட்டுக் கொள். ஆனால் நானே அந்த விஷயத்தை நினைந்து நினைந்து அழுவதா சிரிப்பதா என்று ஒன்றும் விளங்காதவனாய்த் திக்கித் திணறிக் கொண்டிருக்கி

உங்கள் அதிருஷ்டம் 1957க்கு

உங்கள் பெயரும், முழு விலாசமும் கொண்ட ஒரு தபால் கார்டில் ஏதாவது ஒரு புஷ்பத்தின் பெயரை எழுதி எங்களுக்கு அனுப்புங்கள். ரூ. 1-4-0-க்கு (தபால் செலவு தனி) வரப்போகும் 12-மாதங்களுக்கு நாங்கள் உங்களுக்கு எதிர்கால பலன் எழுதி அனுப்புகிறோம். வியாபாரத்தில் லாப நஷ்டம், உத்தியோக உயர்வு, உத்தியோக மாற்றல், விவாகம், குழந்தை பிறப்பு, சுக துக்கங்கள் ஆகியவை பற்றிய விவரங்களையும், இன்னல்களிலிருந்து பாதுகாத்துக் கொள்ளும் மார்க்கத்தையும் தெரிவிக்கிறோம்.

Shree Swami SATNARAIN JYOTISH ASHRAM
(U.M.) HOSHIARPUR (Pb.)

றேன். அதாவது: மாலை கழிந்து மதியம் புறப்பட்டு விட்ட நேரம். எங்கும் பூங்காற்று 'ஜிலு ஜிலு' வென்று வீசிக் கொண்டிருந்தது. மல்லிகை, முல்லை, மனோரஞ்சிதம் இதழ் விரிந்து, மணக்கும் வாசத்தை அலை அலையாகத் தவழ விட்டுக் கொண்டிருந்தன. அந்தச் சமயத்தில், நான் பஞ்சணை மெத்தையை விரித்து, ஜன்னலைத் திறந்து கதவை ஒருக்களித்து வைத்துவிட்டு மலர்ந்த உள்ளத்தை மார்பில் தாங்கிக் கொண்டு ஆர்வமுடன் – ஆவலுடன் – ஆதங்கத்துடன் உன் வருகையை எதிர்நோக்கிக் காத்துக் கொண்டிருந்தேன். அறையைச் சுற்றிலும் ஊதுவத்தியின் நறுமணம் 'கமகம' வென்று கமழ்ந்து வீசிக் கொண்டிருந்தது. வெள்ளைத் துகில் உடுத்து, மலர்க் குழல் மார்பிலும் தோளிலும் புரள, கதம்ப மலர்க்கொத்தைப் பூங்கரத்தில் பிடித்துப் புன்னகை அரும்பினாய்; செவ்விய பாதங்கள் மெல்லென எடுத்து வைக்கும் ஒவ்வோர் அடியும் 'கலீர், கலீர்' என ஒலிக்க ஒருக்களித்திருந்த கதவைத் திறந்து கொண்டு என்னை நோக்கி வந்தாய். உன் எழிலுருவை நோக்க நோக்க என் உயிரின் ஒளி மினனிப் பளிச்சிட்டு மேலே எழும்பிக் கொண்டே வந்தது; விழியோரங்களில் ஆனந்தக் கண்ணீர் ததும்பி அலைமோதியது. நான் இரண்டு கைகளையும் தூக்கி மலர் நகையோடு வரவேற்றேன். நீ "கண்ணா!" என்று குயிலோசையில் கூவிக்கொண்டே ஓடி வந்தாய். என் இதழ்கள் சிரித்தன; உன் செவ்விதழ்கள் முகமுன் கூறின. என் உயிர் மீது உன் உயிரைப் பெய்தாய். இரு உயிர்கள் ஓருயிராக மாறிய போது,

ஏதோ சத்தம் கேட்டது. நான் திடுக்கிட்டு எழுந்தேன். நீ எப்படியோ மறைந்து விட்டாய். பொங்கும் உள்ளத்தை அழுத்திப் பிடித்துக் கொண்டு கண்ணை அகல விரித்துச் சுற்றும் முற்றும் பார்த்தேன். உதய சூரியன் அரும்பியிருந்தான். அவனது பொன்னிறக் கிரணங்கள் மூடித் திறந்திருந்த கதவின் வழியாக உள்ளே புகுந்து என்னை மெல்லத் மெல்லத் தீண்டிக் கொண்டிருந்தன.

துயிலினி! எனக்கு ஒரே குழப்ப மாய்ப் போய் விட்டது. நான் என்ன கனவு கண்டேனு, அல்லது உண்மையிலேயே நீ நேற்றிரவு என்னிடத்தில் வந்து கொஞ்சிக் குலாவினுயா என்பது ஒன்றும் புரியாமல்பேயறைந்தவன் மாதிரி விழித்துக் கொண்டிருக்கின்றேன். துயிலினி, இதையாவது சொல்லேன். நேற்று நீ என்னிடத்தில் வந்து பேசினது உண்மைதானே? சொல்லேன், சொல்லேன்!

இதயத் தென்றலே!

உனக்கு இன்னுமா மனம் இறங்கவில்லை; இளகவில்லை? சற்றே என்னைப் பார்; என்னுடைய பரிதாப நிலையைப் பார். மனங் கனிந்து இரண்டொரு வார்த்தைகளை உன் பவள வாயிலிருந்து உதிர்த்து விட்டால் போதும், நான் பொறுக்கிக் கொள்ளுவேன். அவற்றை என் மனச் சிமிழுக்குள் பத்திரமாகப் பாதுகாத்து அனுதினமும் பூஜை புனஸ்காரம் செய்வேன். என்றென்றைக்கும் உன் கடைக்கண் பார்வைக்குத் தவம் கிடப்பேன். என் இதயப் பூங்காவில் பூத்துக் குலுங்கும் வண்ணப் பூக்களை ஒன்று சேர்த்துக் கோர்த்து மலர் மாலை தொடுத்து நாள்தோறும் உன் மலரடிகளுக்கு அணிவிக்கிறேன்.

வெண் தாரையே!

நீ என்னை நேசிப்பது நிச்சயம் என்ருல், காதலிப்பது சத்தியம் என்ருல், இப்பொழுதே இந்தக் கணமே மனம் திறந்து, உள்ளம் குழைந்து பேசிவிடு; பேசிவிடு; துயிலினி!

ஏன் இந்த நாணம்; ஏன் இந்த மௌனம்? ஒருவேளை, ஐயோ, நீ ஊமைச்சியா? ஊமைச்சி என்று தெரிந்தால் நான் கைவிட்டு விட்டு ஓடி விடுவேன் என்ரு இந்த நெடு மௌனம் சாதிக்கிருய்? அடி பைத்தியக்காரி! காதலுக்கு ஏது கண்ணும் வாயும் மூக்கும்? நீ எப்படியிருந்தாலும் எனக்கு ஒன்றுதான். என் காதல் தெய்விகம் வாய்ந்தது. அதை எந்தச் சக்தியாலும் அசைக்க முடியாது; அழிக்க முடியாது. ஊழிப் பிரளயமே வந்தாலும் அதை அழிக்கவே முடியாது. வான் இடிந்து விழுந்தாலும் அதை நசுக்க முடியாது. என்னில் நீயும், உன்னில் நானும் ஒன்ருக, ஒருருவாகச் சமைந்து விட்டோம். பயப்படாதே, துயிலினி, பயப்படாதே. துயிலினி! முறுவல் பூத்த முகத்துடன் நீ முண முணப்பது மானசீகமாகத் தெரிகிறது. நான் உன்னை ஊமைச்சி என்று சொல்லி விட்டேனே, அதற்காகச் சீறுகிருயா? தப்பு, துயிலினி, தப்பு! நான் சொன்னது தப்புதான்! ஒளி பொருந்திய உன் தெய்விக எழிலுக்கு நிச்சயமாக நீ ஊமையாய் இருக்க முடியாது. அப்படி என்ருல் 'பட்'டென்று ஒரு வார்த்தை பேசிவிடேன் துயிலினி! — ஒரே வார்த்தை! பேச மாட்டாயா? பேசவே மாட்டாயா, துயிலினி! துயிலினி!

என் வெண்ணிலவே!

கடைசியாகச் சாவை கையில் பிடித்துக் கொண்டு கெஞ்சிக் கெஞ்சி வேண்டிக் கொள்கிறேன். இன்றிரவு மட்டும் நீ என்னிடத்தில் வந்து பேசா விட்டால், நாளைக் காலை என்னைப் பார்க்கமாட்டாய்; உயிரிழந்த உடலைத்தான் பார்ப்பாய். இது சத்தியம். துயிலினி, என் அன்பே! நீ மனம் வைத்தால் என் வாழ்வை வளமாக்கலாம். நீ மறந்தால், நான் வீழ்வேன்; செத்துத்தொலைவேன்! துயிலினி! ஓ, துயிலினி! ★

ஜனவரி, 30

இந்நாட்டு ஆண்களும் பெண்களும் ஆங்கிலத்தை மட்டுமன்றி மற்ற உலக மொழிகளையும் படித்து, அவற்றிலுள்ள இலக்கியத்தைச் சுவைத்து போஸ், ரே, தாகூர் ஆகியவர்களைப்போல் இந்தியாவுக்கு மட்டுமன்றி, உலகத்துக்கே அறிவுப் பணி யாற்றலாம். ஆனல், எந்த ஓர் இந்தியனும் தன்னுடைய சொந்தத் தாய் மொழியை மறக்கவோ, மறுக்கவோ அல்லது அவமதிக்கவோ கூடாது.

—மகாத்மா.

ஜாதி ரோஜா

6. யார் இந்த முரளி...?

நல்ல பொழுதாக விடிய வேண்டுமே யென்று கற்பகாம்பாளைத் தியானித்து விட்டுப் படுத்துக் கொண்டாள் அழகி. நாம் ஒன்று நினைத்தால் தெய்வம் ஒன்று நினைக்கும் என்று சாதாரணமாகப் பேசிக் கொள்ளுவார்கள். ஆனால், அழகியைப் பொறுத்த வரையில் அவள் நினைத்ததற்கு அந்தப் பெண் தெய்வம் ஒன்றும் எதிர்ப்புக் காட்டவில்லை. ஒருவேளை, பெண்ணுக்குப் பெண் ஏற்படும் இன உணர்ச்சியோ, என்னவோ? அவள் பிரார்த்தித்துக் கொண்டதற்கு இணங்க, அடுத்த நாள்ப் பொழுது நல்ல பொழுதாகவே விடிந்தது.

வாரிச் சுருட்டிக் கொண்டு படுக்கையை விட்டு எழுந்தாள் அழகி. கண்களைத் துடைத்துக் கொண்டாள்; எதிரே பார்த்தாள். அவளுடைய மாமனார் சோமநாதன் கட்டிலிலே புரண்டு படுத்தார். அண்டிச் சென்றாள். அசதியும் ஆற்றாமையும் அவரிடம் இருந்தன. அவளது நெஞ்சு படபடத்தது.

படுத்திருந்த ஜமக்காளத்தை மடித்துப் போட்டாள். அழகேசன் விலாசத்தின் அந்தப்புரம் அவளை அழைத்தது. போனாள்; திரும்பினாள். இப்பொழுது, சுட்டும் விழிச் சுடரிலே அழகு கொழித்தது. நெற்றித் திலகத்தில் பக்தி கனிந்தது. 'தாயே, கற்பகாம்பிகை! என் மாமாவைக் காப்பாற்று', என்று தியானம் செய்தன அவளுடைய உதடுகள்.

சிங்காரத் தொட்டிலில் கண்வளரும் பச்சைக் குழந்தை தன்னை மறந்து சிரிப்பது மாதிரி, இளம் பரிதி செவ்விதழ்களைப் பிரித்துப் புன்னகை புரியத்தொடங்கியிருந்தான். ஞாயிறு போற்றதும்...!

அழகி, பூஜை அறையைத் தாண்டி மறுபடியும் கூடத்தின் உள்ளே நுழைந்தாள். இன்னமும் பெரியவர் கண் திறக்கவில்லை. அவர் உடம்பெல்லாம் வியர்வைத் துளிகள். சேலைத் தலைப்பினால் ஒத்தி எடுத்தாள். விசிறி அவள் கைக்குத் தாவியது.

"அம்மா, சுடுத்தண்ணி கொண்டாந்திருக்கேங்க, அம்மா." என்று செய்தி சொன்னாள் வேலைக்காரி வள்ளி. வெந்நீர்க் கோப்பையை ஸ்டூலில் இறக்கி வைத்து விட்டுக் கிழவரைப் பார்த்தாள்.

"அம்மா, ஐயாவுக்குக் காச்சல் விட்டுப் போச்சு போலேயிருக்குங்க," என்றாள் வள்ளி.

"நிஜமாகவா?"

"ஆமாங்க, வேர்வை வர ஆரம்பிச்சிட்டுதின்னா, அப்பாலே ஒண்ணும் பயமில்லைன்னு எங்க காவேரிக் கரைப் பாட்டி சொல்லுவாக!"

கிட்டத்தட்ட ஐநூறு ரூபாயை 'ஏப்பம்'விட்ட அவ்வளவு பெரிய வியாதியை வேலைக்காரி அவ்வளவு லகுவாக ஒட்டிவிடப் பார்த்தாள்.

ஏழையின் வாக்கு பொய்க்காமல் இருக்க வேண்டுமே யென்று நினைத்தாள் அழகி. சோமநாதனின் கட்டிலையடைந்து, "மாமா!" என்று மெல்லக் கூப்பிட்டாள். அடித்துப்போட்

டாற் போலக் கிடந்தார் அவர். பேச்சில்லை; மூச்சிருந்தது.

உள்ளும் புறமும் அவளுடைய கண்கள் அலைந்தன. டாக்டரைத் தான் அப்பொழுது அவள் எதிர் பார்த்துக்கொண்டிருந்தாள். முதல் நாள், ''இப்போது என்னாலான தைச் செய்கிறேன். முடிவு ஆண்ட வன் கையில், அம்மா!'' என்று சுந்தரவதனம் எச்சரித்ததை நினைவு சேர்த்துக் காட்டியது அபலை நெஞ்சம்.

'கடந்த இரண்டு மாசமாக இந்த டாக்டர் தானே என் நெஞ்சி லிருந்த பயத்தை விலக்கிக் கொண்டிருக்கிறார்! என்னுடைய பயத்தை ஒரு நாள் டாக்டரிடம் ஆதியோடு அந்தமாக விளக்கிச் சொன்னதைக் கேட்டதும், அவர் அப்படியே திகைத்து விட்டாரே!'

''அழகி அம்மா, உங்கள் கதை விசித்திரமாகத்தான் இருக்கிறது. அழகேசனைப்பற்றி நீங்கள் சொல் லும் கதையைக்கூட என்னால் அவ் வளவு தூரம் லேசில் நம்பிவிட முடியவில்லை. அதற்காக, உங்கள் பேச்சை நம்பமறுக்கிறேன் என்ப தாகத் தயவுசெய்து நினைத்துவிடா தீர்கள். தொட்டுத் தாலி கட்டிய உங்கள் கணவரிடமிருந்து நீங்கள் பாதுகாக்கப்பட உங்களுடைய மாமனார்தான் இப்போது முள் வேலியாக அமைந்திருக்கிறார் என்று சொல்கிறீர்கள். ஆகவே, பெரியவருக்கு எவ்விதமான குந் தகமும் வரலாகாது என்றும் ஆசைப்படுகிறீர்கள். நான் மூன்ற மவன். உங்களுடைய குடும்ப டாக்டர் என்ற உரிமை இருந்தா லும், உங்களது குடும்ப நோய்க்கு நாடி பிடித்துப் பார்த்து வைத்தி யம் செய்யும் உரிமை எனக்குக் கிடையாது; அது வேண்டவும் வேண்டாம். ஆனால் ஒன்று மட்டும் சொல்வேன். உங்கள் விருப்பப்படி, ஸ்ரீமான் சோமநாதன் அவர்களின் உடம்பு நலம் பெற்றுத் தேறச் செய்வதற்கு நான் பொறுப்பு...!' என்று மென்று விழுங்கிப் பதில் சொன்ன டாக்டர், நேற்று ஏன் அப்படி ஒட்டாமல் கொள்ளாமல் பதில் சொன்னார்?....மாமாவுக்கு அவர் கொடுத்த மருந்திலே யாரோ விஷத்தைக் கலந்து கொடுத்து விட்டிருப்பதாகச் சந் தேகப் பட்டாரே?....யார் செய்த சூழ்ச்சி அது? ஒரு வேளை...ஒரு வேளை...' என்ற வரம்புவரைதான் அவள் சிந்தை வேலை செய்தது. தொடர்ந்து கற்பனை செய்து பார்க்கத் திராணி பெற்ற சமயம், அவளுடைய மனக்கண்களின் விரிப்பிலே அழகேசனின் கம்பீர மான அழகுருவம் தெரிந்தது. கன்னச் சிவப்பு கண்களுக்கு இடம் மாறியது. உதட்டுச் சிரிப்பு உள்ளத்தை அழவைத்தது.

டெலிபோன் மணி 'ட்ரிங், ட்ரிங்!' என்று மூச்சுப் பிடிக்கச் சத்தம் போட்டது —வானத்து நில வைத் தன கையில் பிடித்துக் கொடுத்தால்தான், பிசைந்திருக் கும் சாதத்தை உண்ண முடியு மென்று அடம் பிடிக்கின்ற வித ரணை புரியாத பாப்பா மாதிரி.

அழகிக்கு நடந்து போகும் அள வுக்குப் பொறுமை இல்லை; ஓடி னாள். உடுத்துயிருந்த 'கிரேப் ஸில்க்' கால்களிலே பின்னிக் கொண்டது. சரிப்படுத்தினாள். ''ஹெல்லோ, யார் டாக்டர் ஸார் தானே பேசறது?...என்ன...இல் லீங்களா?...பின்னே யார்? யார், கஜேந்திரன் ஸாரா? ஆமாம், அழ கியேதான் பேசுகிறேன்....ஆமா, அழகியேதான்! அழகேசன்....ஓ, அவரையா கேட்கிறீர்கள்? மாடி யில் இருக்கிறாரென்று நினைக்கி றேன்...! சரி, அடுத்த வாரம் உங் களைச் சந்திக்கிறேன. இப்போது மனம் சரியாகயில்லை. மேலும், போனில் பேசுவதென்பதும் சரி யில்லை. நனறி, என் பேரில் நல் லெண்ணம் வைத்திருப்பதற்கு ரொம்ப ரொம்ப நனறி, ஸார்! ஆமாம், உங்களை சுசிலா அக்கா வீட்டிலேதான் நான் சந்திக்க முடி யும். வருகிற ஞாயிற்றுககிழமை காலையில் பத்து மணி சுமாருக்குச் சந்திக்கிறேன்....நன்றி!''

ரிஸீவரை 'ரெஸ்டி'ல் வைப்பதற்கும் மாடிப்படியிலிருந்து பூட்ஸ் ஒலி புறப்பட்டுத் தொடர்வதற்கும் கணக்காக இருந்தது.

அழகி எதிர்பார்த்தது நூற்றுக்கு நூறு சரி. அழகேசன்தான் அது; ஆம்; அது! அவளுடைய நெஞ்சில் தீப்பந்தம் காட்டினாற் போலச் சுட்டது. முதல்நாள் சம்பவத்தைக் கிளறினாள். 'அவருடைய அப்பாவின் நிலை கவலைக்கிடமாகயிருக்கிறதென்று டாக்டர் சுந்தரவதனம் சொன்னதைக் கேட்டு, அவர் ஏன் அப்படி அரசமரத்துப் பிள்ளையார் மாதிரி 'கப் சிப்' என்றிருந்தார்?'—சிவராத்திரியாகக் கழித்த அந்த விடியாத நீண்ட இரவைப் பற்றிய ஞாபகம் ஓடியது. அழகேசன் பவனத்திலே எரிமலை வெடித்த அதிசயத்தை, பூகம்பம் வாய் பிளந்த நிகழ்ச்சியை அங்கம் அங்கமாக, காட்சி காட்சியாக எண்ணலானாள். 'சூழ்ச்சி' என்ற நாலெழுத்து வார்த்தைதான் அவளது மனச்சாட்சியின் தளத்தில் நின்று அறக்கப்பறக்கக் குரல் தந்தது.

'பெற்ற தந்தைக்கே பிள்ளை துரோகமா? ஒரு சமயம், அவர்.... அவரேதான் மருந்தில் மாற்று மருந்தை அல்லது, டாக்டர் சொன்னதுபோல விஷத்தைக் கலந்து விட்டிருப்பாரோ?.... ஏன், எனக்கு மாமா பாதுகாப்பளிக்கிறாரே என்ற ஆத்திரமா? ஐயோ, என்ன கொடுமை இது! நெஞ்சிரக்கமற்ற பிண்டமா இவர்? இதயம் என்ற ஒன்றைப் படைக்கவே மறந்து விட்டானே ஆண்டவன்!'

மறுபடியும் ஓயாத ஒழியாத சிந்தனைக் குமைச்சல். அக்கினிப் பாளத்தில் கால் பாவி நின்றாள் அவள். சுட்டது, சுட்டது, சுட்டுக் கொண்டேயிருந்தது.

தேடி வந்த தெய்வமாக டாக்டர் தோன்றினார். ஓடிப் போய், "வாங்க, ஸார்!" என்று வரவேற்றாள். "வள்ளி, வள்ளி!" என்று கூவினாள். வேலைக்காரியைக் காணோம். மருந்துப் பையை வாங்கிக் கொண்டாள்.

டாக்டர் சோதனை செய்தார். அவருடைய கழுத்தில் தொங்கிய 'ஸ்டெதஸ்கோப்'பில்தான் தன்னுடைய உயிர் அடங்கி யிருப்பது போன்ற ஓர் உணர்வுடன் டாக்டரின் முகக்குறிப்பையே பார்த்தவாறு நின்றாள் அழகி.

டாக்டரின் உதடுகளில் சிரிப்பு உதித்தது. "அம்மா, நல்லவர்களின் நம்பிக்கை ஒருபோதும் வீணாவதில்லை. உங்கள் மாமா இனிப் பிழைத்துக் கொள்ளுவார்கள். நேற்றுச் செலுத்திய ஜெர்மன் ஊசி கைமேல் பலன் காட்டி விட்டது," என்றார்.

"என் உயிர் பிழைத்தது, டாக்டர் ஸார்!" என்றாள் அழகி. கண்கள் இரண்டினையும் மூடிக் கொண்டே இவ்வாறு சொன்னாள். அவள் விழிகளைத் திறந்தபோது, கண்ணீர் வெள்ளம் வழியத் தொடங்கியது.

வள்ளி காப்பி கொண்டு வந்தாள். டாக்டரிடம் நீட்டினாள். "அம்மா, சின்ன ஐயா வெளியூருக்குப் போயிட்டாங்க. முன்னாலே நடந்ததில்லே, ஜவுளிக் கடை கேசு, அது விசயமாம்!" என்றாள் அவள்—அழகியிடம்.

இந்தச் சேதி அழகிக்கு அதிர்ச்சியாக இருந்தது. "பெற்றெடுத்த தகப்பனாருக்கு உடம்புக்கு முடியலை. அதைக்கூட என்ன ஏதுன்னு கேட்காத பாவி மனுஷர் வெளியூர்ப் பயணம் வேறே வச்சிட்டாரே?" என்றாள் ஆத்திரத்தோடு.

அழகேசனின் நடவடிக்கைகள் அனைத்தும் மூடுமந்திரம்போலவே இருந்து வந்த விஷயம் அவளுக்கு இன்று நேற்றைய ரகசியமல்லவே!

சுந்தரவதனம் மருந்துப் பில்லைகள் அடங்கிய பொட்டலம் ஒன்றையும், கலக்கப்பட்ட தண்ணீர் மருந்து நிறைந்த சீசா ஒன்றையும் நீட்டினார். "இனி நானே பூட்டி வைத்துக் கொடுப்பேன், ஸார்," என்று கூறினாள் அழகி.

"அழகி, நான் செத்துப் போக மாட்டேன் அம்மா! உன்னை அழ விட்டுவிட்டு என்னைக் கூட்டிப் போகமாட்டான் எமதர்ம ராஜன். அவன் நல்லவனும்; நெஞ்சு உள்ளவனும்," என்று சொல்லிக் கொண்டே படுக்கையிலிருந்து 'விருட்'டென்று எழுந்தார் பெரியவர் சோமநாதன்.

"நீங்கள் எழுந்திருங்கள், மாமா. வெந்நீர் ஆறிவிட்டது. பல் விளக்குங்கள். காப்பி சாப்பிடலாம்," என்றாள் மருமகள்.

"அது சரி, அழகேசன் எங்கே அம்மா?"

"அவர் காலையில் எங்கேயோ வெளியூர் போய் விட்டாராம்!"

"தொலைந்து போகட்டும், பாவிப் பயல்! ....ம்....!"

"மாமா...."

"ஏனம்மா, உன் குரல் கம்முகிறது? உன் கழுத்திலே ஊசலாடுகிறதே அந்தத் தாலிக்கயிறு, அது உன்னை அனுதாபம் காட்டத் தூண்டுகிறதா? அவனுக்காக ஒரு துளி கண்ணீரைக்கூட விரயம் செய்யாதே, அழகி....! எல்லா நாடகமும் எனக்குப் புரிந்து விட்டது. இனி என் கண்ணிலே அவன் எப்படி விழிக்கிறானென்று பார்க்கிறேன்....ம், பாவிப் பயல்!"

அப்பொழுதுதான் அழகேசன் பவனத்தில் அமைதி தலைகாட்டியது போலிருந்தது. ஆனால், அதற்குள் புதுக் குழப்பமா?

டாக்டர் விடைபெற்றுச் சென்றவுடன், அழகி தன் மாமனாருக்கு வேண்டிய பணிவிடைகள் செய்வதில் முனைந்தாள். பதினைந்து இருபது நிமிஷங்கள் வரையிலும் கடமை செயலாற்றியது.

அன்றைய 'ஹிந்து' பத்திரிகையைப் பெரியவர் கையில் கொடுத்து விட்டு, 'சாப்பிட்டேன்' என்று பெயர் பண்ணிய கையோடு தன் அறைக்கு நடந்தாள் அவள்.

அழகியின் நெஞ்சிலும் நினைவிலும் நிம்மதி சில இழைகள் பின்னியிருந்தது. ஆனாலும், தனிமை அவளுக்குப் பயமாக யிருந்தது. விருந்து முடிந்ததும் வீடு சோபை தவிர்த்துக் காணப்படுமல்லவா அதுமாதிரி இருந்தது அவளுடைய அறை. தேர் திருநாள் நிறைவு பெற்றவுடன், காளி கோயில் கலகலப்பிழந்து காட்சியளிக்குமே, அதுபோன்றே விளங்கியது அவளது இருப்பிடம். இந்த மாற்றம் அவளுக்கே ஆச்சரியமாகக்கூட இருந்தது. பார்க்கப் போனால், அன்றுதான் அவளுக்குத் துளியாவது நிம்மதி கிடைத்ததென்று அர்த்தம். பெரியவரின் வாழ்க்கை ஜாதகத்தில் திடீர் மாற்றம் எதுவும் ஏற்படாமல், நல்ல பலனையே காணமுடிந்தது. அப்படியென்றால், ஏன் இந்தப் பரிவுணர்ச்சி? அழகேசன் வெளியூர் சென்று விட்டானே யென்றா? பூ.... நல்ல



வேடிக்கை! — அவளுக்கு நினைவு கூட்டிப்பார்க்கவும் சிந்தை இல்லை.

தனிமையைப் போக்கத் துணை நாடினுள் அழகி. பேசாத வீணையைத் தேடினுள். கடிதம் ஒன்று தட்டுப்பட்டது. பழைய கடிதம். அன்று தன் மாமனுருக்கு உடல் நலமில்லையென்று தன் கணவனை அழைக்க மாடிக்குப் போய்த் திரும்புகையில், பாதத்தில் தஞ்சம் அடைந்து பேசிய கடிதம் அது. இப்பொழுது பேசச் சொன்னல் மாத்திரம் பேசாமல் இருந்து விடுமா?

"திருவாளர் அழகேசன் அவர்களுக்கு,

முன்பின் அறிமுகமில்லாத ஒருவன் எழுதும் கடிதம் இது. ஆனலும், உங்களுடைய வாழ்க்கையில் அக்கறை கொண்டவன் எழுதுகிறேன். வியாழக்கிழமை பகல் பன்னிரண்டு மணிக்கு மவுண்ட் ரோடில் உள்ள 'ஹோட்டல் பூலோக சொர்க்க'த்திலே நாற்பத்தொன்பதாவது அறையிலே என்னைச் சந்தியுங்கள். சில ரகசியங்களை — உங்கள் வாழ்வு சுமுகமாக அமைவதற்கு நீங்கள் எச்சரிக்கையோடு கண்காணிக்க வேண்டிய மர்மச் சுழல்களை — உங்களுக்கு விளக்குகிறேன். ஆச்சரியமாக யிருக்கிறதா? மற்றச் செய்திகள் நம் சந்திப்பில் விளக்கப்படும்!

இப்படிக்கு,

முரளி."

அழகி தன் மனத்தைக் கேள்வி கேட்டாள்: 'ஆமாம், யார் இந்த முரளி? என் அத்தான் முரளியா இவர்? யாரைப் பற்றி என்ன ரகசியங்கள் அப்படித் தெரியுமாம் முரளி அத்தானுக்கு? ஒருகால், என்னை வஞ்சம் தீர்க்க அத்தான் முரளியும் இவர் மாதிரி ஏதாவது சதி நடத்தப் போகிருரா....? ஆ இன்றைக்குத்தானே வியாழக்கிழமை?'

அழகேசனின் கவனத்தைக் கவர்ந்து, பிறகு

நினைவுபடுத்த மறந்த அக்கடிதத்தை மடித்து மேஜை டிராயருக்குள் திணித்தாள் அழகி. அந்தப் பூலோக சொர்க்கததின் 'போன்' எண்ணைக் காண 'டெலிபோன் டைரக்டரி'யைத் தேடினாள். கிடைத்தது. ஏடுகளைப் புரட்டிப் பார்த்துக்கொண்டிருந்த போது, அவள் முன்னே அவளது அத்தான் முரளி நின்று கொணடிருந்தான்!

7. மாங்கல்யத்தின் உயிர்!

ஜெனரல் ஆஸ்பத்திரி 'லீவ் ரிஜிஸ்த'ரில் நர்ஸ் செந்தாமரையின் பெயரும் ஒன்ருகியிருந்தது. காலையில் அழகேசன் பவனத்திற்கு விஜயம் செய்தாள் அவள். தோழிகள இருவரும் ஒரு நிமிஷத்தைக்கூட வீணுக்கவில்லை. பேசினார்கள்; என்னவெல்லாமோ பேசினார்கள். பெண்கள் இருவர் சேர்ந்து விட்டால், பேச்சுக்குத் தானு பஞ்சம்? — ஒரு வரியில் சொன்னல், உலக உருண்டை அவர்களது உதடுகளுக்கிடையில் அகப்பட்டுச் சுற்றித் தீர்த்து விட்டது!

இரவு மணி ஏழு நாற்பது!

வான மங்கைக்குப் பிறைத் திலகம் எடுப்பாகத்தான் அமைந்திருந்தது.

'தமிழ்த்தொண்டு' மாத இதழில் வெளியான அழகியின் பரிசு நாவல் 'அந்தி நிலா'வைப் பாராட்டினாள் செந்தாமரை.

''ரொம்பவும் நன்றி.''

''அழகி, பார்த்தாயா, சொல்ல மறந்தே போனேன்.''

''என்ன, சுபச்செய்திதானே?''

''ஆமாம்!''

''செந்தாமரை தேவியாருக்குத் திருமணமோ?''

''பேஷ், பேஷ்! நான் மறந்து பல வருஷமாகிவிட்ட ஒரு விஷயத்தை நீ ஞாபகமூட்டுகிருயே? அழகி, நான் சொல்ல வாயெடுத்தது....ஆமாம், சுசீலா அக்காவுக்கு ஞாயிற்றுக்கிழமை வளைகாப்பு விழாவாம். வெகு விரைவில் நாமெல்லாம் ஒரு பிள்ளைக் கனியமுதுக்கு அன்பு முத்தங்கள் வழங்கப் போகிருேமாக்கும்!....''

''மிக மிக மகிழ்ச்சியான சேதிதான். அப்படியென்ருல், வருகிற ஞாயிற்றுக்கிழமை யன்றைக்கு நான் செம்புதாஸ் தெருவுக்கு வருகிறேன். நீயும் வந்துவிடு. அன்றைக்கே கஜேந்திரன் அவர்களையும் சந்திப்பதாகவும் ஒரு நாள் 'போனி'ல் தெரிவித்தேன். ஆக, எல்லாம் ஒன்று கூடுகின்றன — ஒன்றே ஒன்றைத் தவிர!''

''ஆமாம், அந்த ஒன்றுதான் எனக்கும் பெரிய குறையாகத் தோன்றுகிறது.''

''உன் கல்யாணத்தைப் பற்றித் தானே சொல்கிருய், தாமரை?''

''அல்ல, உன்னுடைய வாழ்க்கையில் வசந்தம் பண் பாட வேண்டுமே யென்பதைப்பற்றிக் குறிப்பிடுகிறேன்.''

''நீ சற்றுமுன் சொன்னயே, மறந்துபோன ஒரு விஷயமென்பதாக! அதையே திருப்பி அனுப்புகிறேன் உன்னிடம். அது என்னுடைய மறந்த தகவல் மட்டுமல்ல; எப்போதோ மறைந்துவிட்ட சம்பவமுங்கூட!''

''அப்படியென்ருல், உன்னுடைய எதிர்காலம்...?''

''முதலில் உன்னுடைய எதிர்காலத்தைக் கணி, தாமரை!''

''குதர்க்கம் பேசுகிருய்!''

''எங்களுக்கு — அதாவது கதை எழுதுபவர்களுக்குக் குதர்க்கம் தேவை. ஆனல், நோய் தீர்க்கும் மருந்து நீ. உனக்கு அது ஒப்ப மாட்டாது!''

''வேண்டாததைச் சொல்கிருய்!''

''நீயோ வேண்டாததைச் செய்கிருயே, செந்தாமரை!''

''உன் வாழ்க்கையை நிரந்தர மான சோக நாடகமாக மாற்றிக் கொள்ளப் போகிறுயா, அழகி?''

''உன் நாடகம் இன்பியலாக அமையட்டும். அதுவே எனக்குச் சந்தோஷம் தரும், தாமரை.''

''பெண்களுக்குத் தன்னலம் அதிகமென்று பேசுவார்கள். நீ விலக்கு விதி போலும்!''

இயற்கையின் பரிசோதனைக் கூடமாக வாய்த்திருந்த அமுதச் சூழலிலே, இருவரும் பேச்சைத் தொடராமல்—தொடர முடியாமல், ஒருவரை யொருவர் பார்த்தது பார்த்தபடியே இருந்தார்கள்.

மறுகணம், அழகியின் கற்பனை யில் காட்சி ஒன்று விரிந்தது. தன் அத்தான் முரளியும் தன் சிநேகிதி செந்தாமரையும் கையோடு கை இணைத்து, நெஞ்சோடு நெஞ்சு பொருத்தி, உறவோடு உறவு கூடிக் காட்டிய திருமணக்கோலம் அது. 'என்னுடைய சொந்தக் கனவுதான் பலிக்கவில்லை. எனக் காக இருந்த இடத்தை என் தோழிக்குக் கொடுப்பதில் எனக் குப் பெருமை மட்டுமல்ல, நிம்மதி யும் உண்டு. மண்ணும் விண்ணும் மலிந்திருப்போனே! இந்த ஒன் றையாகிலும் ஈடேறச் செய்ய மாட்டாயா?' என்ற அழகான சிந் தனையும் அவளைத் தன்வயப்படுத் தியது.

போன வாரம், அழகேசன் பவ னத்தில் அவள் முரளியைக்கண் டாளல்லவா? எதிர்பாராத அவ னுடைய வருகையினுல் அவள் அடைந்த அதிர்ச்சி மாறியதும், ''அத்தான்'' என்று அன்புப் பெருக்குடன் பேசி வரவேற்ருள். தன் அத்தானுடைய இதயம் அறிந்து, செந்தாமரையின் மனத் தைப் படித்துக்கொண்டு, அவ்விரு வரையும் தம்பதியாக்கத் திட்ட மிட்டாள். அதேசமயம், அழகேச னுக்கு வந்திருந்த அந்தக் கடிதத் திலே முரளி என்று பெயரிட்டிருந் தது நினைவில் மிதந்தது. 'அத்தான், நீங்களா இவருக்கு லெட்டர் போட் டீங்க?' என்று கேட்க வாயைத் தூக்கினுள். ஆனல் முரளியோ, பேயடித்தவன் போல பொலி விழந்து காணப்பட்டான். குடலைப் புரட்டும் ஏதோ ஒரு வாடையை யும் அவள் நுகர்ந்தாள். ''அழகி, பத்து ரூபாய் மாத்திரம் கொடுப் பாயா?.... அவசரமாகத் தேவைப் படுது,'' என்றுன் முரளி. அவள் கொடுத்தாள். அவன் நிற்கவில்லை; நிலைக்கவில்லை. மறைந்துவிட்டான். இந்த லட்சணத்தில் பேச நாழி ஏது? ஆனல், அவன் விடைபெற் றுச்சென்றதும், சிவப்புத்தொப்பி கள் சில வட்டமிட்டதை அறிந்த போது, முரளியும் ஒரு புதிராகவே தோன்றினுன். பாவம், அழகிக்கு ஓர் உண்மையைச் செந்தாமரை தெரிவிக்க வில்லை. ஒரு நாள், தாமரை, தன்தோழிக்கு நல்வாழ்வு தர அழகேசன் பவனத்திற்கு வந்தபோது, முரளி அங்கே ஓடி வந்து ஒண்டிக் கொண்டதையும், பிறகு போலீஸ் ஜவான்கள் இந்த மைனரைத் தேடி வந்ததையும், அவள் இல்லையென்று சொன்ன தையும், அழகியிடம் அம்பலப் படுத்தாமல் இருந்ததுதான் அந்த உண்மை.

படப் பிடிப்பிற்குத் தயாராகும் கதாநாயகி ஒளி விளக்குகளின் முன்பாக நிற்கும்போது, அவ ளுடைய சுந்தரவதனம் அழகு ஜோதியாக மின்னுவது இயற்கை. அம்மாதிரியே நிலவுப் பெண் காணப்பட்டாள்.

செந்தாமரை அழகியிடமிருந்து விடை பெற்றுச் சென்ருள்.

மேஜை விளக்கை ஏற்றிவிட்டு நாற்காலியில் உட்கார்ந்தாள் அழகி. அன்று படித்த கடுதாசி அவள் பார்வையில் ஏழாவது தவணையாகப் பதிவானது. 'வியா ழக்கிழமை ஹோட்டல் பூலோக சுவர்க்கத்திற்கு இவர் போயிருப் பாரா? ஊருக்குப் போன மனி தரைக் காணவில்லையே?.... வெளி யூருக்குத்தான் போனுரா, அல்லது பூலோக சொர்க்கத்திலேயே ஆழ்ந்து போய் விட்டாரா?'

என்னவோ, சென்ற சில நாட் களாக அவளுக்கு இல்லாததும்

அடுத்த இதழில்:

பேட்டி:

கொத்தமங்கலம் சுப்பு

*

தம்பிக்கு:

ஜி. உமாபதி

*

இலக்கியப் பட்டி மண்டபம்

ம. ரா. போ. குருசாமி

*

தொடர் கதைகள்:

வாடா விளக்கு

'மாயாவி'

ஜாதி ரோஜா

'பூவை'

*

கதை கதையாம்...!

பாப்பா உமா

'கார்த்திகை பாலன்'

*

சிறு கதைகள்:

அ. வேதாசலம்
எம். கே. சீனிவாசன்
க. இராமமூர்த்தி
கே. பொன்னம்மாள்
'கிருஷ்ணு', வேணி
சி. பி. மைதிலி

*

பிற பகுதிகள்:

ஏடெடுத்தேன் பாட்டெழுத!
ஏன் இந்தப் புனைபெயர்?
நான் விரும்பும் எழுத்தாளர்
உலகம் சுற்றினேன்!

பொல்லாததுமான நினைவுகள் எழுந்தன.

''அம்மா, யாரோ பூங்குழலி யாம்; உங்களைப் பார்க்கவேணு மாம்,'' என்று தூது வந்தாள் வள்ளி.

பூங்குழலியை அவள் சில வாரங் களுக்கு முன்னர் சந்தித்தாள். அவள் இப்போது குமரியல்ல; திருமணமானவள். இரட்டை உயிர் களை ஒருயிராக்கிக்கொண்டு விளங்குபவள்.

''அழகி, கபாலி கோயிலுக்கு வந்தேன். அப்படியே உன்னைப் பார்த்துப் போகலாமென்று ஆசைப்பட்டேன்.'' என்ருள் பூங் குழலி. அன்றைக்கு அழகியின் திருமணத்தின்போது, 'அம்பி கைக்கு அவள் எடுத்துப் போட்ட பூ நல்ல பூ!' என்று தத்துவம் பேசிய இதே பூங்குழலியின் வார்த்தைகள் காதுகளில் ஒலித் தன. அவளை உன்னிப்பாகப் பார்த்தாள் அழகி. வருணனைக்குக் கட்டுப்படாத அமைதியும் நிறை வும் அவள் முகத்தில் காணப்பட் டன. ஒரு பெண்ணின் கனவை நனவாக்கும் பொறுப்பில் பூரண பங்கு பெறுவது மணப்பந்தல் தான். ஆமாம், மெய்தான் போலும்! ஆனல் அழகி....!

''வேறென்றும் விசேஷம் இல் லையே?....''

''ஊஹ\^ம்... வந்து...''

''என்னம்மா, சொல்லு...வாய் ஓயாமல் அரட்டை யடிப்பவளா யிற்றே நீ?''

பூங்குழலி அமர்ந்திருந்த இடத்தி லிருந்து எழுந்து வந்து அழகியின் கழுத்தைப் பிடித்துக்கொண்டு எதிரே சுட்டிக்காட்டினுள். வானப் படுதாவில் இயற்கை ஓவியன் வரைந்த பாற்குடம் தெரிந்தது.

''சுட்டெரிக்கும் நிலவைச் சொல்கிருயா?''

''ஆமாம், இனி என்னைச் சுட் டெரிக்க முடியாது அந்த நில வால்...!''

''அப்படியா, பூங்குழலி?''

''ஆமாம்... இனி அந்த நிலவை நான் வீணாக்கமாட்டேன்; வீணாக்கவும் முடியாது....!''

''ஓஹோ, புரிந்து கொண்டேன்!'' என்று சிரித்தாள் அழகி. 'முதல் இரவு' விழாவுக்குப் பூங்குழலி தயாராகிக்கொண்டிருக்கின்றாளாம்...!

அழகியின் மனம் அழகேசன் பங்களாவில் இருந்த 'பள்ளியறை'க்குத் தாவியது. வாசனைத் திரவியங்கள் விளையாட வேண்டிய அவ்விடத்தில் வௌவால்கள் விளையாடின; பேய் பிடித்த அறை கண்ணீரை வரவழைத்தது.

''உன் வாழ்வு சிறப்படையப் பிரார்த்திக்கிறேன். குழந்தை பிறந்ததும் செய்தி அனுப்பு. என்னுடைய பரிசு ஒன்று காத்திருக்கும்...'' என்றாள் கதாசிரியை.

'கடமையைப் போற்றுதல் கணவனின் இயற்கை; அவனுக்காக வீட்டில் வாழ்பவள் மனைவி. அவனுக்குப் பல வகையிலும் துணையாக இருந்து உதவுபவள் அவள்.'

'நடக்கமுடியாத ஒன்றை—என்வரை நடக்க முடியாத ஒன்றை—அல்ல, என்வரை நடந்துகாட்டாத ஒன்றைப் பற்றி வேதாந்தம் பேசுகிறது இந்தக் குறுந்தொகை!' என்று ஆத்திரப்பட்ட அவள், அதைத் தூர வீசினாள்.

நினைவுக் குறிப்புப் புத்தகம் வந்தது. விடிந்ததும், கஜேந்திரனைச் சந்திக்க வேண்டுமென்று சொன்னது அது.

பூங்குழலி படியிறங்கிப் பிரிந்தாள். படி ஏறி வந்த டிரைவர், ''அம்மா, நம்ப சின்ன எஜமானரை மவுண்ட் ரோடிலே ஹோட்டலிலே யாரோ பிடிச்சு வச்சிருக்காங்களாம்....!'' என்றான்.

அபலையின் கழுத்தில் தொங்கிய மாங்கல்யம், 'விதி'யின் கழுமரத்திலே ஊசலாடிக் கொண்டிருந்தது.

அழகி, ''மாமா, மாமா!'' என்று அலறிப் புடைத்து ஓடினாள்!

(அண்மையில் நிறைவு பெறும்)

பூவை எஸ். ஆறுமுகம்

எழுதிய நவீனம்

வசந்த பைரவி

விலை அணா எட்டு

'உயிரோட்டமுள்ள வசன நடை, இடையிடையே மன ரம்யமூட்டும் வர்ணனைகள், சிந்தனைச் சிதறல்கள் ஆகியவை 'வசந்த பைரவி'க்குச் சுவையூட்டுகின்றன.'

—ஈழகேசரி

'பூவை எஸ். ஆறுமுகம் தமிழ் நாடு நன்கறியும் நல்ல கதாசிரியர். இந்நவீனத்தைச் சுவையுடன் எழுதியிருக்கிறார்.'

—சுதேசமித்திரன்

'இந்நூலில், ஆசிரியரால் படைக்கப்பட்டிருக்கும் ஷாஜிதா பாத்திரம் ஓர் ஒப்பற்ற அரிய சிருஷ்டி.'

—கலைமன்றம்

'தமிழர்கள் பெருமைப்படக் கூடிய அளவுக்கு ஒரு நல்ல நவீனம்!'

—சாட்டை

'நாவல் மதிப்பும் சரி, புத்தக மதிப்பும் சரி, இரண்டில் எதற்கானாலும் எட்டணா தாராளமாகக் கொடுக்கலாம்.'

—தினத்தந்தி

விவரங்கட்கு:

'உமா' — சென்னை-1

விமரிசனம் :

சக்கரவர்த்தித் திருமகள்

உமா பிக்சர்ஸார் ரசிக மகா ஜனங்களின் கவனத்தைத் திருப்ப இரண்டு உபாயங்களைக் கையாண்டிருக்கிறார்கள். ஒன்று படத்திற்குச் சூட்டப்பட்ட நாமகரணம்: 'சக்கரவர்த்தித் திருமகள்'. வெள்ளெழுத்துக்காரர்களுக்கு அல்லது அவசரக் குடுக்கைகளுக்கு 'ள்' என்ற எழுத்து 'ன்' ஆகத் தோன்றும்; உடனே விஷயம் புரிந்தவர்கள் ராஜாஜியின் படைப்பை நினைத்துக் கொள்ளுவார்கள். மற்றொன்று; கதாநாயகனின் பெயர்: 'உதய சூரியன்.' தேர்தலில் கவலைப்பட வேண்டியவர்களுக்கு இந்தப் பெயர் நினைவில் நிலைத்துவிடும். சக்கரவர்த்தித் திருமகனை நடிப்பவரோ, திரு எம். ஜி. ஆர். உட்குறிப்புக்கள் விளங்குகின்றனவா? வேடிக்கை...!

யார் வீட்டு மகாலக்ஷ்மி?
யார் இந்த மாதர்குல மாணிக்கம்?
— சௌபாக்கியவதி

இனி, படத்திற்கு வருவோம்.

கதையின் அமைப்பில் எவ்விதமான குறிக்கோளோ, படிப்பினையோ, புதுமையோ இல்லையென்றாலும், திரைப்படத்தின் கதை சுவையுடன் அமைத்துக் காட்டப்பட்டுள்ளது.

ஒரு சிக்கல் என்னவென்றால், இதில் பங்கு கொண்டுள்ள எம். ஜி. ஆர், எஸ். வரலட்சுமி, அஞ்சலி, வீரப்பா இந்த நால்வரில் ஒவ்வொருவருடைய பெயரையும் மறக்காமல் நினைவு வைத்துக் கொள்ளுவதென்பது அசாத்தியமே. ஒவ்வொருவரின் பகுதியும் தொட்டும் தொடாமலும் இருப்பதால், சினிமா பாஷையில், அவரவர்கள் தங்களுக்குக் கொடுத்திருக்கும் பாகத்தைத் திறம்பட நடித்து முடித்திருக்கிறார்கள் என்பதைத்தான் திரும்பிப் படிக்க வேண்டும். வரலட்சுமியை நீண்ட நாட்களுக்குப் பிறகு பார்க்கின்றோம்; திறமையையும் பார்க்க முடிகிறது. அஞ்சலி ஓரிடத்தில் கலாமோகனை ஆணுடையில் சூரியனைச் சந்திக்கும்போது, அவரது உடை விஷயத்தில் போதிய கவனம் செலுத்தப்பட்டிருக்க வேண்டும். வீரப்பா என்றால் வில்லன்தான்; ஒரே மாதிரியான நடிப்பு, சண்டை, குஸ்தி....!

எஸ். வரலட்சுமி சொந்தக் குரலில் பாடியிருக்கிறார்-திருப்தியாக. கு. சா. கி. அவர்களின் 'சொல்லாலே விளக்கத் தெரியலே' பாட்டும், கு. மா. பா. அவர்களின் 'ஸ்ரீராமன் மீதிலே பேராசை மீறியே' பாடலும் இருதரப்பிலும் போற்றப்பட வேண்டியவை. கண்ணகி இளங்கோவன் அவர்களைக் கேட்கிறோம்; மகிழ்ச்சி ஏற்படுகிறது.

டைரக்டரின் பெயரை நினைவுபடுத்தும் ஒன்றிரண்டு கட்டங்களையாவது காட்டியிருக்க வேண்டும்!

ஸ்ரீ திருவேட்டீஸ்வரர் சபையினர் கொண்டாடிய பொங்கல் விழா இசை நிகழ்ச்சியில் பங்கு கொண்ட பின்னணிப் பாடகர் — பாடகிகள் அமர்ந்திருக்கிறார்கள்.

நாடக உலகம் :

ரூபவாணி

செயின்ட் மேரீஸ் ஹாலில், பேபிகள் சாந்தா, கஸ்தூரியின் 'ஜல் ஜல்' ஒலி ஆரம்பித்துவைத்த ஓர் அமெச்சூர் நாடகத்தை கஸ்தூரி பிலிம்ஸ் அதிபர் திரு சுப்பராமனும் திரைப்பட வசனகர்த்தா திரு பி. எக்ஸ். ரங்கசாமியும் புகழ்ந்து பேசினார்கள்.

ரூபவாணி! அழகான பெயர். நாடகத்தில் பங்கு கொண்டவர்களில் கண்ணன், நடராஜன், சாந்தி, கார்ட்டூன் லிங்கம், வேணுபாய் முதலானோர் திரைப்படத்திலும் 'முகத்தை'க் காட்டியிருக்கிறார்கள். லீலாவின் நடிப்பு கச்சிதமாக யிருந்தது. கதாநாயகனைப் பாகமேற்ற எஸ். எஸ். நடராஜனும் பாகத்தை உணர்ந்து நடித்தார். கண்ணன, சாந்தியும் நாடகத்திற்கு உயிர் கொடுத்தார்கள். ரௌடி ரங்கனாக நடித்த கார்ட்டூன் லிங்கம் ரசிகர்களின் பாராட்டுக்குப் பாத்திரமானார். நீதிபதியாக 'வேஷம்' போட்ட பி. வாசுதேவ், சாமியாராகத் தோன்றிய லிங்கபூஷணம் இவர்களையும் மறக்கக் கூடாது.

சாதாரணமான கதைக்கு உயிருள்ள வசனங்களை எழுதியவர் தஞ்சை நா. ல. பதி. கவிஞர்கள் சுரதா, புகழேந்தியின பாடல்களும் கணீரென்று ஒலித்தன.

— 'பைரவி' ○

வரப்பெற்றோம் :

சினிமா டைரி 1957

திரையுலகத்தைப் பற்றின முழு விவரங்களுடன் வெளியிடப்பட்டிருக்கும் இந்த டைரி பயன்படக் கூடிய வகையில் அமைந்திருக்கிறது.

வெளியிட்டோர்: சுதர்ஸன் பப்ளிகேஷன்ஸ், சென்னை-4. விலை ரூ. 2.


மாதவிடாய் தாமதமா?
பரபரப்பு மற்றும் கவலையை அறவே ஒழியுங்கள்.
இயற்கை தவறிவிட்டால்
பிரசித்தமான
தேவி பில்ஸ்களை உபயோகியுங்கள்
இதை உபயோகித்த, எண்ணற்ற நபர்களால் இந்தியாவிலும், வெளி நாடுகளிலுமிருந்து ஏராளமான நற்சாக்ஷிப் பத்திரங்கள் வந்துள்ளன.
DEVI Pills
INDICATED IN DELAYED SCANTY PAINFUL & ARRESTED MENSES
SEENU & Co.
Devi Pills
"தேவி பில்ஸ்" முக்கியமாக
தாமதிக்க, குறைவான, வலியுடன் கூடிய மற்றும் தடைப்பட்ட மாதவிடாய், அத்துடன் அமினோரியா, டிஸ்மெனோரியா, லூகோரியா இவைகளுக்கு மிகச் சிறந்தது.
1. முதிர்ந்த அனுபவத்தின் தயாரிப்பு.
2. எல்லா சந்தர்ப்பங்களிலும் துரிதமாக திறமையாக குணமளிக்கிறது.
3. எந்த நிலைமையிலும் ஆரோக்கியத்திற்கு தீங்கு விளைவிக்காது.
எங்கும் கிடைக்கும்
விலைகள் முழு கோர்ஸ் 28 மாத்திரைகள் ரூ. 11/- அரை கோர்ஸ் 14 மாத்திரைகள் ரூ. 6-8-0 (வி.பி.பி. தனி)
GRAMS "ORCAS" (ESTD. 1946) PHONE: 55357.
SEENU & CO., 28 THANDAVARAYA GRAMANI ST., MADRAS-21.
BRANCH - SINGAPORE-8. AGENTS - NEW COLOMBO MEDICAL STORES, 82, MAIN STREET, COLOMBO-11.
(ADVT. PERMITTED UNDER G.O. MS. NO. 1121 HEALTH)

197219

Pilot
WORLD FAMOUS
PILOT INK
FOUNTAIN PEN
AND INK
THE PILOT PEN CO., (INDIA) LTD.
OFFICE: CATHOLIC CENTRE, ARMENIAN ST, MADRAS-1. FACTORY: RED HILLS. MADRAS.

ஆஸ்த்மாவா?
ஒரு நொடியில் அதை ஒழிப்பது
மல்டிமிக்ஸ்
தாராளமாக மூச்சு வரச் செய்து,
தொண்டைக்கு இதமாக இருந்து,
மூச்சடைப்பையும் இருமலையும்
போக்குகிறது.
MULTIMIX
இந்தோ-ப்ரெஞ்ச் பார்மஸூடிகல் கோ.,
காதோலிக் ஸென்டர், மதராஸ்-1

மாய மோதிரம்! ரொக்கப் பரிசு ரூ. 1,000!

(அபூர்வ சக்தியுடையது)

இந்த மோதிரம் மாயா ஜாலத்தாலும், மெஸ்மரிஸ சக்தியாலும் தயாரிக்கப்பட்டது. யாராவதொருவர் இம்மோதிரத்தை அணிந்து கொள்ளுங்கள்; உங்கள் காரியங்களில் வெற்றியோ, அல்லது, உங்களிடம் பணிவோ ஏற்படச் செய்யும். உங்களை எல்லாவித ஆபத்துக்களிலிருந்தும் இது காப்பாற்றும். துர்தேவதைகள் உங்களிடம் அணுகாது. இந்த மாய மோதிரத்தை அணிந்து கொண்டவர்களிடம் ஆண், பெண் அடங்கி நடப்பார்கள். இவர் பெயரைக் கேட்டாலே நடுங்குவர். காணமற் போனவர்களைக் கண்டறியலாம். நீங்கள் காதலில் வெற்றியும், கோர்ட்டு வழக்குகளிலும், உத்தியோக உயர்விலும், அதிகப் பணம் சம்பாதிப்பதிலும் வெற்றி யடைவீர்கள். சுருங்கச் சொன்னால் இம் மோதிரம் ஒரு பாதுகாப்பாளனைப் போன்றது. ஒரு முறை பரீக்ஷியுங்கள். முதல் இரவிலேயே பலன் காண்பீர்கள். இதன் விலை ரூ. 1-15-0. ஸ்பெஷல் ரூ. 3-0-0. ஸ்பெஷல் அதிக சக்தி வாய்ந்தது ரூ. 3-15-0. தபால் செலவு தனி. பலன் இல்லையென்றால் பணம் வாபஸ் செய்யப்படும்.

Principal: THE BENGAL MESMERISM HOUSE

(U M.) NAKODAR, (P. B)

அச்சிட்டு வெளியிடுபவர், ஆசிரியர்: ஜி. உமாபதி, உமா பிரிண்டர்ஸ்,
4/32, தாதா முத்தியப்பன் தெரு, சென்னை-1 (தமிழ் நாடு) போன்: 2200.


அன்னையின் உற்ற தோழி
ஐயோ பாவம்! குழந்தைக்கு மறுபடி சளிப்பு
அச்...ச் அச் அச்.. அச..
நல்ல முடக்கு வாதம்! வலி தாங்கமுடியவில்லை! இன்றைக்கு ஆபீஸுக்குப் போனாற்போல் தான்.
அம்மா! என் கால் சுளுக்கிண்டுடுத்தே. இன்னிக்கி எப்படி மாட்ச் ஆடுவேன்.
டாக்டரின் அறையில்
...ஆமாம். அம்மா! தலைவலிக்கு மட்டுமல்ல. லிட்டில்ஸ் ஓரியண்டல் பாம், சுளுக்கு, பிடிப்பு, வாதம் மற்றும் எல்லா வலிகளுக்கும் மிகச்சிறந்தது சளிக்கும், இருமலுக்கும், இணையற்ற நிவாரணி நீங்கள் எப்பொழுதும் கைவசம் வைத்திருக்க வேண்டும்.
சில நாழிகைக்குப்பின்
ஓரியண்டல் பாம் தான் உங்களை இவ்வளவு சீக்கிரம் குணப்படுத்தியது.
ஆமாம்; நான் ஆபீஸுக்குக் கிளம்பியாச்சு! இலையைப்போடு
நானும் கூட இன்றைக்கு மாட்சில் சக்கை போடு போடப் போகிறேன் அப்பா!
ஒவ்வொரு வீட்டிலும் லிட்டில்ஸ் ஓரியண்டல் பாம் அவசியம் இருக்க வேண்டும்
ORIENTAL BALM
லிட்டில்ஸ்
ஓரியண்டல் பாம்
எல்லா சளி, வலி, நோவுகளுக்கும்